# புதிய ஜனநாயகம்

டிசம்பர் 2016
ரூ. 15.00




## மோடி வித்தை :

# உங்கள் பணம் அம்பானி பையில்!

# ஆபத்பாந்தவா... கருப்புப் பண இரட்சகா...!

சுவிஸ் வங்கி என்ற ஒன்று உருவாக்கப்படுவதற்கு முன்னரே, பாரதத்தின் மன்னர்களும் புரோகிதர்களும் உருவாக்கிய சுவிஸ் வங்கிகள்தான் கோயில்கள்.

பெண்கள் ஐயப்பன் கோயிலில் நுழைவதை பகவான் அனுமதிக்க மாட்டார். பார்ப்பனரல்லாதவர்கள் கருவறைக்குள் நுழைவதையும் அவர் அனுமதிக்க மாட்டார். இருப்பினும் பணத்தைப் பொருத்தவரை பகவான் பேதம் பார்ப்பதில்லை. கருப்போ வெள்ளையோ எந்தப் பணமானாலும் அது தனது உண்டியலுக்குள் நுழைவதை அவர் தடுப்பதில்லை.

தீண்டாமையை மிகவும் கடுமையாக கடைப்பிடித்த கேரளத்து நம்பூதிரிகள் கூட, பெண்கள் விஷயத்தில் தீண்டாமையைப் பார்த்ததில்லை என்பார்கள். அது போலத்தான் இதுவும்.

ஐநூறும் ஆயிரமும் செல்லாது என்று மோடி அறிவித்த மறுகணமே நகைக் கடைகளில் கூட்டம் அலைமோதியது நமக்குத் தெரியும். கூட்டம் அலைமோதிய வேறு இரண்டு இடங்கள் உண்டு. ஒன்று கூகுள். இன்னொன்று கோயில்.

கருப்பை வெள்ளையாக்குவது எப்படி என்று கூகுளில் தேடிய தேச பக்தர்கள் குறித்த புள்ளி விவரம் சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. இதில் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பிடித்தவர்கள் குஜராத்திகள். மோடி மூன்று முறை முதல்வராக இருந்து வளர்ச்சியையும் நல்லொழுக்கத்தையும் நிலைநாட்டியதாக சொல்கிறார்களே, அதே குஜராத் மாநிலம்தான்.

இரண்டாவது இடம், மதுராவில் உள்ள கிருஷ்ணன் கோயில். பத்து லட்சம் ரூபாய் கொடுத்தால், ஐம்பது லட்சத்தை வெள்ளையாக மாற்றித் தருவதாக அந்தக் கோயிலுடைய பார்ப்பனப் பூசாரி பேரம் பேசுவதை, ஏ.பி.பி. தொலைக்காட்சி ரகசியக் காமெராவில் படம் பிடித்து ஒளிபரப்பியது. இந்த கிருஷ்ண பரமாத்மா வேலை இந்தியா முழுவதும் நடந்திருக்கும். படம் பிடிக்கத்தான் ஆளில்லை.

கர்நாடகாவிலுள்ள எண்ணற்ற மடங்களில் ‘‘இன்று ஒரு கோடி கொடுத்தால் கொஞ்சநாள் கழித்து அது 50 லட்சமாக திருப்பித் தரப்படும்’’ என்று கூவி அழைக்காத குறையாக வியாபாரம் நடக்கிறதாம். கேரளாவில் சோட்டாணிக்கரை பகவதி கோயிலில், ஐநூறு ஆயிரம் நோட்டுகளை வாங்கிக்கொண்டு அம்மனின் ‘‘திரு’’ உருவம் பொறித்த தங்க டாலர்கள் 8-ஆம் தேதி இரவு ஜரூராக விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. விசயம் ஊர் சிரித்து விட்டதால், கோயில் நிர்வாகத்திடம் விளக்கம் கேட்டிருக்கிறதாம் வருமான வரித்துறை.

இது மட்டுமல்ல; ஐநூறு, ஆயிரம் செல்லாது என்ற அறிவிப்பு வெளியான திலிருந்து நாடு முழுவதும் உள்ள பிரபல கோயில்களின் உண்டியல்கள் நிரம்பி வழியத் தொடங்கிவிட்டன. சென்னை தி.நகரில் உள்ள திருப்பதி தேவஸ்தான கோயில் உண்டியலில் வழக்கமாக மாதம் ரூ.40 இலட்சம் வசூலாகுமாம். நவ. 8-க்குப் பின் பதினைந்தே நாட்களில் சுமார் 2 கோடி ரூபாய் வசூலாகியிருக்கிறது. ஒரிஜினல் திருப்பதி கோயிலில் வழக்கமாக அன்றாடம் ரூ.3 கோடி வசூலாகும் இடத்தில் ரூ.6 கோடி வசூலாகிறதாம். ஷிர்டி சாயிபாபா கோயில், மும்பை சித்தி விநாயகர் கோயில், குஜராத் சோம்நாத் கோயில் உள்ளிட்ட எல்லா பிரபல கோயில்களிலும் பண மழை பொழிகிறது.

‘‘செல்லாத ஐநூறு, ஆயிரத்தை பக்தர்கள் உண்டியலில் போடுவதைக்

பத்து இலட்ச ரூபாய் கமிசனாகக் கொடுத்தால், ஐம்பது இலட்ச ரூபாயை வெள்ளையாக மாற்றித்தரும் புரோக்கர் கூடமாக மாறிய உ.பி.மதுராவில் உள்ள கிருஷ்ணன் கோவில்.





தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

# நாளை, ஜனநாயக உரிமைகளும் செல்லாக்காசாகும்!

ஒரு மோடி வித்தைக்காரனைச் சுற்றிக் கூடியிருக்கும் கூட்டத்தின் மனநிலை என்ன? பாம்புக்கும் கீரிக்கும் சண்டை ''விடுவான்'' என்ற நம்பிக்கை கொஞ்சம், ''விடமாட்டான்'' என்ற அவநம்பிக்கை கொஞ்சம், ''கலைந்து போனால் ரத்தம் கக்கி செத்துவிடுவாய்'' என்ற மிரட்டல் காரணமாக அச்சம் கொஞ்சம், அறிவு பூர்வமான சிந்தனை என்பது மட்டும் பூச்சியம் – இதுதான் அந்தக் கூட்டத்தின் மனநிலை. செல்லாத நோட்டு அறிவிப்பு விசயத்தில் நாட்டு மக்கள் ஏறத்தாழ இந்த மனநிலையில்தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

நவம்பர்-8 முதல் இதுவரை 50-க்கும் மேற்பட்ட திடீர் அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. எந்தவித முன்யோசனையும் இல்லாமலும், தான்தோன்றித்தனமாகத்தான் இந்த அரசு செயல்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள இந்த அறிவிப்புகளே போதுமானவை. இருப்பினும் ஒரு முட்டாளின் உளறலுக்குப் பொழிப்புரை எழுதி, அவனைக் கவிஞன் ஆக்கிய புலவர் பெருமக்களைப் போல, கிரிமினல்தனமும் முட்டாள்தனமும் சரிவிகிதத்தில் கலந்த மோடி அரசின் இந்த நடவடிக்கையைத் ''திட்டமிட்ட காய் நகர்த்தல்'' என்றும் கருப்புப் பண முதலைகளைத் திணறடிக்கும் நடவடிக்கை என்றும் கொண்டாடுகின்றனர் பா.ஜ.க.வின் ஊடக கூஜாக்கள்.

மோடியின் சார்பாகப் பேசுபவர்களின் வாதமுறையைக் கவனித்துப் பாருங்கள். மோடியின் 8-ஆம் தேதி அறிவிப்பு பற்றி எங்களுக்கும் தெரியாது, உங்களுக்கும் தெரியாது. அவர் அடுத்து என்ன செய்யப்போகிறார் என்பதும் உங்களுக்கும் தெரியாது, எங்களுக்கும் தெரியாது. ஆனால், அவர் ஒரு திட்டத்தோடு செயல்படுகிறார்; நம்புங்கள். நல்லகாலம் வருகிறது என்கிறார்கள், மோடியின் ஆதரவாளர்கள். மோடியின் திட்டம்தான் என்ன?

2.5 இலட்சத்துக்கு மேல் கணக்கில் காட்டாத பணம் இருந்தால், அதற்கு 200% அபராதம் விதிக்கப்படும் – இது மோடியின் செல்லாத நோட்டு அறிவிப்பு வந்ததற்கு மறுநாள் வந்த அறிவிப்பு. ''கருப்புப் பணம் வைத்திருப்பவர்கள் வழக்கமாக கட்டவேண்டிய 30%-க்கு மேல் 20% கட்டிவிட்டால் போதும், எப்படி சம்பாதித்த பணம் என்ற கேள்வியே கேட்க மாட்டோம்'' என்பது தற்போது மோடி கொண்டு வந்திருக்கும் சட்டத்திருத்தம். அதாவது, ''கருப்பு பணத்தை ஆளுக்குப் பாதியாக பிரித்துக் கொள்ளலாம்'' என்று தேசவிரோத சக்திகளோடு டீல் பேசியிருக்கிறார் மோடி. அடுத்த சில நாட்களிலேயே, ஜன்தன் திட்டத்தில் ஏழைகளின் பெயரில் பணம் போட்டால் உள்ளே தள்ளிவிடுவேன் என்று உதார் விடுகிறார்.

மோடியின் இந்த கேலிக்குரிய நாடகத்தை, மக்கள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. வாக்களித்தபடி வேலை வாய்ப்பையோ, தொழில் வளர்ச்சியையோ உருவாக்க முடியாமல் தோற்றுப்போன மோடி, கருப்புப் பணம் என்ற மாயமானின் பின்னால் மக்களை ஓடவிட்டிருக்கிறார். வேலைவாய்ப்பைக் குறைப்பதும், சிறுதொழில்களை அழிப்பதும், பண முதலைகளின் கையில் மென்மேலும் செல்வம் குவியுமாறு செய்வதும், ஏழைகளைப் பரம ஏழைகளாக்குவதும் எந்தக் கொள்கையோ – அதுதான் கருப்புப் பணத்தையும் உருவாக்குகிறது. அந்தக் கொள்கைதான் மோடியின் கொள்கை. சாதாரண மக்களைக் கழுத்தைப் பிடித்து வங்கிக்கும், பிளாஸ்டிக் அட்டைக்கும், கைபேசி வழியான பரிவர்த்தனைக்கும் தள்ளுவதன் மூலம், அவர்களுடைய பணத்தையும், தொழிலையும், எதிர்காலத்தையும் அம்பானி, அதானி முதலிய தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் கையில் ஒப்படைக்கிறார் மோடி.

இந்த உண்மை புரியாத காரணத்தினால், ஊமைக் குமுறலுடன் வங்கிகளின் வாசலில் வரிசையில் நிற்கிறார்கள் மக்கள். கோடிக்கணக்கான மக்களின் பொதுக்கருத்தைத் தன் விருப்பத்துக்கேற்ப ஒரு பாசிஸ்டால் வளைக்க முடிவது, ரூபாய் நோட்டைச் செல்லாது என்று அறிவிக்கும் பிரச்சினை அல்ல, மக்களின் ஒப்புதலுடன் ஜனநாயக உரிமைகள் இனி செல்லத்தக்கவை அல்ல என்று அறிவிக்கப்படுவது தொடர்பான பிரச்சினை.

●


புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 32 இதழ்: 2

டிசம்பர் 2016

தனி இதழ்: ரூ. 15.00

ஆண்டு சந்தா: ரூ.180.00

வடிவமைப்பு : மு.துரை



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:

puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

## மோடி வித்தை :

# உங்கள் பணம் அம்பானி பையில் !

கார்ப்பரேட் முதலாளிகளின் இலாபத்திற்காகப் பொதுமக்களின் கையிருப்பை, சேமிப்பை வங்கிகள் வழியே களவாடவும், அவர்களின் நுகர்வு உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்புக்கு உட்படுத்தவும் செய்யப்பட்ட ஏற்பாடுதான் பணமதிப்பு நீக்க நடவடிக்கை.

கருப்புப் பணத்தை அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கட்டுக் கட்டாகக் கட்டி இரும்புப் பெட்டிக்குள் போட்டு பூமிக்கடியில் புதைத்து வைத்திருப்பதாக திரைப்படங்கள் ஒரு மூடநம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கின்றன. மத நம்பிக்கையைப் போன்ற இந்த மூடநம்பிக்கைதான் மோடியின் மோசடிக்கு மூலதனம்.

மோடி ஆட்சிக்கு வந்தால் கருப்புப் பணத்தைக் கைப்பற்றி ஒவ்வொரு குடிமகனின் வங்கி கணக்கிலும் 15 இலட்சம் போடுவார் என்று மோசடியாக வாக்குறுதி அளித்தார்கள். “எங்கே பணம் என்று கேட்டதற்கு, அது சும்மானாச்சுக்கும் எலெக்சனுக்காக சொன்னது” என்றார் பா.ஜ.க. தலைவர் அமித் ஷா. வெளிநாட்டுப் பணத்தைக் காட்டி ஏமாற்றியவர்கள் இப்போது உள்நாட்டுப் பணத்தைக் காட்டி ஏமாற்றத் தொடங்கியிருக்கிறார்கள்.

மேக் இன் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, ஸ்டாண்ட அப் இந்தியா, டிஜிட்டல் இந்தியா, ஸ்வச் பாரத் என்று மோடி அறிவித்த திட்டங்கள் அனைத்தும் வெறும் பஞ்ச் டயலாக்குகளே என்று அம்பலமாகிவிட்டன. இந்தச் சூழ்நிலையில் தனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ள வழக்கமான தந்திரத்தைப் பயன்படுத்துகிறது பா.ஜ.க.

பா.ஜ.க. எப்படி ஆட்சிக்கு வந்தது? இராமன் அயோத்தியில் தான் பிறந்தான். எனவே, மசூதியை இடித்துக் கோயில் கட்டியே தீருவோம் என்றனர். இதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கின்றதா? அது மக்களிடையே விதைக்கப்பட்ட ஒரு மத நம்பிக்கை. அந்த நம்பிக்கையை வைத்து தேசம் முழுவதையும் இரண்டு கூறுகளாகப் பிளந்து, இந்து மதவெறியைத் தூண்டித்தான் ஆட்சிக்கு வந்தார்கள்.

இதுதான் தேசம் சந்திக்கும் முதன்மையான பிரச்சினை என்று ஏதாவது ஒரு பிரச்சினையை அவர்கள் எழுப்புவார்கள். அதுகுறித்து ஆம், இல்லை என்று விவாதம் நடக்கும். மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கான உண்மையான காரணம் அதில் மறைக்கப்பட்டுவிடும். அன்று இராம ஜென்ம பூமி, இன்று கருப்புப் பணம்.

மோடியின் ஸ்வச் பாரத்துடன் இதை ஒப்பிடலாம். திடீரென்று மோடி துடைப்பத்துடன் கிளம்பினார். உடனே ஷாருக் கான், கமலஹாசன் உள்ளிட்ட எல்லா நடிகர்களும் துடைப்பத்தை எடுத்தார்கள். இந்தியா தூய்மையாகி விட்டதா?

இந்தியாவின் தலைநகரத்தில் பிள்ளைகளை வீட்டை விட்டு வெளியே விடவேண்டாம் என்று அறிவிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. காரணம், சுற்றுச்சூழல் மாசு. கார்கள், வாகனங்கள் உருவாக்கிய புகையை, ஆலைகள் உருவாக்கிய புகையை எவனாவது துடைப்பத்தை வைத்து

ஒரு சட்டவிரோத ஆட்சிக் கவிழ்ப்பு போல பணமதிப்பு நீக்க நடவடிக்கையை எடுத்த மக்கள் விரோதிகள் (இடமிருந்து) பிரதமர் நரேந்திர மோடி, பொருளாதார விவகாரங்களுக்கான செயலர் சக்திகாந்த தாஸ், ரிசர்வ் வங்கியின் ஆளுநர் உர்ஜித் படேல்.



சுத்தம் செய்ய முடியுமா? புகையைச் சுத்தம் செய்ய வேண்டும் என்றால் கார்களைத் தடுக்க வேண்டும், குறைக்க வேண்டும். கார் விற்பனையை அதிகரிப்பதல்லவா மோடியின் கொள்கை?

கருப்புப் பணம் என்றால் என்ன? முறைகேடான தொழில்களில் சேர்த்த பணம் ஒரு வகை. முறையாகத் தொழில் செய்பவர்களும் வரி ஏய்ப்பு செய்கிறார்கள். அந்த வரி ஏய்ப்பு செய்த பணமும் கருப்புப் பணம்.

**கருப்பு பண பேர்வழிகள் 500, 1000 நோட்டை வங்கியில் கொடுத்தால் சிக்கிக் கொண்டுவிடுவார்கள் என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது உண்மையல்ல, வரி கொடுத்தால் எல்லாக் குற்றங்களும் மன்னிக்கப்பட்டுவிடும் என்பதுதான் உண்மை.**

அதிகாரிகள் இலஞ்சம் வாங்கி கோடிக்கணக்கில் சொத்து வைத்திருக்கின்றனர். அதுபோல அரசியல்வாதிகளிடமும் கோடிக் கணக்கில் பணம் இருக்கின்றது. அவர்களெல்லாம் வைத்திருக்கும் கருப்புப் பணத்திற்கு ஒரு பொய்க் கணக்கு காட்டி, அதற்கு 30% வருமான வரி கட்டி விட்டால் அது வெள்ளையாகிவிடுமாம். கருப்பு பண பேர்வழிகள் 500, 1000 நோட்டை வங்கியில் கொடுத்தால் சிக்கிக் கொண்டுவிடுவார்கள் என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது உண்மையல்ல, வரி கொடுத்தால் எல்லாக் குற்றங்களும் மன்னிக்கப்பட்டுவிடும் என்பதுதான் உண்மை.

500, 1000 ரூபாய் செல்லாது என்று இரவு 8:30 மணிக்கு மோடி அறிவித்த பிறகு விடிய விடிய சென்னை உள்ளிட்ட அனைத்து இந்திய நகரங்களிலும் நகைக் கடைகள் திறந்திருந்தன. கருப்புப் பணத்தை பிடிப்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கமென்றால், நகைக்கடைக்கு வந்தவனையெல்லாம் அப்படியே வளைத்துப் பிடிக்க வேண்டியதுதானே!

கருப்புப் பணத்தை காகிதப் பணமாக வைத்துக் கொள்ளாதீர்கள். தங்கமாக வாங்கி மாற்றி வைத்துக் கொள்ளுங்கள்; சொத்தாகவோ, ரியல் எஸ்டேட்டாகவோ ஷேராகவோ வைத்துக்கொள்ளுங்கள் ஆனால், காகிதப் பணமாக மட்டும் வேண்டாம் என்கிறது மோடி அரசு.



இறந்துபோன தனது மனைவி பூஹ்லாவதியின் சடலத்தைச் சொந்த ஊருக்கு எடுத்துச் செல்லப் பணமின்றி, வங்கி வாசலில் அவரது சடலத்தோடு பணத்திற்காகக் காத்திருக்கும் முன்னிலால்.

பணப் பொருளாதாரத்தை ஒழித்து அனைவரையும் வங்கிப் பொருளாதாரத்துக்குள் கொண்டு வரப் போகிறேன் என்கிறார் மோடி. ஆனால், ஆய்வுகள் என்ன சொல்லுகின்றன? வங்கிப் பொருளாதாரத்தைத் தங்களுடைய பொருளாதார நடவடிக்கைக்கு அடிப்படையாக வைத்திருப்பவர்களான மிகப் பெரிய தரகு முதலாளிகள், பன்னாட்டு நிறுவனங்கள்தான் கருப்புப் பணத்தினுடைய மிக முக்கியமான இருப்பிடம் என்று சொல்கின்றன.

இதே பா.ஜ.க.வினர் முன்னர் சொன்னார்களே, அந்த 70 இலட்சம் கோடி கருப்பு பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்திருப்பது யார்? உள்ளூர் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், இலஞ்ச ஊழல் பேர்வழிகளுமா? சிலர் அப்படி இருப்பார்கள். ஆனால், மிகப் பெரும்பான்மையாக இந்த கருப்புப் பணத்தை வைத்திருப்பவர்கள் இந்த நாட்டினுடைய மிகப்பெரிய தரகு முதலாளிகள்தான்.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 25 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு கருப்புப் பணம் இந்தியப் பொருளாதாரத்தில் உருவாகிறது. அதை உருவாக்குபவர்கள் இவர்கள்தான். ரூ.500, ரூ.1000 ஆக மாற்றித் தேர்தல் நேரத்திலே விநியோகிப்பது அல்லது மற்ற செலவுகளுக்குக் கருப்புப் பணமாகப் பயன்படுத்துவது என்பதெல்லாம் ஒரு கொசுறு. இந்த மையமான விடயத்திலிருந்து திசைதிருப்புவதற்காகவே, பாகிஸ்தானிலிருந்து கள்ள நோட்டு வருகிறது என்று இரண்டையும் முடிச்சுப் போடுகிறார் மோடி.

வேறு ஒரு கேள்வியும் எழுகிறது. பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள், இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதற்கு கள்ள நோட்டுக்களை அச்சடித்து விநியோகிப்பதைத் தவிர வேறு வழியில்லையா என்பதுதான் அந்தக் கேள்வி. ரூ.500, ரூ.1000 நோட்டுக்கள் இருக்கட்டும். பார்ட்டிசிபேட்டரி நோட் (Participatory Note) என்றொரு நோட்டு இருக்கிறது. அது ரூபாய் நோட்டு அல்ல.

அந்த நோட்டில் தாவூத் இப்ராஹீம், ஹஃபீஸ் சையது அல்லது பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ போன்ற யார் வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம். அதிலே யார் முதலீடு செய்கிறார்கள் என்று கேள்வி கேட்கக் கூடாது என்பதுதான் அதிலிருக்கக்கூடிய முக்கியமான முதல் விதி. அதை அவர்கள் நியூயார்க்கிலோ, வாஷிங்டனிலோ, இலண்டனிலோ அந்தப் பணத்தை முதலீடு செய்யலாம்.

வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் (Foreign Institutional Investors) வாயிலாக இந்தியாவில் இருக்கக்கூடிய பெல் அல்லது பி.எஸ்.என்.எல். போன்ற பொதுத்துறை நிறுவனங்களிலோ அல்லது அம்பானி, அதானி நிறுவனங்களிலோ மூலதனம் போட முடியும்.



1,000 ரூபாய் நோட்டு செல்லாதென அறிவிக்கப்பட்டதால், முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய உதவித்தொகை கிடைக்காமல் தவித்து நிற்கும் சென்னை - ராயபுரத்தைச் சேர்ந்த தாய்மார்கள்.

யார் அந்தப் பங்குகளை வாங்குகிறார்கள் என்று கேட்பதற்கான அதிகாரம் மோடி அரசுக்குக் கிடையாது. இப்படி அனாமதேயமாக, மொட்டைக் கடுதாசியைப் போல யார் வேண்டுமானாலும் இந்தியப் பொருளாதாரத்தில் முதலீடு செய்ய முடியும், அதை அரசாங்கம் சோதிக்க முடியாது என்ற ஒரு ஏற்பாட்டைச் செய்தது வாஜ்பாயியின் ஆட்சி.

இந்த முதலீட்டிலிருந்து கிடைக்கும் ஈவுத் தொகையை அல்லது விற்றுக் கிடைக்கக் கூடிய வெள்ளைப் பணத்தை தீவிரவாதிகளுக்கு வினியோகிப்பது சுலபமா? இல்லை, பாகிஸ்தானில் ஒரு அச்சகம் வைத்து நோட்டடித்து, மூட்டை கட்டி, கழுதை மேல் ஏற்றி, இந்திய பார்டர் செக்யூரிட்டி ஃபோர்சையும், கம்பி வேலிகளையும் தாண்டி, மூட்டைகளை இந்தப் பக்கம் தூக்கிப் போட்டு, இங்கேயுள்ள தீவிரவாதிகளிடம் பிரித்துக் கொடுத்து, அப்புறம் குண்டு வெடிக்கச் செய்வது சுலபமா?

யாரிடம் கதை சொல்கிறார்கள் இவர்கள்? போதை மருந்து வியாபாரிகள் முதல் பன்னாட்டு நிறுவனங்கள், கருப்புப் பண முதலைகள் வரையில் எல்லா அயோக்கியர்களும் இந்தியாவில் முதலீடு செய்கிறார்கள். இந்த அந்நிய முதலீடு அதிகரிக்க அதிகரிக்க அதையே தன்னுடைய சாதனையாக மோடி சொல்லிக் கொள்கிறார். அதாவது கருப்புப் பணம் உள்ளே வருவதைத்தான் வளர்ச்சி என்று சொல்லுகிறார். ஆனால், இங்கே கருப்புப் பணத்தை பூமிக்கடியில் புதைத்து வைத்திருக்கிறார்கள் என்றும் அதைக் கண்டுபிடிக்கப் போவதாகவும் நமக்குக் காதிலே பூ சுற்றுகிறார் மோடி.

உழைத்துச் சேர்த்த தமது சொந்தப் பணத்தை மாற்ற வருபவர்களின் கைவிரலில் மைவைத்துப் பொதுமக்களை அவமானப்படுத்தும் மோடி அரசின் பாசிசத் திமிர் நடவடிக்கை.



❍ ● ❍

இந்த பார்ட்டிசிபேட்டரி நோட்டு என்பதெல்லாம், ஏதோ பாகிஸ்தான் தீவிரவாதிகள் பணம் போடுவதற்கான வழி என்று மட்டும் புரிந்து கொள்ளக்கூடாது. அதிகபட்சமாக இந்தியாவில் முதலீடு செய்திருப்பது அமெரிக்காவோ ஜெர்மனியோ அல்ல, இந்துமாக்கடலில் அமைந்துள்ள மொரீசியஸ் என்ற குட்டித்தீவு. மிஞ்சிப்போனால் 12 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட நாடு இது. அந்த மொரீசியஸ் தீவு சுமார் 40%-க்கும் மேலான அந்நிய முதலீட்டை இந்தியாவில் போட்டுள்ளது. இதுபோன்று கேமன் தீவுகள் உள்ளிட்ட பல தீவுகள் உள்ளன.

இந்தத் தீவு நாடுகள் இவ்வளவு பணத்தை முதலீடு செய்ய எப்படி முடிகிறது? யாருடைய பணம் அது? அந்தப் பணமெல்லாம் இந்தியத் தரகு முதலாளிகளின் கருப்புப் பணம். இங்கிருந்து பணத்தை வெளிநாடுகளுக்குக் கடத்தி பலப்பல நாடுகளைச் சுற்றி, மொரீசியஸ் சென்று இறுதியில் அந்நிய முதலீடாக இந்தியாவிற்குள் திரும்பி வருகிறது.

நத்தம் விசுவநாதனுக்கு துபாயில் சொத்து இருக்கிறது; இந்தோனேசியாவில் நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறது என்றெல்லாம் பத்திரிக்கைகள் செய்திகள் வெளியிட்டன. அவர் மின்சாரத்துறை அமைச்சராக இருக்கும் போதுதான், அதானி குழுமம் சூரிய ஒளி மின்சாரத்தை, அளவுக்கதிகமான விலையில் தமிழகத்தின் தலையில் கட்டியது. இதற்கான இலஞ்சப் பணத்தை மஞ்சள் பையில் சுருட்டிக் கொண்டு போயா, துபாயில் சொத்து வாங்கியிருக்கிறார்? அப்படி நடப்பதில்லை.

அந்த நாடுகளில் அங்கேயிருக்கும் நபர் மூலமாக சொத்து வாங்கப்பட்டுவிடும் அல்லது அமைச்சரின் இரகசிய வங்கிக் கணக்கிலே பணம் செலுத்தப்பட்டுவிடும். அப்படி ஒரு சர்வதேச வலைப்பின்னல்

இந்த முதலாளிகளிடையே இருக்கின்றது. நாளைக்கே நத்தம் விசுவநாதனின் பணம் அந்நிய முதலீடு என்ற பெயரில் இந்தியாவுக்குள் வரும்.

ரெட்டி சகோதரர்கள் கர்நாடகாவின் பெல்லாரி மாவட்டத்தையே விழுங்கியவர்கள். இன்னும் கூடுதலாகச் சொன்னால், கர்நாடக எல்லையையே ஆந்திராவுக்குள் நகர்த்தி வைத்தவர்கள். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜின் அபிமானப் பிள்ளைகள். இந்த ரெட்டி சகோதரர்கள் கர்நாடகாவிலிருந்து உயர்தரமான இரும்புக் கனிமத்தை 5000 கப்பல் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். ஆனால், சுங்கத்துறையின் கணக்கு வெறும் 1000 கப்பல் தான். 4000 கப்பல் இரும்பு கனிமத்தை விற்ற பணத்தை, ரெட்டி புதைத்தா வைத்திருக்கிறார்? அந்தப் பணத்தை வைத்துதான் எடியூரப்பாவை விலைக்கு வாங்கினார். இன்னும் என்னென்ன வாங்கினார் என்றெல்லாம் மோடிக்கு தெரியாதா?

கருப்புப் பணம் என்பது, ஒரு கருப்பு நடவடிக்கை. இந்த நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதுதான் தாராளமயக் கொள்கை. இதற்கான பல வழிமுறைகள் பாரதிய ஜனதா ஆட்சியில்தான் வகுக்கப்பட்டன.

வோடஃபோன் வரி ஏய்ப்பு வழக்கைத் தொடர்ந்து, இத்தகைய வரி ஏய்ப்பு நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக “ஜெனரல் ஆண்டி அவாய்டென்ஸ் ரூல்ஸ் (GAAR)” என்ற விதியை பிரணாப் முகர்ஜி கொண்டு வந்த போது , அதை எதிர்த்துப் பெரும் குரலை எழுப்பியவர் இன்றைய நிதியமைச்சர் அருண் ஜேட்லி. அன்றைக்கு காங்கிரசு ஆட்சியில் இருந்தபோது சுவிஸ் வங்கியில் பணம் வைத்திருப்பவர்களின் பெயர்களை வெளியிட இயலாது என்று கூறினார் பிரணாப் முகர்ஜி. இவர்கள் கூச்சல் எழுப்பினார்கள். இன்றைக்கு அந்த வழக்கில் பிரணாப் முகர்ஜி என்ன பதிலைச் சொன்னாரோ அதே பதிலைத்தான் உச்சநீதி மன்றத்தில் மோடி சொல்கிறார். வெளிநாட்டில் பணம் போட்டிருப்பவனின் பெயரை வெளியிட முடியாதாம். உள்நாட்டில் கருப்புப் பணம் யாரிடம் இருக்கிறது என்று தெரியாதாம்.

இன்கம் டாக்ஸ் டிபார்ட்மென்ட், என்ஃபோர்ஸ்மென்ட், ரெவின்யூ இன்டெலிஜென்ஸ், சி.பி.ஐ. இதர எண்ணற்ற துறைகள் மற்றும் நிதியமைச்சகம் எல்லாம் என்ன செய்கிறார்கள்? இந்த கருப்புப் பண முதலைகளிடம், கார்ப்பரேட் முதலாளிகளிடம் விலை போய் விட்டார்கள். வரி வசூல் செய்வதற்காக, நிர்வாகம் செய்வதற்காக வைத்திருக்கிற இந்த அரசமைப்பு

குளோபல் ஃபைனான்சியல் இன்டேக்ரிட்டி என்ற அமைப்பு, சுவிஸ் வங்கி போன்றவற்றில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கருப்புப் பணம் யார் யாருடையது என்பது குறித்து நடத்திய ஆய்வில் அரசியல்வாதிகள், அதிகாரிகளுடைய பணம் 3 சதவீதம், போதைமருந்து கடத்தல் உள்ளிட்ட மாஃபியா கும்பல்களின் பணம் 33 சதவீதம், 64 சதவீதப் பணம் ஏகாதிபத்திய நிறுவனங்கள் மற்றும் தரகு முதலாளிகளுடையது எனத் தெரிய வந்தது.

என்பது கையாலாகாததாகி விட்டது. இவர்களுடைய தோல்வியை மறைப்பதற்கு மக்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது.

**கிரெடிட் கார்டு : வல்லரசாகும் ஏழை இந்தியா !**

குளோபல் ஃபைனான்சியல் இன்டெக்ரிட்டி(*Global Financial Integrity*) என்ற அமைப்பு செய்த ஆய்வில், மொத்தமாக உலகளவில் சுவிஸ் வங்கி போன்ற பல வேறு வங்கிகளில் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணம் யார் யாருடையது, அது எவ்வளவு என்பதைக் கூறுகிறது. அந்த ஆய்வில், அரசியல்வாதிகள் - அதிகாரிகளுடைய பணம் 3 சதவீதமாகும். போதைமருந்து கடத்தல் போன்ற சட்டவிரோத அல்லது முறைகேடான தொழில்களிலிருந்து வருகின்ற வருமானம் 33 சதவீதமாகும். மீதமுள்ள 3-ல் 2 பங்கு, ஏறத்தாழ 64 சதவீத பணம், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட் முதலாளிகள், தரகு முதலாளிகள் இவர்களுடைய பணம்தான் சுவிஸ் வங்கி போன்ற பல வங்கிகளில் கருப்புப் பணமாக அமர்ந்திருக்கிறது. உண்மை இப்படியிருக்கும்போது, எல்லோரும் பேங்க் அக்கவுண்ட் ஆரம்பிக்காததும், கார்டு வழியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளாததும்தான் ஊழலை ஒழிக்க முடியாததற்கு காரணம் என்கிறார் மோடி.

ரேசன் கடையை மூடிவிடுகிறோம். அரிசி, எரிவாயு சிலிண்டரைச் சந்தை விலையில் வாங்கிக் கொள்ளுங்கள், மானியத் தொகையை உங்கள் வங்கி கணக்கில் போட்டு விடுகிறோம் என்று காங்கிரசு ஆட்சியின் போதே சொன்னார்கள். மக்கள் எதிர்ப்பினால் அத்திட்டத்தை கைவிட்டார்கள்.

மோடி அதே திட்டத்தை சூழ்ச்சியாக அமல்படுத்தினார். “நான் பொருளாதாரத் தீண்டாமையை ஒழிக்க விரும்புகிறேன்”. இந்த நாட்டில் ஆகப் பெரும்பான்மையான மக்கள் வங்கிக் கணக்கு இல்லாமல் இருக்கிறார்கள், கணக்கு ஆரம்பித்தால் எல்லோருக்கும் 5000 ரூபாய் வரை கடன் கிடைக்கும் என்றார். இன்று எரிவாயு உருளைக்கு மானியம் வேண்டுமென்றால் அக்கவுண்ட் இருந்தால்தான் கிடைக்கும் என்றாகிவிட்டது. அடுத்து ரேசன் கடைக்குப் பதிலாக ரேசன் மானியம் வரப் போகிறது.

வங்கிக் கணக்குகளை 23 கோடி பேர் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதைச் சாதனையாகக் கூறிக் கொள்கிறார்கள். இதெல்லாம் மோசடியான (Fraud) கணக்கு. வங்கி ஊழியர்களே 1 ரூபாய், 2 ரூபாய், 5 ரூபாய் என்று போட்டுத் தொடங்கிய கணக்குகள்தான் என்பது

அம்பலமாயிருக்கிறது. இருந்தாலும் எப்படியாவது வங்கி மூலமாக பரிவர்த்தனை செய்ய வைக்க வேண்டும் என்ற முயற்சியிலே இவர்கள் தீவிரமாக ஈடுபடுகிறார்கள்.



பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்குக்கூடக் கையில் பணமில்லாமல் அலைந்த நேரத்தில், 550 கோடி ரூபாய் செலவில் நடந்த பா.ஜ.க.வைச் சேர்ந்த கர்நாடக மாநில கருப்புப் பண பேர்வழி ஜனார்த்தன ரெட்டி மகளின் திருமணம்.

செல்போன் செயலி (Mobile App) வழியாக காய்கறிகள் வாங்கலாம், பூக்காரம்மாவுக்கு பணம் கொடுக்கலாம், காகிதப் பணம் தேவையில்லை என்று தினமலர் படம் போட்டு விளக்குகிறது. 500, 1000 ரூபாய் செல்லாது என்று 8-ஆம் தேதி இரவு மோடி அறிவிக்கிறார். 9 காலையில் எல்லா நாளேடுகளிலும் மோடி படத்தைப் போட்டு முழுப்பக்க விளம்பரம் கொடுக்கிறது பேடிஎம் (Paytm) என்ற சீனக் கம்பெனி.

பெரும்பான்மையான உழைக்கும் மக்களும், சிறு வணிகர்களையும் கட்டாயமாக வங்கிப் பொருளாதாரத்திற்குள் கொண்டு வருவதற்கு வேறு எந்த காரணத்தையும் இவர்களால் சொல்ல முடியவில்லை. ரொக்க பரிவர்த்தனையற்ற பொருளாதாரத்தில்தான் ஊழல் ஒழியும் என்கிறார்கள். எல்லாமே அட்டைதான் என்று வந்து விட்டாலும், இலஞ்சத்துக்கான புதிய வழிகள் கண்டுபிடிக்கப்படும்.

அதானிக்கு நத்தம் விஸ்வநாதன் இருந்தால்தான் 5,000 கோடி திருட முடியும். அம்பானிக்கு மோடி இருந்தால்தான் 4ஜி மாதிரி அலைக்கற்றைகளை அடிமாட்டு விலைக்கு அபகரிக்க முடியும். இலஞ்சம், ஊழல் என்பது கார்ப்பரேட் முதலாளிகளின் தேவை. அந்த குளோபல் பைனான்சியல் இன்டெக்ரிட்டி புள்ளி விவரத்தில் சொன்னதுபோல 64% என்பது கார்ப்பரேட் முதலாளிகளுடைய பணம். அது வளர வேண்டும் என்று சொன்னால் அந்த 3% இலஞ்ச ஊழல் பணம் நிரந்தரமாக கிடைக்கும்படி அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். எனவே, வங்கிப் பொருளாதாரத்துக்குள் மக்களைத் தள்ளுவதன் நோக்கம் ஊழல் ஒழிப்பு அல்ல.

மோடி அரசின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையை விமர்சித்துப் பதிவிட்டதற்காக ம.பி. மாநில பா.ஜ.க. அரசால் கைது செய்யப்பட்ட சத்தர்பூரைச் சேர்ந்த 19 வயது மாணவன் அபிஷேக் மிஸ்ரா.



மக்களை வங்கிக் கணக்கிற்குள் கொண்டு வருவதற்கான நோக்கம் எல்லோரையும் வரி கட்ட வைப்பதுதான் என்று அருண் ஜேட்லி தெளிவாகச் சொல்கிறார். பெரும்பான்மை மக்கள் இப்போது வரி கட்டாமலா இருக்கின்றனர்? மறைமுக வரிகளாக நாம் எண்ணற்ற வரிகளைக் கட்டிக் கொண்டு இருக்கிறோம்.

இப்போது வரிகளை எல்லாம் ஒருங்கிணைத்து கொண்டு வரப்பட்டிருக்கிற ஜி.எஸ்.டி(GST)-இல் அதிகபட்ச வரி 28% என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் எஜூகேசன் செஸ், அந்த செஸ், இந்த செஸ்னு வாங்குவார்கள். ஐ.டி. போன்ற நிறுவனங்கள், வங்கிகள், பொதுத் துறை நிறுவனங்களில் வேலை செய்யக் கூடிய ஊழியர்கள், நடுத்தர வர்க்கத்தினர் மறைமுக வரி செலுத்துகின்ற அதே நேரத்தில், நேர்முக வரியாக வருமான வரியும் செலுத்துகிறார்கள்.

அப்படி அடித்தட்டு மக்களும் நடுத்தர வர்க்கத்தினரும் செலுத்தும் வரிகள் எல்லாம் சேர்த்து மொத்தத்தில் 30-40% இருக்கும். ஆனால், முதலாளிகள் எவ்வளவு வரி செலுத்துகிறார்கள்? முதலாளிகள் செலுத்துகின்ற அதிகபட்ச நேர்முக வரி என்பது 30%. தனியார்மய, தாராளமய கொள்கைகள் அமலாக்கப்பட தொடங்கிய 1994-1995 காலம் முதல் சாதாரண உழைக்கும் மக்களுக்கு வரி படிப்படியாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. கார்ப்பரேட் முதலாளிகளுக்கான வரிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

வரியைக் குறைப்பதற்கு சொல்லப்பட்ட இரண்டு காரணங்களை நீங்கள் கவனித்துப் பார்க்க வேண்டும். வரியை குறைத்தால்தான் அந்நிய முதலீட்டாளர்கள் அல்லது முதலாளிகள் முதலீடு போடுவார்கள், தொழில் தொடங்குவார்கள் என்பது ஒரு வாதம். அரசாங்கம் அதிகமாக வரி விதிப்பதால்தான் வரி ஏய்ப்பு செய்கிறார்கள்; குறைவாக வைத்தீர்கள் என்றால் முதலாளிகள் நேர்மையாக வரியைக் கட்டி விடுவார்கள் என்பது அடுத்த வாதம்.

ஆனால், தனியார்மய, தாராளமய கொள்கைகள் அமலாக்கப்பட்ட இந்த காலகட்டத்தில் சாய்நாத் போன்ற எழுத்தாளர்கள் பலரது ஆய்வின்படி சராசரியாக ஆண்டுதோறும் 5 இலட்சம் கோடி அளவிற்கு கார்ப்பரேட்

முதலாளிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் கருப்புப் பணம் முன்பை விட பன்மடங்கு அதிகமாகிவிட்டது என்பதுதான் ஆய்வுகள் கூறுகின்ற தகவல்.

இதுவொருபுறமிருக்க, கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வருமான வரி 90%-இல் இருந்து 30%-ஆகக் குறைக்கப்பட்டிருப்பதை நாம் எப்படிப் பார்ப்பது? முதலாளிகள், நான் வரி கட்ட முடியாது கருப்புப் பணம் தான் வைத்துக்கொள்வேன் என்று சொல்லும் போது, நீங்கள் வைத்திருக்கும் கருப்புப் பணத்தை இவ்வளவு ரூபாய் வரைக்கும் நாங்கள் வெள்ளை என்று ஒத்துக் கொள்கிறோம் என்று அரசு இறங்கி வருகிறது; வரி குறைப்பு என்பதன் உண்மையான பொருள் அரசாங்கமே கருப்பை வெள்ளையாக்குவதுதான்.

**போதைமருந்து வியாபாரிகள் முதல் பன்னாட்டு நிறுவனங்கள், கருப்புப் பண முதலைகள் வரையில் எல்லா அயோக்கியர்களும் இந்தியாவில் முதலீடு செய்கிறார்கள். இவர்களின் கருப்புப் பணம் உள்ளே வருவதைத் தான் வளர்ச்சி என்று சொல்லுகிறார், மோடி. ஆனால், இங்கே கருப்புப் பணத்தை பூமிக்கடியில் புதைத்து வைத்திருக்கிறார்கள் என்றும் அதைக் கண்டுபிடிக்கப் போவதாகவும் நமக்குக் காதிலே பூ சுற்றுகிறார் அவர்.**

வரியை வைத்துத்தானே ரோடு போடுவார்கள். தண்ணீர் கொடுப்பார்கள். பள்ளிக்கூடம் இருக்கும். ஆஸ்பத்திரி இருக்கும். வேண்டிய வசதிகள், அடிப்படைத் தேவைகளை மக்களுக்குச் செய்து கொடுப்பார்கள் என மக்கள் நினைக்கிறார்கள். அதெல்லாம் முன்பு பெயரளவிற்கு செய்யப்பட்டது. இப்போது அதுவும் இல்லை.

பெருமுதலாளிகள் எதற்கு வரி கட்டுகிறார்கள்? சாலை, மின்சாரம், வங்கிக் கடன் போன்ற வசதிகளை எல்லாம் அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். இதைச் செய்து கொடுத்தால் மட்டும் போதாது. தொழிலாளர்களுடைய போராட்டத்திலிருந்து முதலாளியினுடைய தொழிலை, சொத்தைப் பாதுகாக்க வேண்டும். போலீசு படை முதலாளியின் சொத்திற்கு நாயைப் போல காவல் நிற்க வேண்டும்.

கடந்த 20 ஆண்டுகளை எடுத்துக் கொண்டால், முதலாளிகளுக்கு அரசாங்கத்தால் ஏற்கனவே செய்து வந்த சேவையைக் காட்டிலும் மேலதிகமாக சேவை செய்கிறது. டாடா அம்பானிகள் நோகாமல் நுங்கெடுக்க உதவுதல்தான் (*ease of doing business*) அரசின் ஒரே பணியாக இருக்கிறது.

அதே நேரம் நம்மைப் பொருத்தவரை பள்ளிகள், மருத்துவமனைகள், தண்ணீர் உள்ளிட்ட எல்லாச் சேவைகளுமே காசுக்கு மட்டுமே என்று ஆக்கப்பட்டுவிட்டது. அரசாங்கம் நம்மிடம் வரி வாங்கிக் கொண்டு செய்கின்ற சேவை என்று ஒன்றில்லை. இந்த கோரிக்கைகளுக்காகப் போராடினால் போலீசு வந்து நிற்கும்; ஆர்.டி.ஓ. வந்து நிற்பார். நம் மீது தடியடி, துப்பாக்கிச் சூடு நடத்தும் போலீசுக்கு ஊதியம் தருவதற்குத்தான் நம்முடைய வரிப்பணம் பயன்படுத்தப்படுகிறது.

மெடிக்கல் சீட்டுக்கு பணத்தைப் பறிக் கொடுத்தவர்கள் எஸ்.ஆர்.எம். பச்சமுத்துவின் வீட்டைத் தேடி வந்தால், அந்த கருப்புப் பண பேர்வழியின் தெருவில்கூட நுழைய விடாமல் தடுக்க போலீசு காவல் நிற்கிறது. இந்தப் பங்களா நாய்கள் யார் மீது ஏவி விடப்படுகிறதோ, அந்த மக்கள் நாய்க்கு சோறு போட்டு வளர்க்க வேண்டுமாம்.

வரி வலையை அகலப்படுத்துவது என்பதன் பொருள் இதுதான். பெரு முதலாளிகளை விட்டுவிட்டு சிறு முதலாளிகளையும் சுய தொழில் செய்பவர்களையும் கட்டாயப்படுத்தி அரசுக்கு வரி கட்ட வைப்பதற்குத்தான் நம்மை ரொக்க பொருளாராத்திலிருந்து வங்கி பொருளாதாரத்திற்கு வருமாறு மோடி அழைக்கிறார்.

சிறு வணிகர்கள், அவர்களிடம் வாங்கும் சாதாரண மக்கள் போன்றோர் வங்கிப் பொருளாதாரத்திற்குள் கொண்டு செல்லப்பட்டுவிட்டால் என்ன நடக்கும்? மக்கள் அனைவரின் விவரங்களும் அரசின் கைக்குள்

அம்பானி, அதானி உள்ளிட்ட பா.ஜ.க.விற்கு நெருக்கமான பண முதலைகளுக்குப் பணமதிப்பு நீக்க நடவடிக்கை பற்றி முன்னரே தெரியும் எனக் கூறி மோடியின் நாடகத்தை நாடறியச் செய்த ராஜஸ்தான் மாநில பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் பவானி சிங் ரஜாவத் (இடது) மற்றும் மோடியின் முன்னாள் நெருங்கிய நண்பரும் தற்போது ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்தவருமான யதின் என்.ஓஸா.





செல்லும். அது மட்டுமல்ல, அரசிடம் ஆதார் அட்டை உலகில் வேறு எங்குமே இல்லாத பயோமெட்ரிக் கார்டு இருக்கிறது. கை ரேகையையும், கருவிழி ரேகையையும் பதிவு செய்கின்ற அட்டை அது. இது மொத்த மக்களையும் குற்றவாளிகளாக ஆக்குகின்றன அட்டை. ஒரு கண்காணிப்பு அரசை உருவாக்குவதற்கு இதை ஒரு சோதனையாக இந்தியாவில் செய்கிறார்கள்.

இந்த அட்டை இருந்தால் நமக்கு ஒரு பாதுகாப்பு என்று மக்கள் நம்பினார்கள். என்ன நடக்கிறது? ஆதார் அட்டை இருந்தால்தான் வங்கிக் கணக்கு துவங்க முடியும், காஸ் மானியம் கிடைக்கும், ரேசன் கார்டு கிடைக்கும், இனி ஆதார் அட்டை இருந்தால்தான் கட்டணக் கழிப்பிடத்தில் சிறுநீர் கழிக்க முடியும் என்ற நிலை வரப்போகிறது.

> **அதானிக்கு நத்தம் விஸ்வநாதன் இருந்தால்தான் 5,000 கோடி திருட முடியும். அம்பானிக்கு மோடி இருந்தால்தான் 4ஜி மாதிரி அலைக்கற்றைகளை அடிமாட்டு விலைக்கு அபகரிக்க முடியும். இலஞ்சம், ஊழல் என்பது கார்ப்பரேட் முதலாளிகளின் தேவை. கார்ப்பரேட் முதலாளிகளுடைய கருப்புப் பணம் வளர வேண்டும் என்று சொன்னால், அதிகாரிகளுக்கு ஊழல் பணம் நிரந்தரமாக கிடைக்கும்படி அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.**

உங்கள் வங்கிக் கணக்கை செல்பேசிக்குள் கொண்டு வாருங்கள், செல்பேசி செயலி மூலம் உங்களது பணப் பரிவர்த்தனையை செய்து கொள்ளுங்கள் என்கிறார்கள். 4 ஜி-யினுடைய ஆகப்பெரும்பான்மையான கட்டுப்பாடு ரிலையன்ஸ் ஜியோவின் கையில் இருக்கிறது. ஆக செல்பேசி, ஆதார் அட்டை, வங்கிக் கணக்கு அனைத்தும் ஒரு வலைப்பின்னலில் கொண்டு வரப்படும். அரசாங்கமும் அம்பானியும் ஏற்கனவே ஒரு வலைப்பின்னலில்தான் இருக்கிறார்கள். ஆக மக்களுடைய நடவடிக்கைகள், நிதி நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் கண்காணிக்கப்படும்,

**வருகிறது மோடியின் டிஜிட்டல் பாசிசம்**

கட்டாய வரி விதிப்பு, கண்காணிப்பு என்பது மட்டுமல்ல, மக்களுடைய சேமிப்பு, சம்பளம், சிறு வணிகர்களிடம் புழங்கும் பணம் ஆகிய அனைத்தையும் வங்கிக்குள் கொண்டு வருவதுதான் இவர்களது நோக்கம். பணப் பொருளாதாரத்திலிருந்து வங்கிப் பொருளாதாரத்துக்கு மாற்றுவதன் மூலம் மக்களுடைய பணம் வங்கிக்குச் செல்கிறது. அப்புறம், வங்கிப் பணம் மல்லையாக்களின் பணமாகிவிடும்.




2013-க்கும் 2015-க்கும் இடையில் மட்டும் 29 அரசு வங்கிகள் 1,20,000 கோடி வாராக்கடனை தள்ளுபடி செய்திருக்கின்றன. பி.என்.பி. பாரிபாஸ் என்ற நிதித் துறை ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை கடந்த ஏப்ரல் மாதம் எகனாமிக் டைம்ஸ் நாளிதழில் வெளிவந்திருக்கிறது. இந்திய கார்ப்பரேட் முதலாளிகளுக்கு அரசு வங்கிகள் கொடுத்திருக்கும் கடன் 75 இலட்சம் கோடி. அவற்றில் 12 இலட்சம் கோடி வாராக்கடன் என்கிறது அந்த அறிக்கை. இதில் இந்தியாதான் ஆசியாவிலேயே முதலிடம். வாராக்கடன் கொரியாவில் 5.8%, சீனாவில் 6.66%, தாய்லாந்தில் 2.4%, இந்தியாவில் 16.1%.

எனவே, பணப்பரிவர்த்தனையை நிறுத்துங்கள், வங்கிப் பரிவர்த்தனைக்கு வாருங்கள் என்ற அழைப்பின் பொருள், உங்கள் பணத்தை அம்பானி, அதானியிடம் கொடுத்து வையுங்கள், பத்திரமாக இருக்கும் என்பதுதான்.

இந்த உண்மையை எல்லாம் இருட்டடிப்பு செய்து விட்டு மோடிக்கு வக்காலத்து வாங்குகிறார்கள் மோடியின் அறிவுத்துறை கூலிப்படையான ஊடகங்கள். கருப்பு பண பேர்வழிகளுக்கு கொஞ்சமாவது நெருக்கடி வந்திருக்கிறதா, இல்லையா என்று சாமர்த்தியமாக கேள்வி எழுப்புகிறார்கள்.

கொசு உற்பத்தியாகும் பண்ணை கூவம் ஆறு. கருப்பு பணம் உற்பத்தியாகும் இடம் கார்ப்பரேட் முதலாளி வர்க்கம், ஊழல் அதிகாரவர்க்கம். அந்த கூவத்தைப் பாதுகாக்கும் மோடி, வீதி வீதியாக கொசுவுக்குப் புகை போடுகிறார். இந்த மோசடியை அம்பலப்படுத்துவதா, அல்லது புகையால் நாலைந்து கொசு செத்தாலும் நல்லதுதானே என்று பாராட்டுவதா?

திருப்பூர் கன்டெயினர், அன்புநாதன் கோடவுனில் கைப்பற்றப்பட்ட பணம் ஆகியவற்றின் கதி என்ன?

போலி மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி அளித்து 2,500 கோடி ரூபாயைக் கூரை வரை அடுக்கி வைத்திருந்த கேதன் தேசாய் என்ற உத்தமனை உலக மருத்துவ கவுன்சில் தலைவராக சிபாரிசு செய்யவில்லையா திருவாளர் மோடியின் குஜராத் அரசு? இந்த நாட்டில் கருப்பு பண பேர்வழிகளுக்காகவே ஒரு கட்சி உண்டென்றால், அது, *Black money Janata Party* தான். சேட்டு என்றாலே, நம்பர் 2 வணிகம் என்பது நாடறிந்த உண்மை. சேட்டுகளின் தாய்க் கழகமல்லவா பாரதிய ஜனதா?

**பெரு முதலாளிகளை விட்டுவிட்டு சிறு முதலாளிகளையும் சுய தொழில் செய்பவர்களையும் கட்டாயப்படுத்தி அரசுக்கு வரி கட்ட வைப்பதற்குத்தான் நம்மை ரொக்கப் பொருளாராத்திலிருந்து வங்கி பொருளாதாரத்திற்கு வருமாறு மோடி அழைக்கிறார்.**

சொந்தப் பணத்தை மாற்றுவதற்கு பிச்சைக்காரர்களைப் போல வங்கிகளின் வாசலில் காத்து நிற்கிறார்கள் மக்கள். தொழில்கள் அழிகின்றன. சிறு வணிகம் அழிகிறது. நோயாளிகள் சாகிறார்கள். நாடே நிலைகுலைந்திருக்கிறது.

இது நிர்வாகத் திறமையின்மை என்று சிலர் மோடி அரசை விமரிசிக்கிறார்கள். இது நிர்வாகத் திறமையின்மையா, திட்டமிட்ட சதியா? முட்டாள்தனமா, முட்டாள்தனம் போலத் தெரிகின்ற அயோக்கியத்தனமா? புழக்கத்தில் இருக்கின்ற பணத்தில் 85%-ஐ செல்லாது என்று அறிவித்தால் நாட்டில் என்ன நடக்கும் என்பதை அடி முட்டாள் கூடப் புரிந்து கொள்ள முடியும். முகேஷ் அம்பானியின் முன்னாள் ஊழியரான ரிசர்வு வங்கி கவர்னருக்கும், அதானியின் இந்நாள் ஊழியரான மோடிக்கும் இது புரியாமலா இருக்கும்?

எதற்காக வரிசையில் நின்று அல்லல்படுகிறீர்கள்? டெபிட் கார்டு, கிரெடிட் கார்டுக்கு மாறிக்கொள்ளுங்கள் என்று மக்களுக்கு அறிவுரை சொல்கிறது ரிசர்வ் வங்கி. ஏ.டி.எம். இல்லையென்றால் என்ன, பே டிஎம் (paytm)-முக்கு மாறிக் கொள்ளுங்கள் என்கிறது பேடி எம் கம்பெனியின் விளம்பரம்.

நந்தன் நிலேகனி, ஆதார் அட்டை திட்டத்தின் தலைவர். திறன்பேசி மூலம் வங்கி பரிவர்த்தனை நடத்தும் செயலி (App ஐ) உருவாக்குவதில் பங்காற்றியவர். அவர் என்ன சொல்கிறார், கேளுங்கள்:

“அடுத்த சில வாரங்களில் மக்கள் முடிவு செய்தாக வேண்டும். கையில் ரூபாய் நோட்டுகள் இல்லையென்றால் என்ன ஆகும் என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள். கடைக்காரர்கள் பணத்தை வாங்க மாட்டார்கள். கையில் பணமாக வைத்துக் கொண்டு செலவிடுவதுதான் தொந்தரவு இல்லாத வழி என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பணமாக கையில் வைத்திருப்பதுதான் தொந்தரவு என்று இப்போது புரிந்து கொள்வார்கள்.” இந்த சூழ்நிலை டிஜிட்டல் பரிவர்த்தனையை நோக்கி (வங்கி - கடன் அட்டை) மக்களை நெட்டித் தள்ளும்.

மக்களுக்கு நேர்ந்த அசவுகரியத்துக்கு வருந்துவதாக மோடி சொல்கிறாரே அது உண்மையா, நிலேகனி சொல்வது உண்மையா? இது நிர்வாகத் திறமையின்மையா, சதித்திட்டமா?

மக்களை வங்கிக் கணக்கு என்ற வலையில் சிக்கவைத்து, அவர்களுடைய சேமிப்புப் பணத்தை அபகரித்து தரகு முதலாளிகளுக்கு வாரி வழங்குவது;

பெரு முதலாளிகளுக்கு வரி விலக்கு, சிறு வணிகர்கள் முதல் சுய தொழில் செய்வோர் வரை அனைவருக்கும் வரி விதிப்பு, இதிலிருந்து தப்பிக்க முடியாமல் சிக்க வைக்க வங்கிக் கணக்கு;

ஆதார் அட்டையையும் வங்கிக் கணக்கையும் இணைத்து மானிய வெட்டு.

பணப் பரிவர்த்தனையிலிருந்து கடன் அட்டை பரிவர்த்தனைக்கு மாற்றுவதன் மூலம் சிறுவணிகத்தை மெல்ல அழிப்பது;

4ஜி ஆண்டிராய்டு போன், ஆதார் அட்டை, கடன் அட்டை அனைத்தையும் இணைப்பதன் மூலம் குடிமக்களின் எல்லா நடவடிக்கைகளையும் அம்பானியின் கண்காணிப்புக்கும் அரசின் கண்காணிப்புக்கும் உட்படுத்துவது;

- இதுதான் நந்தன் நிலேகனியின் டிஜிட்டல் இந்தியா, ரிலையன்ஸ் ஜியோ-வின் டிஜிட்டல் இந்தியா, மோடியின் டிஜிட்டல் இந்தியா அல்லது டிஜிட்டல் பாசிசம்.

அர்ஜென்டினாவில் இத்தகைய வங்கி நெருக்கடி வந்தபோது அதன் அதிபர் மக்கள் எழுச்சிக்கு பயந்து தப்பி ஓடினார். கிரீசில் மக்கள் போராட்டம் வெடித்தது. சேமநல நிதியை (PF) முடக்குவதாக மோடி கூறியவுடன், பெங்களூரு நகரத்தை முடக்கியது படிப்பறிவு இல்லாத எளிய ஆயத்த ஆடை தொழிலாளர்களின் எழுச்சி. அடுத்த கணமே பின்வாங்கியது மோடி அரசு.

ஏமாந்தது போதும், கேள்வி எழுப்புங்கள். இல்லையேல், 2002-இல் குஜராத் முஸ்லிம்களுக்கு நேர்ந்த கதி நம் அனைவருக்கும் நேரும். கேள்வி எழுப்புங்கள்... போராடுங்கள். உங்களை வீதிக்கு வரவழைத்து விட்டார் மோடி ! வீதியில்தான் இதற்கு விடை காண வேண்டும் ! கேள்வி எழுப்புங்கள் !! போராடுங்கள் !!!

(வினவு இணையதளத்தில், “எது கருப்புப் பணம்?” என்ற தலைப்பில் ம.க.இ.க.வின் பொதுச் செயலர் தோழர் மருதையன் ஆற்றியிருந்த உரை சுருக்கித் தரப்பட்டுள்ளது. - **ஆசிரியர் குழு**)

●

# தோற்றுப் போன மோடி அரசு மக்களைப் பழி தீர்க்கிறது!

**நான் பிரதமரானால் கள்ளப் பணம், கருப்புப் பணத்தை ஒழிப்பேன் என வாய்ச்சவடால் அடித்த மோடி, ஆட்சியைப் பிடித்த பிறகு மக்கள் உழைத்துச் சம்பாதித்த பணத்தைச் செல்லாக் காசாக்கிவிட்டார்.**

கடந்த நவம்பர் எட்டாம் தேதி நள்ளிரவிலிருந்து ஆயிரம், ஐநூறு ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று திடீரென்று மோடி அறிவித்தார். அதை ஒரு சர்ஜிக்கல் ஆபரேஷன் (அறுவைச் சிகிச்சை) என்று சொல்லிக் கொள்கிறார்கள். இதற்கு முன்பு பாகிஸ்தான் 'தீவிரவாதிகளின்' முகாம்கள் மீது திடீர்க் குண்டு வீசித் தாக்கி அழித்ததைத்தான் அப்படிச் சொல்லிக் கொண்டார்கள். இப்போது இதுவும் அறுவைச் சிகிச்சையாம்! நாமெல்லாம் என்ன தீவிரவாதிகளா? நமது நாடே நமக்கு எதிரியாகிப் போய்விட்டதா?

மோடிதான் நாட்டிலேயே மிகப்பெரிய மோசடிக்காரன், பித்தலாட்டக்காரன் என்பதை மீண்டும் காட்டி விட்டார். நவம்பர் 8-ஆம் தேதி மாலை மோடி செய்ததும் நமது நாட்டு மக்கள் மீதான மிகப் பெரிய பயங்கரவாதத் தாக்குதல்தான். என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளக்கூட மக்களுக்கு அவகாசம் கொடுக்கவில்லை. பகலெல்லாம் உழைத்துக் களைத்துப்போய் ஒருவாய் சோறைக் கையிலெடுத்து வாயில் வைக்க போனபோது அதைத்தட்டிவிட்டு, மக்கள் மண்டையில் அடித்து வீழ்த்திவிட்டார்.

நள்ளிரவு முதல் ஆயிரம், ஐநூறு ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று மோடி அறிவித்தார். அடுத்த சில நிமிடங்களில் நிலநடுக்கம் நேர்ந்து விட்டதைப்போல, எதிரிப் படை வந்து அணுகுண்டு வீசி விட்டதைப்போல அதிர்ச்சியில் மக்கள் வீதிகளில் குவிந்தார்கள். ஆட்கொல்லி நோய் துரத்தியதால் மருத்துவமனைக்கு ஓடித் தஞ்சம் புகுவதைப்போல ஏ.டி.எம். மையங்களில், பெட்ரோல் வங்கிகளில் சாரைசாரையாக வரிசை கட்டி நின்றார்கள். ஆனால் ஏமாற்றம்தான் மிஞ்சியது. மக்கள் பீதியில் உறைந்து போனார்கள்.

தனது கையிலுள்ள பணத்தை மாற்ற முடியுமா என்ற கவலையோடு காத்திருக்கும் தாயும், அவரைப் போல வரிசையில் காத்திருக்கும் பொதுமக்களும் – மோடி பிரச்சாரம் செய்த நல்ல காலம் இதுதானோ!



கருப்புப் பணம், கள்ளப் பணத்தை ஒழிப்பதற்கு, இலஞ்ச ஊழலைத் தடுப்பதற்குத்தான் இந்த அறுவைச் சிகிச்சை எனச் செசல்கிறது, மோடி கும்பல். எல்லாம் கடைந்தெடுத்த பொய்! ஆயிரம், ஐநூறு ரூபாய் நோட்டுக் கத்தைகளாகப் பதுக்கி வைப்பதற்கு கருப்புப் பணக்காரர்கள், கள்ளப் பணக்காரர்கள், இலஞ்ச ஊழல் பேர்வழிகள் என்ன அவ்வளவு முட்டாள்களா? வட்டி, வட்டிக்குமேல் வட்டி, அதற்குக் குட்டி என்று பணத்தை புழக்கத்தில் விட்டால் தான் இலாபம் கொள்ளை கொள்ளையாகக் கொழிக்கும். இது பண முதலைகளுக்குத் தெரியாதா?

பண முதலைகள் பணத்தை இலாபம் கொழிக்கும் தொழில்களில் முதலீடு செய்து வைத்திருக்கிறார்கள். தங்களுக்கே பல முறைகேடான வழிகளில் குவியும் பணத்தை மட்டுமல்ல; வங்கிகள், இன்சூரன்சு நிறுவனங்கள், சேமிப்புகள், வைப்பு நிதிகள்,சேமநல நிதிகள் - என இன்னும் இருக்கும் மக்களுக்குச் சொந்தமான சிறுதொகையையும் பிடுங்கி முதலீடு செய்து கொள்ளையடிக்கத்தான் அலைகிறார்கள். அவர்களா ஆயிரம், ஐநூறு ரூபாய் நோட்டுகளை ரொக்கமாக இருட்டறைகளிலும் பதுங்கு குழிகளிலும் மறைத்து வைத்திருப்பார்கள்? அதிகபட்சம் போனால், அந்நிய நாட்டு வங்கிகளிலும் உள்நாட்டில் பங்குச் சந்தைகளிலும், தங்கம், வெள்ளி, வைரம், நிலங்கள், கட்டிடங்கள், தீவுகளாகவும்கூட அசையும், அசையாச் சொத்துக்களாகவும், கடன்-பங்கு பத்திரங்களாகவும் அல்லவா வாங்கிக் குவித்து வைத்திருக்கிறார்கள். சசிகலா - ஜெயலலிதா, வைகுண்டராஜன், பி.ஆர்.பி. முதல் நத்தம் விவநாதன், ஒரத்தநாடு வைத்தியலிங்கம், எடப்பாடி பழநிச்சாமி, சைதை துரைசாமி வரையிலானவர்கள் மேற்கண்ட தொழில்

இரகசியத்தை அறிந்து வைத்திருக்கிறார்கள்.

ஆகவே, இத்தகைய நவீனத் தொழில் மோசடிகளில் ஈடுபட்டுவரும் பனியா-மார்வாடிகள் - சேட்டுகள், பார்ப்பன-பார்சிகள் மற்றும் அந்தந்த மாநிலங்களின் ஆதிக்கசாதி, மேட்டுக்குடி அதிகார வர்க்கத்தினர் மோடியின் தற்போதைய பொருளாதார அதிரடி அறுவைச் சிகிச்சையினால் பாதிக்கப்படப் போவதில்லை. மேலும், மோடியின் இந்தப் பொருளாதார அதிரடி அறுவைச் சிகிச்சை பற்றி கடந்த ஆறு மாதங்களாவே அரசு அதிகாரத்தின் தாழ்வாரங்களில் பேசப்பட்டு வந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் கடந்த ஆறு மாதங்களாகவே எச்சரிக்கப்பட்டு அமுக்க வேண்டியவற்றை அமுக்கிவிட்டார்கள்.




பணமதிப்புநீக்கநடவடிக்கையைப்பாராட்டியும், ஏ.டி.எம். இல்லையென்றால் என்ன, பேடிஎம்-க்கு மாறுங்கள் எனக் கோரியும் வெளியிடப்பட்ட சீன நிறுவனமான ‘‘பே டிஎம்’’-மின் விளம்பரம்.

ஆகவே மக்களுக்குத்தான் மோடியின் அறுவைச் சிகிச்சை, அதிர்ச்சி வைத்தியம் எல்லாம் இரகசியமாக வைக்கப்பட்டது. இப்போது விவசாயத் தொழிலாளர்கள், உதிரித் தொழிலாளர்கள் தவிர, எல்லா உழைப்பாளர்களும் - தலையில் சுமையாக வந்து காய்கறி விற்பவர்கள், ஊசி-பாசிக்காரர்கள் தவிர - எல்லா வணிகர்களும் ஆயிரம், ஐநூறு ரூபாய் நோட்டுகளில் பணப் புழக்கம் செய்வது என்றாகி விட்டது. ஏழைகள், நடுத்தர மக்களாகிய இந்த அமைப்புசாரா உழைப்பாளர்களுக்குத்தான் மோடியின் அறுவைச் சிகிச்சை, அதிர்ச்சி வைத்தியம் தரப்படுகிறது. காசோலைகள் கிழிப்பவர்களுக்குப் பிரச்சினையில்லை; கடன் அட்டைகள் வைத்திருப்பவர்கள் நட்சத்திர ஓட்டல்களில் வகைவகையாகச் சாப்பிடலாம்; சூப்பர் மாக்கெட்டுகளில் பொருட்கள் வாங்கலாம். ஏ.டி.எம். கார்டுகள் மட்டுமே வைத்திருப்பவர்கள்தாம் இரண்டு நாட்கள் பாதிக்கப்படுவர்கள்.

ஆனால், இவை ஏதும் இல்லாது இன்றைய உணவுக்கு, பயணத்துக்கு, உறவுக்காரரின் மருந்துக்கு, குழந்தைகளின் கல்வி கட்டணத்துக்கு, பெண்ணின் திருமணத்துக்கு என ஐநூறு, ஆயிரம் ரூபாய் நோட்டுகள் மட்டுமே வைத்திருக்கும் ஏழைகள், நடுத்தர மக்கள் என்ன செய்வார்கள்? இன்றைய வியாபாரத்துக்கு சரக்கு வாங்க ஐநூறு, ஆயிரம் ரூபாய் நோட்டுகள் மட்டுமே வைத்திருக்கும் வணிகர்கள் என்ன செய்வார்கள்? அரசின் தலைவர் மோடி கேட்கிறார் - நாட்டுக்காக இந்தச் சிறு சிரமத்தைக்கூட தாங்கிக் கொள்ளக் கூடாதா? தியாகத்தைக் கூட செய்யக்கூடாதா? - என்று.

மக்கள் ஏன், எதற்காக அவற்றைத் தாங்கிக் கொள்ள வேண்டும்? கள்ளப்பணம், கருப்புப் பணம் குவியவும், இலஞ்ச ஊழல் பெருகவும் மக்களா காரணம்? அந்தக் குற்றங்களுக்காக மக்கள் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்? அத்தகைய குற்றங்கள் பெருகக் காரணமானவர்களைத்தானே தண்டிக்க வேண்டும்?

என்னைத் தேர்ந்தெடுங்கள்; நான் பிரதமரானால் கள்ளப்பணம், கருப்புப்பணம், இலஞ்ச ஊழலை ஒழிப்பேன்; ஒவ்வொரு குடும்பத்தின் வங்கிக் கணக்கிலும் 15 இலட்சம் ரூபாய் போடுவேன் என்று மோடி வாக்குறுதி கொடுத்தார். ஆட்சியைப் பிடித்த பிறகு, நாம் உழைத்துச் சம்பாதித்த பணமும் செல்லாது என்று காகிதக் குப்பையாக்கிவிட்டார்.

வளர்ச்சி, முன்னேற்றம், வேலைவாய்ப்பு, திறமையான அரசு நிர்வாகம் என்றார். நாடு நாடாகச் சுற்றி அவர் கொண்டு வந்தது இதுதான். ஆளவந்தார்களின் வாக்குறுதிகள் பொய்யானவை; அவர்கள் எல்லா வகையிலும் தோற்றுப் போய்விட்டார்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டுவிடக் கூடாது, அதற்காக மக்களுக்கு ஏதாவது அறுவைச் சிகிச்சையும் அதிர்ச்சி வைத்தியமும் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும்; அதைத்தான் இப்போது மோடி செய்கிறார். இட்லரையும் இந்திராவையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

நேரு, சாஸ்திரிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த இந்திரா காந்தி 1967 பொதுத்தேர்தல்களில் 9 மாநிலங்களில் தோற்று, தப்பித்தோம் பிழைத்தோம் என்று மத்தியில் ஆட்சியைப் பிடித்தார். அரசியல், பொருளாதார நெருக்கடியிலும் சிக்கிக்கொண்டார். இண்டிகேட், சிண்டிகேட் என்று காங்கிரசுக் கட்சியைப் பிளந்தார்; மன்னர் மானிய ஒழிப்பு, 14 வங்கிகள் தேசியமயம் என்று சோசலிச நாடகமாடி மீண்டும் ஆட்சியைப் பிடித்தாலும் நெருக்கடியைத் தீர்க்க முடியவில்லை. இலஞ்ச, ஊழலில் சிக்கி அவர் அம்பலமானதும் மக்கள் போராட்டங்கள் வெடித்தன. தேர்தல் தில்லுமுல்லுகள் காரணமாக பதவியையும் இழந்தபோது அவசரகால பாசிச ஆட்சியைப் பிரகடனம் செய்தார். இட்லரும் அரசியல், பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டபோது ஜெர்மனியின் நாடாளுமன்றமாகிய ரைஸ்டாக்கைத் தானே கொளுத்திவிட்டு, அவரது எதிர்த்தரப்பினராகிய கம்யூனிஸ்டுகள் மீது பழிபோட்டார். பின்னர், அவர்கள் நிரபராதிகளென நிரூபிக்கப்பட்டது.

இந்திரா, இட்லர் போன்ற பாசிஸ்டுகள் மக்களுக்குத் தாம் வழங்கிய வாக்குறுதிகளில் தோற்றுப்போய், நெருக்கடியில் சிக்கி அம்பலமாகிவிடும்போது மக்களைத் திசைதிருப்பிவிட இப்படி ஏதாவது அதிரடி சாகச நடவடிக்கைகளை அரங்கேற்றுவதுண்டு. அதிலும் தமது ஏகபோக முதலாளித்துவக் கூட்டாளிகளின் நலன்களையே முன்நிறுத்துவதுண்டு. மோடியும் இதைத்தான் இப்போது செய்கிறார்.

12.11.2016 - **மக்கள் அதிகாரம்**, தமிழ்நாடு.

## மோடி வித்தை :

# மக்களின் சேமிப்பை உறிஞ்சவரும் பிளாஸ்டிக் "அட்டைகள்!"

பணமற்ற பொருளாதாரம் கருப்புப் பணத்தை, ஊழலை ஒழிக்காது. மாறாக, பொதுமக்களை, சிறு வணிகர்களைப் பன்னாட்டு முதலாளிகள், உள்நாட்டு தரகு முதலாளிகளின் இலாப வேட்டைக்கான தீனியாக மாற்றும்.

1,000, 500 ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவித்த மோடியின் துக்ளக் தர்பார் நடவடிக்கை கருப்புப் பணத்தை மட்டுமல்ல, கள்ளப் பணப் புழக்கத்தைக்கூட ஒழித்துவிடாது என்பதை முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் தொடங்கி வங்கி வாசலில் காத்துக் கிடக்கும் பாமரன் வரை பலரும் கூறிவிட்டனர். இந்த நடவடிக்கையால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடையும், முதலீடு குறையும், வேலையிழப்புகள் ஏற்படும் எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள். அதற்கான அறிகுறிகள் இப்பொழுதே தென்படத் தொடங்கிவிட்டதை விவசாயிகளும், சிறு வணிகர்களும், தினக்கூலித் தொழிலாளர்களும் படும்பாடு எடுத்துக் காட்டுகிறது.

இந்தப் பணமதிப்பு நீக்க நடவடிக்கை ஒரு மோசடி என்றால், இதனின் நோக்கம்தான் என்ன? இந்த இரண்டரை வருட ஆட்சியில் பல முனைகளிலும் தோல்வியைச் சந்தித்துள்ள மோடியும் அவரது அரசும், தமது பிம்பத்தைத் தூக்கி நிறுத்திக் கொள்ளவா? அல்லது, எதிர்வரவுள்ள உ.பி., பஞ்சாப் மாநிலத் தேர்தல்களில் வலுமிக்க எதிர்க் கட்சிகளை முடக்கிப் போடும் நோக்கத்திற்காகவா? அல்லது இந்த அரசியல் காரணங்களுக்கு அப்பால் வேறு எதுவும் மறைமுகத் திட்டம் மோடிக்கு இருக்கிறதா?

இந்தக் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ஆம் எனப் பதில் கூறலாம். பீற்றிக் கொள்ளப்படும் இந்தப் பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் பின்னே மோடியின் சுயநல அரசியல் கணக்குகளும், மோடியைப் பெருஞ் செலவில் பிரதமராக அமர்த்தியிருக்கும் தரகு முதலாளிகளின் நலன்களும் மறைந்திருக்கின்றன.

பிளாஸ்டிக் பண அட்டைகளைப் பெற்று வியாபாரம் நடத்தும்படி வலிந்து தள்ளப்பட்டுள்ள சிறு வணிகம்.




பிரதமர் நரேந்தர மோடி 1,000, 500 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பை நவம்பர் 8 அன்று இரவில் வெளியிட்டார். மறுநாள் காலை நாளிதழிலேயே, இந்த அறிவிப்பை வரவேற்று மோடியின் படத்தைப் போட்டு முழுப் பக்க விளம்பரத்தை வெளியிட்டது பே டிஎம் என்ற நிறுவனம். கைபேசி வழியாக பணப் பரிமாற்ற வர்த்தகத்தை நடத்தி வரும் நிறுவனம்தான் பே டிஎம்.

பே டிஎம் போன்ற தனியார் பணப் பரிவர்த்தனை நிறுவனங்கள் மட்டுமின்றி, பொதுத்துறை வங்கிகளும்கூட பணப் பரிமாற்றத்திற்குத் தங்களின் செயலிகளைப் பயன்படுத்துமாறும், அவற்றை எப்படி இயக்க வேண்டும் என்ற விளக்கத்தோடும் நவம்பர் 8-க்குப் பிறகு விளம்பரங்களை வெளியிட்டன.

இதே நேரத்தில்தான் மைய நிதியமைச்சர் அருண் ஜெட்லி, "இந்தக் கருப்புப் பண ஒழிப்பு நடவடிக்கை இந்தியாவைப் பணமற்ற பொருளாதாரத்திற்கு உந்திக்கொண்டு போகும் முதல் அடி" எனத் தெரிவித்தார்.

பணத்திற்குப் பதிலாக, கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு போன்ற அட்டைகளையும், பணப் பரிமாற்ற செயலிகளையும் பயன்படுத்திப் பொருட்களை வாங்குவதும் விற்பதுமான வர்த்தக நடவடிக்கைகளைத்தான் பணமற்ற பொருளாதாரம் எனக் குறிப்பிடுகிறார்கள். கருப்புப் பணம் உருவாவதற்கும், அதனைப் பதுக்கி வைப்பதற்கும் பணப் பொருளாதாரம்தான் காரணமாக இருப்பதாகவும், பணமற்ற பொருளாதாரத்திற்கு மாறிச்

செல்லுவதன் மூலம் கருப்புப் பணத்தையும் இலஞ்சத்தையும் அறவே ஒழித்துக்கட்டிவிட முடியுமென்றும்; பண வீக்கத்தை, அதாவது விலைவாசியைக் கட்டுப்படுத்தி, கடனுக்கான வட்டியையும் குறைத்துவிட முடியுமென்றும் பணமற்ற பொருளாதாரம் குறித்துக் கவர்ச்சிகரமான பிரச்சாரத்தை நடத்தி வருகிறது, பா.ஜ.க.

❍ ● ❍




வங்கிகளில், ஏ.டி.எம்.களில் பணம் எடுக்க முடியாதவர்கள், பிக் பஜார் என்ற தனியார் நிறுவனக் கடைகளில் கார்டைத் தேய்த்துப் பணம் எடுத்துக் கொள்ளும் வழிமுறைகள் குறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள விளம்பரம்.

நாட்டிலுள்ள 1,34,000 வங்கிக் கிளைகளில் 84,000 வங்கிக் கிளைகள் பெரு நகரங்களிலும், நகர்ப்புற பகுதிகளில் மட்டுமே இயங்கி வருகின்றன. அதாவது, ஒவ்வொரு ஐந்து கிராமங்களுள் நான்கு கிராமங்களில் வங்கிக் கிளைகளே இல்லை என்பதுதான் இதிலிருந்து கிடைக்கும் உண்மை. ஒவ்வொரு ஐயாயிரம் பேரில் ஒருவரிடம் மட்டுமே கிரெடிட் கார்டு உள்ளது. ஒவ்வொரு ஆயிரம் பேரில் ஐந்து பேரிடம் மட்டுமே டெபிட் கார்டு உள்ளது. கிரெடிட் மற்றும் டெபிட் கார்டு அட்டை வைத்திருப்பவர்களுள் பெரும்பாலோர் அதனைப் பொருட்களை வாங்குவதற்குப் பயன்படுத்துவதில்லை. இந்த பிளாஸ்டிக் பண அட்டைகளை வைத்திருப்போரில் 90 சதவீதப் பேர், அவற்றை ஏ.டி.எம். மிஷின்களிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்ள மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர்.

நாட்டிலுள்ள 1.4 கோடி வர்த்தக நிறுவனங்களில் வெறும் 14 இலட்சம் கடைகளில் மட்டுமே பண அட்டைகளைப் பயன்படுத்தும் வசதிகள் உள்ளன. நாட்டின் மொத்த தொழிலாளர்களுள் 33 சதவீதம் பேர் - ஏறத்தாழ 15 கோடி தொழிலாளர்கள் பணக் காகிதத்தை மட்டுமே நம்பியிருக்கும் அமைப்புசாரா தினக் கூலி தொழிலாளர்கள். இவை அனைத்திற்கு மேலாக ஒவ்வொரு நாளும் நடைபெறும் வர்த்தக நடவடிக்கைகளுள் 87 சதவீதம் பணப் பரிமாற்றம் வழியாகத் தான் நடைபெறுகிறது.

இந்தியாவின் வர்த்தக, பொருளாதார நிலவரம் இவ்வாறிருக்க, வங்கிக் கணக்கும், ஸ்மார்ட் போனும், ஆதார் அட்டையும், பண அட்டைகளைத் தேய்க்கும் இயந்திரங்களும் இருந்துவிட்டால் பணமற்ற பொருளாதாரத்திற்குக் கைசொடுக்கும் நேரத்தில் மாறிச் சென்றுவிடலாம் என பா.ஜ.க. தலைவர்கள் கதைப்பது கதைகளுக்குக்கூட ஒத்துவராத கற்பனை. இன்னொருபுறமோ, பா.ஜ.க.வின் இந்த விபரீதக் கற்பனை சாதாரண மக்கள் மீது ஏவி விடப்படும் பொருளாதார வன்முறையாகும்.

இரண்டாவதாக, பணமற்ற பொருளாதாரத்தின் மூலம் கருப்புப் பணத்தை ஒழித்துவிட முடியும் என்ற பா.ஜ.க.வின் வாதம் மாபெரும் பொய். முதலாளித்துவ பொருளாதாரத்தின் கீழ் பணத்தை முற்றிலுமாக ஒழித்துக்கட்டிவிட முடியாது என்பது ஒருபுறமிருக்க, இந்தியாவைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக பிளாஸ்டிக் பணத்தைப் பயன்படுத்தும் ஏகாதிபத்திய நாடுகளில் கூட கருப்புப் பொருளாதாரம் ஒழிந்துவிடவில்லை. அமெரிக்காவில் 1,60,000 கோடி அமெரிக்க டாலர்கள் அளவிற்கும், ஜப்பானில் 48,000 கோடி அமெரிக்க டாலர்கள் அளவிற்கும் கருப்புப் பொருளாதாரம் கோலோச்சுவதாகக் குறிப்பிடுகிறது, உலக வங்கியின் அறிக்கை.

உலகிலேயே பிரேசில்தான் பணப்புழக்கம் குறைவாகவும், பிளாஸ்டிக் அட்டை புழக்கம் அதிகமாகவும் உள்ள நாடு. ஆனால், பிரேசிலில்தான், பணப்புழக்கம் அதிகமாக உள்ள நாடுகளைக் காட்டிலும் இலஞ்சமும் கருப்புப் பணமும் பிசாசுத்தனமாகத் தலைவிரித்தாடுவதைப் பல்வேறு புள்ளிவிவரங்கள் அம்பலப்படுத்துகின்றன.

கார்ப்பரேட் நிறுவனங்களின் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம் மூலம்தான் பெருமளவில் கருப்புப் பணம் திரள்கிறது. இந்த வர்த்தகத்திற்குரிய பில்கள் அனைத்தும் வங்கிகளின் வழியாகத்தான் சென்று வருகின்றன. இப்படிச் சட்டபூர்வமாக மட்டுமின்றி, சட்டவிரோத வழிகளிலும் கருப்புப் பணத்தைக் கடத்துவதற்கு புரோக்கர்களைப் போல வங்கிகள் செயல்பட்டுவருவதும் அம்பலமாகியிருக்கிறது. இந்தியாவைச் சேர்ந்த ஹெச்.டி.எஃப்.சி. என்ற தனியார் வங்கி போதை மருந்து கடத்தல் பணத்தைக் கைமாற்றிய விவகாரமும், டெல்லியிலுள்ள பேங்க் ஆஃப் பரோடா வங்கிக் கிளையொன்றின் வழியாகப் போலியான ஏற்றுமதி ரசீதுகள் தயாரிக்கப்பட்டு, கருப்புப் பணம் கடத்தப்பட்ட விவகாரமும் வங்கிகளின் குற்றப் பின்னணியை எடுத்துக்காட்டும் சமீபத்திய உதாரணங்கள்.

உண்மை இவ்வாறிருக்க, மோடியும் பா.ஜ.க. கும்பலும் வங்கிகளின் வழியாக நடைபெறும் வர்த்தக நடவடிக்கைகள்தான் வெளிப்படையானவை என்றும், பணப் பரிமாற்றம் மூலம் நடைபெறும் வர்த்தகம்

அனைத்தும் கருப்பென்றும் அபாண்டமாகப் பழி போடுகின்றன. குறிப்பாக, வரி கட்டாமல் ஏய்க்கும் நோக்கில்தான் சிறு வணிகர்கள் பணமற்ற பொருளாதாரத்திற்கு மாற மறுக்கிறார்கள் எனக் குற்றஞ் சுமத்துகிறார்கள். பணம் கொடுத்துப் பொருட்களை வாங்கும் பொது மக்களை அக்குற்றத்திற்கு உடந்தையாக இருப்பதாக அவமதிக்கிறார்கள்.



ரசீதுகளே இல்லாமல் சிறு வணிகம் நடந்துவருகிறது என்ற குற்றச்சாட்டில் எந்தளவிற்கு உண்மை இருக்கிறதோ, அதைவிடப் பல மடங்கு அளவிற்கு கம்ப்யூட்டர் மூலம் ரசீதுகளைத் தயாரித்து வியாபாரம் நடத்தும் மால்களும், கார்ப்பரேட் நிறுவனங்களும் வரி ஏய்ப்பில் ஈடுபடுகின்றன என்பதும் உண்மை. வரி ஏய்ப்பைத் தடுத்து நிறுத்தி, வரி வருமானத்தை அதிகரிப்பதுதான் மோடி அரசின் உண்மையான நோக்கமென்றால், அவர்கள் வோடாஃபோன் மீதும், நோக்கியா மீதும்தான் முதலில் பாய வேண்டும். ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும் ஐந்து இலட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகள் வாரி வழங்குவதை நிறுத்த வேண்டும்.

**இந்தியாவைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக பிளாஸ்டிக் பணத்தைப் பயன்படுத்தும் ஏகாதிபத்திய நாடுகளில்கூட கருப்புப் பொருளாதாரம் ஒழிந்துவிடவில்லை. அமெரிக்காவில் 1,60,000 கோடி அமெரிக்க டாலர்கள் அளவிற்கும், ஜப்பானில் 48,000 கோடி அமெரிக்க டாலர்கள் அளவிற்கும் கருப்புப் பொருளாதாரம் கோலோச்சுவதாகக் குறிப்பிடுகிறது, உலக வங்கியின் அறிக்கை.**

அதனைச் செய்வதற்கு விருப்பமோ, துணிச்சலோ இல்லாத மோடி கும்பல், தனது வரி வருவாயை அதிகரித்துக் கொள்வதற்கு சிறு வணிகர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினரைக் குறி வைக்கிறது. ஏற்கெனவே 28 சதவீத அளவிற்கு மறைமுக வரிகளும், அதற்கும் மேலே செஸ் வரிகளும் சுமத்தப்பட்டுச் சுரண்டப்பட்டு வரும் இவர்களை நேரடி வரியான வருமான வரி வலைக்குள்ளும் சிக்க வைப்பதுதான் மோடியின் திட்டம். ஒருபுறம் வரி விதிப்புகள் மூலமும், இன்னொருபுறம் பொதுமக்களின் கைகளிலுள்ள ரொக்கப் பணத்தையும், சேமிப்புகளையும் வங்கிகளின் கஜானாவிற்குக் கொண்டு வருவதன் மூலமும் அரசின் பற்றாக்குறையை ஈடுகட்டிக் கொள்வதோடு, இந்தியத் தரகு முதலாளிகளுக்குத் தேவைப்படும் மூலதனத்தையும் திரட்டிக் கொடுக்கும் திட்டத்தோடுதான் இந்த பணமதிப்பு நீக்க நடவடிக்கை அறிவிக்கப்பட்டிருக்கிறது; பணமற்ற பொருளாதாரம் குறித்து ஆரவாரம் செய்யப்படுகிறது.

2015-16-ஆம் நிதியாண்டில் நாட்டிலுள்ள இருபதுக்கும் மேற்பட்ட பொதுத்துறை வங்கிகளுள் ஆறு பொதுத்துறை வங்கிகள் மட்டும்தான் இலாபம் ஈட்டியுள்ளன. ஸ்டேட் பாங்க் குழுமம் உள்ளிட்ட அந்த ஆறு வங்கிகளின் இலாபமும் அதற்கு முந்தைய நிதியாண்டைவிடக் கணிசமாகக் குறைந்திருக்கிறது. பொதுத்துறை வங்கிகள் இப்படி நட்டத்தில் சிக்கி, திவாலாகும் நிலை நோக்கிச் செல்லத் தொடங்கியிருப்பதற்குக் காரணமே வங்கிகளின் வாராக் கடன்தான்.

நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்றபொழுது, 2014-15ஆம் நிதியாண்டில் 2.67 இலட்சம் கோடியாக இருந்த பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன், 2015-16ஆம் நிதியாண்டின் இறுதியில் 4.76 இலட்சம் கோடியாகவும், ஜூன் 2016 இறுதியில் 6.50 இலட்சம் கோடி ரூபாயாகவும் அதிகரித்திருக்கிறது. வாராக் கடன் என வரையறுக்கும் நிலையில் உள்ள 3.30 இலட்சம் கோடி ரூபாய்களையும் இதோடு சேர்த்தால், பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன், அதனின் மொத்தக் கடனில் 16 சதவீதமாகும் எனக் குறிப்பிடுகிறது கிரெடிட் சுயிஸ் நிறுவனம்.

ரிசர்வ் வங்கி மார்ச் 2015-இல் வெளியிட்ட அறிக்கையில், வங்கிகளின் மொத்த வாராக் கடனில் 100 நிறுவனங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகை ஏறத்தாழ 20 சதவீதமாகும் எனக் குறிப்பிட்டிருக்கிறது. அவற்றுள் ஒரு பத்து கார்ப்பரேட் நிறுவனங்கள் கடன் வாங்கி ஏப்பம் விட்ட தொகை மட்டும் 56,467 கோடி ரூபாய்.

இந்தத் தரகு முதலாளிகளிடமிருந்து கடனை வசூலித்து பொதுத்துறை வங்கிகளின் நிதிநிலையைச் சீராக்க அரசு தயாராக இல்லை. ஸ்டேட் வங்கிக் குழுமத்தின் இலாபம் 67 சதவீதம் சரிந்துவிட்ட நிலையில்கூட, அவ்வங்கிக் குழுமம் 60 முக்கிய நிறுவனங்கள், பிரமுகர்கள் செலுத்த வேண்டிய ஏழாயிரம் கோடி ரூபாய் பெறுமான கடன்களைச் சமீபத்தில் தயங்காமல் தள்ளுபடி செய்திருக்கிறது. இந்தத் தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களில் மோடி அரசால் இலண்டனில் வைத்துப் பாதுகாக்கப்படும் தரகு முதலாளி விஜய் மல்லையாவின் கிங் ஃபிஷர் நிறுவனம் செலுத்த வேண்டிய

கடன் தொகை 1,201 கோடி ரூபாய். அரசு வங்கி களால் தள்ளுபடி செய்யப்படும் வாராக் கடன்கள் அனைத்தும் தரகு முதலாளிகளிடம் கருப்புப் பணமாகத் திரள்கிறது என்பதே உண்மை.

வாராக் கடன்களால் திவாலாகும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கும் பொதுத் துறை வங்கிகளை மீட்டெடுப்பதற்கும், அவை புதிய கடன்களை வழங்குவதற்கும், ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் விதித்துள்ள பாஸல்-3 நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மார்ச் 2019-க்குள் பொதுத் துறை வங்கிகளுக்கு 2,40,000 கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படுகிறது. இவ்வளவு பெரிய தொகையை ஒரே மூச்சில் வங்கிகளில் திரட்டிக் கொள்ளும் மறைமுக நோக்கத்தோடுதான் பணமதிப்பு நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.


மேற்கு வங்கத்தின் சுந்தர வனப் பகுதியில் அமைந்துள்ள, 5,000 பேர் வசிக்கும் கோராமாராவைச் சுற்றி 12 கி.மீ. தூரத்திற்கு எங்கும் வங்கி வசதிகள் கிடையாது.

பணமதிப்பு நீக்கப்பட்ட 14 இலட்சம் கோடி ரூபாயில் பொதுமக்கள் கியூவில் நின்று மாற்றிக் கொண்டது போக, வங்கிகளில் சேமிப்பாகச் சேரும் தொகை ஒன்பது இலட்சம் கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஒன்பது இலட்சம் கோடி ரூபாயில் வங்கிகள் ரிசர்வ் வங்கியில் கட்டாயச் சேமிப்பாக செலுத்த வேண்டிய தொகை 2.25 இலட்சம் கோடி ரூபாயாகும். இந்தத் தொகை மிகக் குறைந்த வட்டியில் அரசுக்குக் கடனாக அளிக்கப்படும். மேலும், வங்கிகளில் செலுத்தப்பட்ட ஒன்பது இலட்சம் கோடி ரூபாய் மூலம் அரசுக்கு 90,000 கோடி ரூபாய் வருமான வரியாகக் கிடைக்கும். இவை போக, வங்கிகளில் செலுத்தப்படாமல் கைவிடப்படும் கருப்புப் பணம் 2.5 இலட்சம் கோடி ரூபாயாக இருக்கும் என அரசு மதிப்பிட்டிருக்கிறது. இதுவும் அரசின் நிதி அறிக்கையில் வரவாகக் காட்டப்பட்டு, இந்த ஒரு நடவடிக்கையின் மூலம் மட்டும் அரசிற்கு நோகாமல் கிடைக்கும் வருமானம் 5.5 இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டும் என மதிப்பிடப்படுகிறது. அரசிற்குக் கிட்டும் வருமானத்திற்கு அப்பால், வங்கிகளிடம் பொதுமக்களின் சேமிப்பாக 6.75 இலட்சம் கோடி ரூபாய் இருக்கும் என்றும், இந்தப் பணத்தைத் திரும்ப எடுப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளால் இந்தச் சேமிப்பின் பெரும்பகுதி வங்கிகளின் புழக்கத்திலேயே இருத்தப்படும் என்றும் மதிப்பிடப்படுகிறது.

இந்தப் பணத்தைக் கொண்டு பொதுமக்களுக்குத் தேவையான சாலை வசதி, சுகாதார வசதிகளைச் செய்து தரப் போவதாகக் கூறுகிறது, மோடி அரசு. இது காலங்காலமாகச் சொல்லப்பட்டு வரும் பொய். பொதுத் துறை நிறுவனப் பங்குகளை விற்றுக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு கல்வி போன்ற மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்யப் போவதாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேறியிருக்கிறதா? கல்வி, சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு என்ற பெயர்களில் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வரும் செஸ் வரிகள், அவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்டதுண்டா? பொதுமக்களின் பணம் வங்கிகளில் கோடிக்கணக்கில் குவியத் தொடங்கியவுடனேயே, பிக்ஸட் டெபாசிட்டுகளுக்கான வட்டித் தொகையைக் குறைத்துவிட்ட மோடி அரசு, பொதுமக்களின் நலனுக்காக இந்தப் பணத்தைச் செலவிடும் எனக் காதில் பூ முடிந்தவன்கூட நம்ப மாட்டான்.

மாறாக, இந்தப் பணம் முழுவதும் தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் குறைந்த வட்டியில் கடனாகத் தரப்படும். அரசு-தனியார் கூட்டுத் (பி.பி.பி.) திட்டங்களில் அரசின் முதலீடாகக் கொட்டப்படும். அரசின் பற்றாக்குறையும், வாராக் கடனால் வங்கிகளுக்கு ஏற்பட்டிருக்கும் நட்டமும் ஈடு செய்யப்படும்.

சுருக்கமாகச் சொன்னால், கருப்புப் பணத்திற்கு எதிராக மோடி தொடங்கியிருக்கும் இந்தப் புனிதப் போர், பொது மக்களின் கைகளில் இருந்த சேமிப்புகளை வலுக்கட்டாயமாகப் பிடுங்கியிருக்கிறது. சில்லறைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி பணமற்ற பொருளாதாரத்திற்கு மாறும்படியான நிர்ப்பந்தம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நிர்ப்பந்தம் வாயிலாக, பே டிஎம் உள்ளிட்ட பணப் பரிமாற்ற நிறுவனங்கள், ரிலையன்ஸ், எஸ்ஸார் உள்ளிட்ட தரகு முதலாளிகள் தொடங்கவுள்ள பேமண்ட் வங்கிகளின் வர்த்தகத்திற்கும் இலாபத்திற்கும் உத்தரவாதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நரேந்திர மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தின் பொழுது இந்தியாவிற்கு நல்ல நாள் பிறக்கப் போவதாக உடுக்கை அடித்தார். பொது மக்கள் தமக்குச் சொந்தமான பணத்தை எடுக்க வங்கி வாசலில் காத்துக் கிடக்கிறார்கள். இந்தியத் தரகு முதலாளிகள் வங்கிகளில் முடக்கப்பட்டிருக்கும் மக்களின் பணத்தில் மஞ்சக் குளிக்கப் போகிறார்கள். மோடியும் பா.ஜ.க.வும் பிரச்சாரம் செய்த நல்ல நாள் இப்படித்தான் விடிந்திருக்கிறது.

● செல்வம்

## மோடி வித்தை :

# விவசாயிகளின் தலையில் இறங்கிய இரட்டை இடி!

**ஆடிப் பட்டத்தில் விளைந்த தானியங்களை விற்கவும் முடியாமல், தை பட்ட விதைப்பைத் தொடங்குவதற்குப் பணத்தைப் புரட்டவும் முடியாமல் செயற்கையான நெருக்கடிக்குள் விவசாயிகள் சிக்க வைக்கப்பட்டுள்ளனர்.**

உழைக்கும் மக்களின் தாங்கொணா துயரத்தைச் சித்தரிக்கும் “இவனோடும் சண்டை, நமக்கு இயற்கையோடும் சண்டை” என்றொரு ம.க.இ.க. பாடல் வரி உண்டு. தமிழக காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் கையறு நிலை இந்தத் துன்பியல் பாடல் வரியைத்தான் நினைவுபடுத்துகிறது. காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடகம் மறுத்ததால், நடப்பு ஆண்டிலும் குறுவை சாகுபடி இல்லாமல் போனது. தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் காரணமாக, சம்பா சாகுபடிக்காவது தண்ணீர் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக் கொண்டிருந்த வேளையில், “காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க உச்சநீதி மன்றம் உத்தரவிட முடியாது” என வாதிட்டு, அந்த நம்பிக்கையில் மண்ணை வாரிப்போட்டது, மோடி அரசு. அரசு அதிகார அமைப்புகள் துரோகம் செய்துவிட்ட நிலையில், பருவ மழையை நம்பி விதைப்பைத் தொடங்கினார்கள், விவசாயிகள். பருவத்தே பெய்ய வேண்டிய மழை பொய்த்து, டெல்டா விவசாயிகளைத் தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளியது. இப்படி அடிக்கு மேல் அடி விழுந்து கொண்டிருந்த நிலையில், மோடி அரசு அறிவித்த பணமதிப்பு நீக்க நடவடிக்கை சம்பாவுக்கும், அதனைத் தொடரும் தாளடிக்கும் சேர்த்தே சாவுமணி அடித்துவிட்டது.

கடந்த 55 ஆண்டுகளில் இப்படியொரு கொடூரமான அவல நிலையை நாங்கள் கண்டதில்லை என்கிறார்கள் டெல்டா மாவட்ட விவசாயிகள். ஆனால், மோடியோ, “ஐம்பது நாட்கள் பொறுத்துக் கொள்ளுங்கள், இந்தியா ஜொலிக்கத் தொடங்கிவிடும்” என வாய்ப்பந்தல் போடுகிறார். எந்த இந்தியா, எந்த இந்தியர்கள்? - மோடியிடமும், அவரது துதிபாடிகளிடமும் நாம் கேட்க வேண்டிய கேள்வி இதுதான். விதைப்பைத் தவறவிட்ட பிறகு, விவசாயிகளால் எதனை அறுவடை செய்ய முடியும்? பஞ்சத்தை, பட்டினியை, தலைக்கு மேல் கத்தியாக நிற்கும் கடனை, தற்கொலையை - இவற்றைத் தவிர விவசாயிகளுக்கு வேறென்ன கிடைத்துவிடும், ஐம்பது நாட்களுக்குப் பிறகு.

பூண்டி ஒன்றியம், சோமதேவன்பட்டு கிராமத்தில் கருகிப் போன நெற்பயிர்களை மாடுகள் மேயும் அவலம்.



மோடி அரசின் பணமதிப்பு நீக்க நடவடிக்கை தமிழகத்தின் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமல்ல, நாடெங்குமுள்ள சிறு, நடுத்தர விவசாயிகளுக்கு, விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு மரண அடியாய் இறங்கியிருக்கிறது. இந்திய கிராமங்களை ஒரு பேரழிவின் வாசலில் கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது.

நவம்பர் மாதம் இந்திய விவசாயிகளுக்கு முக்கியமானதொரு பயிர்க் காலம். தமிழகத்தில் காரி காலப் பயிர்களும் (தை பட்டம்), வட இந்திய மாநிலங்களில் ராபி பயிர்களும் பயிரிடும் காலம். நெல், கோதுமை, கடுகு, கொண்டைக் கடலை, பச்சைப் பயறு, உருளைக்கிழங்கு, அவரை உள்ளிட்ட உணவுப் பயிர்களும், காய்கறிகளும் இந்தப் பருவத்தில்தான் பயிரிடப்படுகின்றன. மேலும், இதற்கு முந்தைய ஆடிப் பட்டப் (காரிஃப்) பயிர்கள் விளைந்து விற்பனைக்கு வரும் காலமும் இதுதான். இப்படிபட்ட நேரத்தில் 500, 1,000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற மோடியின் அறிவிப்பு, விளைந்த பயிர்களை விற்கவும் முடியாத, அடுத்த பட்டப் பயிர்களைப் பயிரிடுவதற்குப்

பணத்தைப் புரட்டவும் முடியாத கடும் நெருக்கடியில் விவசாயிகளைச் சிக்க வைத்துவிட்டது.

குறிப்பாக, கிராமப் புறங்களில் அமைந்துள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களும், மாவட்டக் கூட்டுறவு வங்கிகளும் 1,000, 500 ரூபாய் நோட்டுகளை மாற்றக் கூடாது; சேமிப்பு கணக்குகளில் பணம் போடவோ, எடுக்கவோ விவசாயிகளை அனுமதிக்கக் கூடாது என மைய அரசு விதித்த தடையுத்தரவு, விவசாய நடவடிக்கைகள் அனைத்தையுமே முடக்கிப் போட்டு, விவசாயிகளையும் விவசாயக் கூலித் தொழிலாளர்களையும் பஞ்சம் பிழைக்கப் போகும் நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது.



விதைத்த நெற்பயிரைக் காப்பாற்ற முடியாத துயரத்தால் அகால மரணமடைந்த விவசாயிகள் (இடமிருந்து) கோவிந்தராஜ், ராஜேஷ்கண்ணன், அழகேசன்.

நகர்ப்புற பொருளாதாரம் இயங்குவதற்கு வர்த்தக வங்கிகள் எந்தளவிற்கு முக்கியமானதோ, அதனைவிடப் பல மடங்கு முக்கியமானது கிராமப் புறங்களில் இயங்கி வரும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள். மாநில அரசுகள் அறிவிக்கும் பயிர்க் கடன்கள் மற்றும் வட்டி மானியங்கள் உள்ளிட்ட சலுகைகள் அனைத்தும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம்தான் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இதற்கு அப்பால், விவசாயிகளுக்குத் தேவைப்படும் நகைக் கடன்களை வழங்குவது, பயிர் காப்பீட்டுத் திட்டங்களுக்கான பிரிமியம் தொகையை வசூலித்துக் கொள்வது, உரம் - பூச்சி மருந்து உள்ளிட்ட விவசாய இடு பொருட்களை விற்பது, விவசாயிகளுக்கான சேமிப்பு கணக்குகளைத் தொடங்கிக் கொடுத்து, அவற்றைப் பராமரித்து இயக்குவது - எனப் பல வகையான பணிகளைத் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் செய்து வருகின்றன.

இந்த நிதியாண்டில் தமிழக அரசு விவசாயிகளுக்கு 6,000 கோடி ரூபாய் பயிர்க் கடனையும் 200 கோடி ரூபாய்க்கான வட்டி மானியத்தையும் அறிவித்திருக்கிறது. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் வர்த்தக நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடக் கூடாதென்ற உத்தரவால், 6,000 கோடி ரூபாய் பயிர்க் கடனில் இன்னும் வழங்க வேண்டியுள்ள 4,000 கோடி ரூபாய் பயிர்க் கடனை அளிக்க முடியாமல் அந்தத் திட்டமே முடங்கிப் போய்க் கிடக்கிறது. மற்ற வங்கிகளைப் போல 500, 1000 ரூபாய் நோட்டுக்களை மாவட்ட கூட்டுறவு வங்கிகளும் தொடக்க வேளாண் கூட்டுறவு பெற்றுக் கொள்ளுவதற்கு விதிக்கப்பட்ட தடையாலும், விவசாயிகளின் சேமிப்புக் கணக்குகளில் பணம் போடுவதற்கும் எடுப்பதற்கும் போடப்பட்டுள்ள தடையாலும், விவசாயிகளால் பயிர்க் கடனைச் செலுத்த முடியவில்லை. உரிய தேதியில் பயிர்க் கடனைச் செலுத்த முடியாத நிலையில் வட்டி மானியத்தைப் பெறுவதும் சிக்கலுக்கு உள்ளாகியிருக்கிறது.

> உருளைக்கிழங்கு சாகுபடியில் நாட்டிலேயே இரண்டாவது இடத்திலுள்ள மேற்கு வங்கத்தில், அதனைப் பயிரிடுவதற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியால் ஜமால்பூர் என்ற பகுதியில் மட்டும் இரண்டு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். எனில், அம்மாநிலம் முழுவதும் பாதிக்கப்படும் விவசாயிகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்ப்பதே அச்சமூட்டக் கூடியதாக உள்ளது.

சிறு, நடுத்தர விவசாயிகள் கையில் பணத்தை வைத்துக் கொண்டு விவசாய வேலைகளைத் தொடங்குவதில்லை. பயிர்க் கடன், நகைக் கடன், தானிய ஈட்டுக் கடன் அல்லது தனியாரிடம் பெறும் கந்துவட்டிக் கடன் - இவற்றை நம்பித்தான் பெரும்பாலான விவசாயிகள் சாகுபடியை நடத்தி வருகின்றனர். விதை, உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட விவசாய இடுபொருட்களை வாங்குவதற்கு; நடவுக்கு, நாத்துப் பறிப்பதற்கு, களையெடுப்பதற்கு, தண்ணீர் பாய்ச்சுவதற்கு - என விவசாய வேலைகளைச் செய்யும் கூலித் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு விவசாயிகளுக்கு அன்றாடம் ரொக்கப் பணம் கையில் இருக்க வேண்டும். பணப் புழக்கம் குறைந்துவிட்ட நிலையில், வங்கிகளில் கடன் பெற முடியாத நிலையில், சேமிப்புக் கணக்குகளிலிருந்து பணத்தை எடுக்க முடியாத நிலையில் இந்த விவசாயப் பணிகள் அனைத்துமே முடங்கிப் போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. மாநில அரசின் கடன் திட்டங்கள் முடக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் சாகுபடியை நடத்த வேண்டுமென்றால் கந்துவட்டிக் கும்பலிடமோ குறுநிதி நிறுவனங்களிடமோ கையேந்த வேண்டும். இல்லையென்றால், நிலத்தைத் தரிசாகப் போட வேண்டும் என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர்.

அரசு அதிகாரிகளின் நிர்பந்தத்திற்குப் பணிந்து நேரடி நெல் விதைப்பை நடத்தி முடித்திருக்கும் டெல்டா விவசாயிகள் ஒருபுறம் மழை இல்லாமலும், மறுபுறம் கையில் பணம் இல்லாமலும், நட்ட பயிர்கள் காய்ந்து, சாவியாகிப் போவதை வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்த இரட்டைத் தாக்குதலால் டெல்டா மாவட்டங்களில் மட்டும் இதுவரை 17 விவசாயிகள்

தற்கொலை செய்து கொண்டும், வேதனையால் மாரடைத்தும் இறந்து போய்விட்டனர்.

இந்த அகால மரணங்கள் தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களையும் விட்டு வைக்கப் போவதில்லை. ஏனென்றால், சேலம், ஈரோடு, நாமக்கல் பகுதிகளை மையமாகக் கொண்டு இயங்கி வரும் மஞ்சள் சந்தையில், பண மதிப்பு நீக்க நடவடிக்கையால், 13 நாட்களில் 8,000 கோடி ரூபாய் பெறுமான மஞ்சள் விற்பனையாகாமல் தேங்கி நிற்பதாக விவசாயிகள் கூறுகிறார்கள். இந்தத் தேக்கமும், அதனால் ஏற்படக்கூடிய விலை வீழ்ச்சியும் மஞ்சள் விவசாயிகளை ஓட்டாண்டி நிலைக்குத் தள்ளக்கூடும். இந்த விற்பனை தேக்கம் ஒட்டன்சத்திரம் காய்கறிச் சந்தை, காங்கேயம் காளைச் சந்தைகளையும் விட்டுவைக்கவில்லை.

❍ ● ❍

மேற்கு வங்க மாநிலத்தில் நவம்பர் மாதம்தான் உருளைக் கிழங்கு பயிரிடும் பருவம். பயிரிடுவதற்கு ஏற்ற கிழங்குகளை மார்ச் மாதத் தொடக்கத்திலேயே குளிர்பதனக் கிடங்குகளில் சேமித்து வைத்து, அதனை நவம்பரில் திரும்ப எடுத்து விதைக்க வேண்டும். ஒரு புறம் சேமிப்புக் கிடங்குகள் 1,000, 500 ரூபாய் நோட்டுக்களை வாங்க மறுக்கின்றன; இன்னொருபுறமோ விவசாயிகளிடம் பணமும் இல்லை, பயிர்க் கடனும் கிடைக்கவில்லை. இதனால், கிடங்குக் கட்டணத்தைச் செலுத்த முடியாமலும், அதனால் கிழங்குகளைத் திரும்பப் பெற்றுப் பயிரிட முடியாமலும் தவித்துப் போய் நிற்கிறார்கள், விவசாயிகள்.

கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் உருளைக் கிழங்குகளை நவம்பர் 30-க்குள் திரும்ப எடுத்துவிட வேண்டும். இல்லையென்றால், காலாவதியாகிவிட்ட அதனை அழித்துவிடுவார்கள் என்கிறார், ஜமால்பூர் பகுதியைச் சேர்ந்த ஷேக் மெஹ்ருதீன் என்ற விவசாயி.

உருளைக் கிழங்கு சாகுபடியில் நாட்டிலேயே இரண்டாவது இடத்திலுள்ள மேற்கு வங்கத்தில் ஏறத்தாழ 3,87,000 ஹெக்டேரில் உருளைக் கிழங்கு பயிரிடப்படுகிறது. அதனைப் பயிரிடுவதற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியால் ஜமால்பூர் பகுதியில் மட்டும் இரண்டு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்றால், அம்மாநிலம் முழுவதும் பாதிக்கப்படும் விவசாயிகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்ப்பதே அச்சமூட்டக் கூடியதாக உள்ளது.

❍ ● ❍

உ.பி. மாநிலத்தில் கோதுமை, கடுகு, கொண்டைக் கடலை, பச்சைப் பயறு வகைகளைப் பயிரிட முடியாமல் விவசாயிகள் தவித்து வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. அம்மாநிலத்தில் கரும்பை வெட்டி ஆலைகளுக்கு எடுத்துப் போக வேண்டிய நேரமிது. ஆனால், கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்குக் கூலி கொடுப்பதற்கும், வெட்டிய கரும்பை எடுத்துச் செல்ல லாரி வாடகையைக் கொடுப்பதற்கும் பணமில்லாததால், கரும்புகள் வயலில் காயத் தொடங்கிவிட்டன.

பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் வட்டி வீதம் குறையும் என பா.ஜ.க. கும்பல் வாய்ச்சவடால் அடித்து வருகிறது. ஆனால், 3 வட்டிக்குக் கடன் கொடுத்து வந்த கந்து வட்டிக் கும்பல், பணத் தட்டுப்பாட்டைப் பயன்படுத்திக்கொண்டு 5 வட்டி, பத்து வட்டி என ஏற்றிவிட்டதாக உ.பி. விவசாயிகள் கூறுகின்றனர்.

மகாராஷ்டிராவின் வாசி சந்தையில், பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்கு முன்பாக 14 ரூபாய்க்கு விற்று வந்த ஒரு கிலோ பச்சை மிளகாய் அதன் பிறகு மூன்று ரூபாயாகச் சரிந்து விட்டதாகவும், 13 ரூபாய்க்கு விற்ற ஒரு காலிஃபிளவர் இன்று நான்கு ரூபாயாகவும், ஒரு கிலோ 26 ரூபாய்க்கு விற்று வந்த கத்தரிக்காய் 12 ரூபாயாகச் சரிந்துவிட்டதாகவும் பிம்பாலே என்ற விவசாயி வேதனையோடு கூறுகிறார்.

ஆந்திராவுக்குப் போனால் தக்காளியைக் காசில்லாமலேயே அள்ளிவர முடியும் என சென்னை கோயம்பேடு சந்தை வியாபாரிகள் கூறுகிறார்கள். விளைந்த உருளைக்கிழங்குகளைச் சந்தைக்கு எடுத்துச் செல்லவும் பணமின்றி, அக்கிழங்குளைச் சேமித்து வைக்கவும் வழியின்றித் தவித்து நிற்கும் உ.பி. மாநில

கூட்டுறவு வங்கிகளில் பண பரிமாற்றத்திற்கு விதிக்கப்பட்ட தடையைக் கண்டித்து குஜராத் மாநில விவசாயிகள் சூரத் நகரில் பாலையும், நெல்லையும் தெருவில் கொட்டி நடத்திய ஆர்ப்பாட்டம்.



விவசாயிகள், அவற்றைத் தெருவில் கொட்டி ஆர்பாட்டங்களை நடத்துகின்றனர்.

பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக இந்தியாவெங்கும் தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள சுங்கச் சாவடிகளில் வாகனக் கட்டணம் வசூலிக்கக் கூடாதென உத்தரவிட்டது மைய அரசு. இந்த உத்தரவால் சுங்கச்சாவடியை எடுத்து நடத்தும் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்ட முன்வந்திருக்கும் மோடி அரசு, விவசாயிகளுக்கு ஏற்பட்ட நட்டம் குறித்துப் பேச மறுக்கிறது. மாறாக, நாட்டிற்காக இந்தத் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென அவர்களுக்கு உபதேசிக்கிறது. கார்ப்பரேட் முதலாளி வர்க்கம் தாங்கிக் கொள்ள மறுக்கும் நட்டத்தை, விவசாயிகள் ஏன் மௌனமாகச் சகித்துக் கொள்ள வேண்டும்?



மாவட்ட மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை முடக்கிய மோடிஅரசின்தடையுத்தரவைக்கண்டித்துகேரளமாநிலமுதல்வர்பினாரயி விஜயன் தலைமையில் அம்மாநிலத் தலைநகர் திருவனந்தபுரத்தில் உள்ள ரிசர்வ் வங்கிக் கிளையின் முன்பு நடந்த ஆர்ப்பாட்டம்.

❍ ● ❍

அக்டோபர், நவம்பர் மாதங்களில் விவசாயிகள் புதிய பயிர்களைப் பயிரிடுவார்கள், விளைந்த பயிர்களை விற்பதற்குச் சந்தைக்கு வருவார்கள் என்பதையெல்லாம் அறியாமல், பணமதிப்பு நீக்க நடவடிக்கையை எடுத்து, வேளாண் கூட்டுறவு சங்கங்களை மோடி முடக்கிவிட்டார் என்றால், அவரைப் போன்ற முட்டாள்தனமான, மக்களிடமிருந்து அந்நியப்பட்டுள்ள ஆட்சியாளர் வேறு யாரும் இருக்க முடியாது. இல்லை, இதையெல்லாம் தெரிந்துகொண்டுதான் அவர் இந்த நடவடிக்கையை எடுத்தார் என்றால், அவரைவிட விவசாயிகளுக்கு எதிரான ஆட்சியாளர் வேறு ஒருவர் இருக்க முடியாது.

தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் கருப்புப் பண பேர்வழிகளின் புகலிடமாக இருப்பதனால்தான், அவற்றுக்குத் தடை போட்டோம் என நியாயப்படுத்துகிறது, பா.ஜ.க. குற்றவாளியே நீதிபதியாகும் அயோக்கியத்தனம் இது. ஒவ்வொரு மாநிலத்திலும் எந்த ஓட்டுக் கட்சிகள் அதிகார பலத்துடன் இருக்கிறதோ, அக்கட்சிகளும் கிராமப்புற ஆதிக்க சக்திகளும்தான் வேளாண் கூட்டுறவு சங்கங்களைக் கட்டுப்படுத்தி வருகிறார்கள். பா.ஜ.க. ஆளும் மகாராஷ்டிரா மாநிலத்தில் கூட்டுறவு சங்கங்கள் அனைத்தும் காங்கிரசு, பா.ஜ.க. கும்பலின் குடும்பச் சொத்தாக இருப்பதும், அம்மாநிலத்தில் நடந்துள்ள கூட்டுறவு சங்க ஊழல்கள் அனைத்திலும் பா.ஜ.க.விற்கும் பங்கிருப்பது ஊரறிந்த உண்மை. பாவம் ஓரிடம், பழி ஓரிடம் என்ற கணக்காக, கூட்டுறவு சங்கங்களை முடக்கி விவசாயிகளைத் தண்டிக்கிறது, பா.ஜ.க.

மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களையும், மாவட்ட கூட்டுறவு வங்கிகளையும் முடக்கியிருப்பதன் பின்னேயுள்ள நோக்கம் கருப்புப் பண ஒழிப்பு அல்ல. அதன் பின்னே வேறொரு தீய நோக்கம் மறைந்திருக்கிறது. நாடெங்கும் உள்ள 13,943 மாவட்டக் கூட்டுறவு வங்கிகளில் 2,36,890 கோடி ரூபாய் பெறுமான வைப்பு நிதியும், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் 81,900 கோடி ரூபாய் பெறுமான வைப்பு நிதியும் இருப்பதாக ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

இத்துணை கோடி பணத்தையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நோக்கத்தோடுதான் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மாவட்டக் கூட்டுறவு சங்கங்களின் வங்கிச் செயல்பாடுகளுக்குத் தடை விதித்திருக்கிறது, மைய அரசு. மேலும், ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்கும் மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள் மட்டுமே கூட்டுறவு வங்கிகள் எனக் கருதப்படும் என்றொரு அறிவிப்பாணையை அரசிதழில் வெளியிட்டுள்ள மைய அரசு, இது நவம்பர் 24 முதல் நடைமுறைக்கு வருவதாகக் காதும்காதும் வைத்தாற் போல அறிவித்திருக்கிறது.

தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் இடத்தைப் பிடிக்கப் போவது யார்? மகளிர் சுய உதவிக் குழுக்களும், குறு நிதி நிறுவனங்களும் கிராமப்புற மக்களுக்குக் கடன் கொடுத்துக் கைதூக்கிவிடும் போர்வையில் ஏற்கெனவே கிராமப்புறங்களில் நுழைந்துவிட்டன. கிராமப்புற மக்களுக்கும் விவசாயிகளுக்கும் கொடுக்கப்படும் கடன்கள் 99 சதவீதம் வசூலாகி விடுவதாலும், அக்கடன்களுக்கான வட்டி, வங்கி வட்டியைவிட அதிகமாக இருப்பதாலும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வங்கிகளும் நிதி நிறுவனங்களும் குறு நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து வருகின்றன. கூட்டிக் கழித்துப் பாருங்கள், மோடி அரசின் நோக்கம் என்னவென்று புரிய வரும். பளிச்சென்று சொல்ல வேண்டுமென்றால், கிராமப்புற விவசாயிகளைக் கந்து வட்டிக் கும்பலைவிட மோசமான குறுநிதி நிறுவனங்களின் பிடிக்குள் முழுமையாகச் சிக்க வைப்பது மோடி அரசின் எதிர்காலத் திட்டம். தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை அங்கீகரிக்க மறுத்து மோடி அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பாணைதான் அதன் தொடக்கம்.

● ரஹீம்

## மோடி வித்தை :

# சிலந்தி வலையில் சிக்கப் போகும் சிறு வணிகம் - சிறு தொழில்!

சிறு தொழில், சிறு வணிகத்தை நவீனப்படுத்துவது என்ற போர்வையில் அவர்கள் மீதான வரி விதிப்புகளை விரிவாக்கவும் அதிகப்படுத்தவும் திட்டமிடுகிறது, மோடி அரசு.

கடந்த நவம்பர் 8-ஆம் தேதியன்று தனது மோடி அரசின் பண மதிப்பு நீக்க நடவடிக்கையால், ‘‘ஏழைகள் நிம்மதியாக தூங்குகிறார்கள்; பணக்காரர்கள் தூக்கமாத்திரையை விழுங்கிக் கொண்டிருக்கிறார்கள்’’ என்றார் மோடி. ஆனால் பலசரக்குகள், காய்கறிகள், பழங்கள் விற்கும் சிறுவணிகர்களும், சிறு- குறுந்தொழில் முனைவோரும், சிறு விவசாயிகளும், லாரி உரிமையாளர்களும் தொழிலும் விவசாயமும் வியாபாரமும் செய்ய முடியாமல் தத்தளிப்பதோடு, கூலி விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், வாகன ஓட்டுநர்கள் - என நாட்டின் அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்கள்தான் வேலையில்லாமல் பட்டினியால் தூக்கமின்றிப் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மோடியின் ரூ.500, ரூ.1000 நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பைத் தொடர்ந்து, டெல்லியின் காரி பாவோலி எனுமிடத்திலுள்ள ஆசியாவின் மிகப் பெரிய வெல்ல மண்டி முடங்கிக் கிடக்கிறது. சில்லறை நோட்டுகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டதால் சென்னை - கோயம்பேடு சந்தையில் மக்கள் வரத்து 80 சதவீதம் குறைந்து, வெறிச்சோடிக் கிடக்கிறது. தினந்தோறும் 4 கோடி ரூபாய் முதல் 7 கோடி ரூபாய் வரை வியாபாரம் நடந்த இக்காய்கறிச் சந்தையில் தற்போது ரூ.1 கோடி அளவுக்கு கூட வியாபாரம் நடைபெறவில்லை. இங்குள்ள ஆயிரக்கணக்கிலான சிறு வியாபாரிகள், அவர்களைச் சார்ந்துள்ள சுமை தூக்கும் தொழிலாளர்கள் பெருத்த பாதிப்புக்கு ஆளாகி நிற்கின்றனர். மோடியின் திடீர் அறிவிப்பால் தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 21 லட்சம் சிறு வணிகர்களின் வாழ்க்கை மூன்றாண்டுகளுக்குப் பின்னோக்கிப் போய்விட்டது என்கிறார், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவரான விக்கிரம ராஜா.

எட்டாயிரம் கோடி ரூபாய் பெறுமான மஞ்சள் விற்பனையாகாமல் தேங்கி நிற்கும் ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட தமிழகத்தின் மேற்கு மாவட்ட மஞ்சள் சந்தை.



சில ஆயிரங்களைக் கந்துவட்டிக்குக் கடன் வாங்கி முதலீடு செய்து அதில் கிடைக்கும் அற்ப வருவாயில் வாழ்க்கையை ஓட்டிவரும் தள்ளுவண்டி வியாபாரிகள், பழங்களும் காய்கறிகளும் அழுகிப் போகும் அபாயத்தில் இருப்பதால், எந்த காய்கறியானாலும் கிலோ 5 ரூபாய் என்று கூவியழைத்தாலும் வாங்குவதற்கு யாரிடமும் பணமில்லை. ‘‘சிகரெட் வித்தா பத்து காசு, கலர் வித்தா இருபத்தஞ்சு காசு, பால் வித்தா ஐம்பது காசுன்னு ஓடிக்கிட்டிருந்த என் பொழப்பில் மண் அள்ளிப் போட்டுவிட்டார் மோடி’’ என்று பெட்டிக்கடைக்காரர்கள் புலம்புகிறார்கள். சென்னை மற்றும் காஞ்சிபுரம் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேலான கட்டுமானத் திட்டங்களில் பணியாற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள், பெயிண்டர், தச்சுவேலை செய்பவர்கள் - என ஏறத்தாழ 5 லட்சம் கூலித் தொழிலாளர்கள் வேலையில்லாமல் பரிதவிக்கிறார்கள். சென்னை - புதுப்பேட்டையில் உள்ள வாகன உதிரிபாகங்கள் விற்பனை கடைகளில் 500 ரூபாய்க்கு கூட வியாபாரம் நடைபெறவில்லை. இதனால் சம்பளம் கூட தர முடியாததால் பல மெக்கானிக்குகள் வேலையிழந்துள்ளனர்.

2020-ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு வர்த்தகம் நடைபெறும் வகையில் திருப்பூரின் பின்னலாடை - ஆயத்த ஆடைத்தொழிலை விரிவாக்கப் போவதாக பிரதமர் தனது “விஷன் 2020” திட்டத்தின் மூலம் ஏற்கெனவே அறிவித்திருந்தார். ஆனால் அவரது பணமதிப்பு நீக்க நடவடிக்கையால், டாலர் நகரம் என்றழைக்கப்பட்ட திருப்பூர் இன்று செல்லாக்காசு நகரமாகிவிட்டது.



வாடிக்கையாளரை எதிர்பார்த்து எதிர்பார்த்து சோர்ந்துபோன சென்னை நகர நடைபாதை வியாபாரி.

திருப்பூரிலுள்ள ஏறத்தாழ 2,000-க்கும் மேற்பட்ட சிறு, குறுந்தொழிற்கூடங்கள் அனைத்தும் ஏறத்தாழ லே-ஆப் விடப்பட்ட நிலையில் உள்ளன. சட்டைகள் உற்பத்தி செய்யும் தென்னிந்திய சிறு தொழில் முனைவோர் கூட்டமைப்பு (SISMA) தொழிலாளர்களுக்கு ரொக்கமாக கூலி கொடுக்க முடியாத நிலையில், வாரத்துக்கு 15 ஷிப்டுகளுக்குப் பதிலாக 6 ஷிப்ட் மட்டுமே வேலை கொடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு சென்னையில் மழை-வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, அரசின் புறக்கணிப்பால் அதிலிருந்து மீளமுடியாமல் தத்தளித்து, பின்னர் மெதுவாக உயிர் பெற்ற ஆயிரக்கணக்கான சிறு - குறுந்தொழில் நிறுவனங்கள் மீண்டும் இப்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதுமுள்ள அனைத்து சிறு, குறுந்தொழில்கள் ஏறத்தாழ 40 முதல் 60 சதவீத அளவுக்கு நட்டமடைந்துள்ளன என்கிறார் கோவை கொடிசியா அமைப்பின் முன்னாள் தலைவரான இளங்கோ. அன்றாடம் பல நூறு கோடி ரூபாய் வரை புரளக்கூடிய ஈரோடு ஜவுளித் தொழிலும், மஞ்சள் சந்தையும் முடங்கிப் போய் விவசாயிகளும் வியாபாரிகளும் விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

தூத்துக்குடி, ராமேஸ்வரம் மாவட்டங்களில் நாள்தோறும் ரூ.10 கோடி அளவுக்கு வர்த்தகம் நடந்துவந்த மீன்பிடி தொழில் முடங்கிப் போயுள்ளது. மீனவர்கள் பிடித்து வந்த மீன்களை வாங்க வியாபாரிகள் வருவதில்லை. மீன் பிடி தொழிலுக்கு பயன்படும் டீசல், ஐஸ் கட்டிகள் வாங்குவதற்கும் மீனவர்களிடம் பணமும் இல்லை. இதனால் இம்மாவட்டங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்குள் செல்ல முடியாமல், பல்லாயிரக்கணக்கான மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் வால்பாறை, ஆனைமலை மற்றும் கேரளத்தின் வயநாடு, மூணாறு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியிலிருந்து ஏறத்தாழ 10,15 கி.மீ. தொலைவிலுள்ள வங்கிக்கு வந்து பணத்தை மாற்ற போக்குவரத்து செலவாகும், மேலும் ஒரு நாள் கூலியையும் இழக்க நேரிடும் என்பதால், பெரும்பாலோர் தங்களிடமுள்ள நோட்டுகளை மாற்ற முடியவில்லை. இத்தொழிலாளர் குடும்பங்கள் கடந்த ஒரு மாத காலமாக முறையாக சோறு தின்ன முடிவதில்லை. இம்மக்கள் ஓட்டுப் போட வேண்டுமென்று கழுதை, குதிரைகள் மீது ஓட்டு எந்திரத்தை தூக்கி வைத்து ஆறு, மலை, காடுகளைத் தாண்டி வந்து ஜனநாயகக் கடமையாற்றச் சொல்லும் ஆட்சியாளர்கள், அதே மாதிரி இம்மக்களைத் தேடி வந்து ரூ. 500, 1000 நோட்டுகளை மாற்ற ஏற்பாடு செய்ய முன்வரவில்லை.

கூட்டுறவு சங்கங்கள் வங்கியிலிருந்து பணத்தை எடுக்க வரம்பும் கட்டுப்பாடும் ரிசர்வ் வங்கி விதித்துள்ளதால் கேரளத்தின் முந்திரி, ஏலக்காய், மிளகு, பாக்குத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க முடியவில்லை. தமிழகம் மற்றும் கேரளத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களால் வங்கிகளிலிருந்து பணத்தை எடுக்கவோ, பால் உற்பத்தியாளர்களான விவசாயிகளுக்கு கொடுக்கவோ முடியாததால், மாடுகளுக்குத் தீவனங்கள் வாங்கக் காசில்லாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

குஜராத்தின் ஜவுளித் தொழில் மையமான சூரத்தில் 165 ஜவுளிச் சந்தைகள் உள்ளன. இங்கு ஏறத்தாழ 10 லட்சம் பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஜவுளித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மோடியின் திடீர் அறிவிப்புக்குப் பிறகு, வாரத்துக்கு பாதி நாள்தான் இவர்களுக்கு வேலை கொடுக்கப்படுவதால், ஏராளமான வெளிமாநிலத் தொழிலாளர்கள் பட்டினி கிடக்கின்றனர். ஜவுளி உற்பத்தியோ வீழ்ந்து கிடக்கிறது. இது வொருபுறமிருக்க, சூரத்தின் செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் தொழில் முற்றாக முடங்கிவிட்டது.

தமிழகத்தில் திருப்பூர், கோவை, நாமக்கல், ஈரோடு, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில்



வாடிக்கையாளர்கள் இன்றி வெறிச்சோடிக் கிடக்கும் பெங்களூரு நகர வணிகத் தெரு.

30 ஆயிரத்துக்கு மேற்பட்ட கறிக்கோழி பண்ணைகள் உள்ளன. மோடியின் செல்லாக்காசு அறிவிப்பால், 2 கோடி கிலோ அளவுக்கு கறிக்கோழி தேக்கம் அடைந்து ரூ.200 கோடி அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கறிக்கோழி பண்ணை உரிமையாளர்கள் புலம்புகின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால், தனது பணமதிப்பு நீக்க நடவடிக்கையின் மூலம் சிறு தொழில்களையும் சிறு வணிகத்தையும் அழிவின் விளிம்பில் கொண்டு வந்து நிறுத்தி, அவற்றைச் சார்ந்துள்ள கோடிக்கணக்கான உழைப்பாளர்களை வீதியில் வீசியெறிந்துள்ளார் மோடி. நாடு முழுவதும் பொருளாதார மந்தநிலையால் ஏற்கெனவே வேலையின்மை தீவிரமாகியுள்ள நிலையில், மோடியின் இந்த அதிரடி அறிவிப்பானது, ஏதாவது கைத்தொழில், சிறுவியாபாரம் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்ற நினைப்பில் நிரந்தரமாகவே மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது.

நம் நாட்டில் வேளாண்மைக்கு அடுத்து அதிகமான அளவில் வேலை வாய்ப்பினை அளித்திடும் துறையாக இருப்பது சிறுதொழில்கள்தான். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் முக்கிய பங்கு வகிப்பதாகவும் சிறுதொழில்கள் உள்ளன. நாட்டில் ஏறத்தாழ 10 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் துறையாக சில்லறை வணிகம் இருக்கிறது.

வியாபாரம் முடங்கிப் போனதால் வேலையேதுமின்றிப் போன டெல்லி நகரைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள்.



இருப்பினும், தனியார்மய - தாராளமயமாக்கத்துக்குப் பின்னர், அரசின் புறக்கணிப்பாலும், பன்னாட்டு நிறுவனங்களின் படையெடுப்பாலும் சிறு தொழில்கள் மவுனமாக அழிக்கப்பட்டு வருகின்றன. சிறு, குறுந்தொழில்களுக்கு வங்கிக் கடன் கிடைப்பது குதிரைக் கொம்பாக உள்ளது. நாடெங்குமுள்ள 5.8 கோடி சிறு, குறுந்தொழில் நிறுவனங்கள் உள்ள போதிலும் 4 சதவீத நிறுவனங்களுக்குத்தான் வங்கிக் கடன் கிடைத்திருப்பதை அரசின் புள்ளிவிவரங்களே ஒப்புக் கொள்கின்றன. கார்ப்பரேட் நிறுவனங்களும், பொதுத்துறை நிறுவனங்களும் தமது உற்பத்தியில் 20 முதல் 30 சதவீத வேலைகளை குறு மற்றும் சிறு நிறுவனங்களிடம் கொடுத்து வாங்க வேண்டும் எனக் கோரிக்கை வைக்கப்பட்டாலும், அதனை ஆட்சியாளர்கள் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர். அரசின் பொருளாதாரக் கொள்கையும் குறு, சிறு நிறுவனங்களுக்கு ஆதரவாக இல்லை. பொருளாதார மந்தம், தேக்கம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவான அரசின் தொழிற் கொள்கை ஆகியவை காரணமாக ஜாப் ஆர்டர் கிடைக்காமல், ஏற்கெனவே குறு மற்றும் சிறு நிறுவனங்கள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டு நிற்கின்றன.

இதுவும் போதாதென்று சிறுதொழில் பட்டியலில் இருந்து ஊறுகாய், மெழுகுவர்த்தி, ஊதுவத்தி, தீக்குச்சி, பூட்டு, ரொட்டி, நோட்டுப் புத்தகங்கள், ஸ்டீல் பீரோ, சேர், ஷட்டர், அலுமினிய பாத்திரங்கள் உள்ளிட்ட 20 பொருட்களை நீக்கி மைய அரசு உத்தரவிட்டுள்ளதால், இத்தொழில்களை இனி கார்ப்பரேட் நிறுவனங்களே நேரடியாக மூலதனமிட்டுத் தொடங்க முடியும். இதுவரை இத்தொழில்களை நடத்திவந்த குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்கள் இனி கார்ப்பரேட் நிறுவனங்களோடு போட்டிபோட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளன.

முன்பேர வர்த்தகம், இணையதள வர்த்தகம், ஒப்பந்த விவசாய உற்பத்தி, பெரும் கிடங்குகளில் நவீன வசதிகளுடன் பதுக்கல் ஆகியவற்றின் மூலம் சந்தைகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் உணவுப் பொருட்கள் தானியங்கள் உள்ளிட்டு பல்வேறு பண்டங்களின் மேல் நடக்கும் இந்தச் சூதாட்டச் சந்தையின் மதிப்பு 45 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலாகும். இந்தச் சூதாட்டத்தில் 100 சதவீத அந்நிய முதலீட்டுக்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய தொடர் தாக்குதல்களால் ஏற்கெனவே நிலைகுலைந்து போயுள்ள சிறு வணிகர்களையும் சிறுதொழில் புரிவோரையும் கடுமையாகப் பாதிக்கும் என்று தெரிந்தேதான் மோடி கும்பல் இந்த அதிரடி

தாக்குதலை நடத்துகிறது. கந்துவட்டிக்குக் கடன் வாங்கியும் தமது உடைமைகளை அடகுவைத்தும் கையைக் காலை ஊன்றி சிறுதொழில் புரிவோரும் சிறு வணிகர்களும் சுதேசி சவடால் அடித்த பா.ஜ.க.வை பெரிதும் நம்பி ஆதரித்தனர். அவர்களின் முதுகின் மேலேறி ஆட்சியைப் பிடித்த பா.ஜ.க. இப்போது அவர்களை எட்டி உதைத்துக் கொண்டிருக்கிறது. தமது வாழ்வாதாரம் முடங்கிவிட்டதை எண்ணி சிறுதொழில் முனைவோரும் சிறு வணிகர்களும் கதறிக் கொண் டிருக்கிறார்கள். கண்ணெதிரே இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் மோடி கும்பல் இவர்களுக்கு வாயள வில்கூட ஆறுதல் கூற முன்வரவில்லை.

மாறாக, வங்கிகளின் வழியாக நடைபெறும் வர்த் தக நடவடிக்கைககளில் கருப்புப்பணம் உருவாக வாய்ப்பில்லை என்றும், ரசீதுகளே இல்லாமல் ரொக் கப் பரிமாற்றத்தின் மூலம் நடக்கும் வியாபாரத்தால் தான் கருப்புப்பணம் உருவாகி வருவதாகவும் மோடி கும்பல் சிறுவணிகர்கள் மீது அநியாயமாகப் பழிபோடு கிறது. வரி செலுத்தாமல் ஏய்க்கும் நோக்கத்தோடுதான் வங்கி வழியான வர்த்தகத்துக்கு இவர்கள் மாற மறுக் கிறார்கள் எனக் குற்றம் சாட்டுகிறது. ஆனால், பெரு மளவிலான கருப்புப்பணம் கார்ப்பரேட் நிறுவனங் களின் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தின் வழியாகத் தான் திரள்கிறது. இந்த வர்த்தகத்தின் போலியான கம்ப் யூட்டர் பில்கள் அனைத்தும் வங்கிகளின் வழியாகத் தான் சென்று வருகின்றன.

சிறு தொழில் முனைவோர், சிறு வணிகர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினரைக் குறிவைத்து தனது வரி வருவாயை அதிகரித்துக் கொள்ளத்தான் மோடி கும்பல் இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட் டிருக்கிறது. ஏற்கெனவே 28 சதவீத அளவிற்கு மறை முக வரிகளையும், அதற்கும் மேலாக செஸ் வரிகளை யும் திணித்துச் சுரண்டுவது போதாதென்று, இந்த வர்க்கத்தினரை நேரடி வருமான வரி வலைக்குள் ளும் சிக்க வைப்பதுதான் மோடியின் திட்டம். சிறு வணிகர்களும் சிறுதொழில் புரிவோரும் இனி வங்கி மூலமாகத்தான் தமது வரவு - செலவுகளைச் செய்ய வேண்டுமென அவர்கள் மீது கட்டாய வரிவிதிப்பைத் திணிப்பது, சில்லறை வணிகத்தை ஒழித்து ரிலை யன்ஸ், வால்மார்ட், பிக் பஜார் போன்ற பெரும் வணி கத்தை கொழிக்க வைப்பது, வங்கிகளிலுள்ள மக்கள் பணத்தை கார்ப்பரேட் முதலாளிகளுக்கு வழங்கி வராக் கடனாக அவற்றைத் தள்ளுபடி செய்வது என்ற நோக் கத்துடன்தான் மோடி கும்பல் இந்த அதிரடித் தாக்கு தலை நடத்திக் கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே சிறுதொழில், சில்லறை வணிகம் மற்றும் விவசாயத்தை அறவே புறக்கணித்து நசிவடை யச் செய்திருப்பது போதாதென்று, இப்போது இந் தத் துறையினரை மரணக் குழிக்குள் தள்ளிவிட்டுள்ள மோடி அரசுக்கு சிறுவணிகர்களும் சிறு தொழில் நடத்துவோரும் எதற்காக வரி கட்ட வேண்டும் என்று கேள்வி எழுப்பி போராடுவதைத் தவிர, இனி வேறு என்ன வழியிருக்கிறது?

● தனபால்



# தோழர் சீ.கோட்டை-க்கு சிவப்பஞ்சலி !

மதுரை மாவட்டம், உசிலம் பட்டி விவசாயிகள் விடுதலை முன்னணி அமைப்பில் கடந்த 25 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த தோழர் கோட்டை, கடந்த நவம்பர் 18 அன்று திடீ ரென மாரடைப்பு ஏற்பட்டு காலமாகிவிட்டார். இதய நோயால் பாதிக்கப்பட்ட 60 வயதான தோழர் கோட்டை, தொடர்ச்சியாக சிகிச்சையும், ஓய்வும் தேவைப்பட்ட போதி லும் அமைப்பு வேலைகளில் சோர்வின்றி ஈடுபட்டவர். இறப்பதற்கு இரண்டு நாளுக்கு முன்பு கூட 500-1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற மோடியின் மோசடிக்கு எதி ராக துண்டுப் பிரசுரம் விநியோ கித்தார்.

விவசாயத்திற்கு வைகை பாசனத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்போது மக்களைத் அணி திரட்டிப் போராடி தண்ணீரைப் பெற்றுக் கொடுப் பது, நெல்கொள்முதல் நிலையத்தை கிராமத்தில் அமைத்து முறைப்படுத்துவது - என இப்பகுதி வாழ் உழைக்கும் மக்களின் பல்வேறு கோரிக்கை களுக்காக பேராடிய தோழர் கோட்டை, முல்லைப் பெரி யாறு அணையில் தமிழகத் தின் உரிமைக்கான போராட் டங்களின்போது கிராமங்கள் தோறும் அணைப் பாதுகாப்பு குழு கட்டுவதற்கு ஓர் இளை ஞனைப் போலச் செயல் பட்டவர்.

அவர் உசிலம்பட்டி வட் டம், முண்டுவேலம்பட்டி யின் செல்லப்பிள்ளை. இப் பகுதிவாழ் உழைக்கும் மக் களின் நம்பிக்கைக்குரியவ ராக இருந்த அவர், கிராம கமிட்டி ஏற்படுத்தி அதில் செயலாளராக பணியாற்றி னார். தாழ்த்தப்பட்ட மக் களுக்கு பாதுகாப்பு அரணாக வும், குடும்ப நண்பராகவும் திகழ்ந்தார். எளிய வாழ்க்கை, அங்கீகாரத்துக்கு ஏங் காத உழைப்பு - அதுதான் தோழர் கோட்டை.

தோழர் கோட்டை அவர்களின் உயரிய கம்யூனி சப் பண்புகளை நெஞ்சிலேந்துவோம்!

- பு.ஜ. செய்தியாளர், உசிலம்பட்டி.

# மண்டியிட்டது யார்?
# கருப்புப் பணக் கும்பலா, சூரப்புலி மோடியா?

**வருமான வரிச் சட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்கள் மோடி அரசு கருப்புப் பணக் கும்பலிடம் சரணடைந்துவிட்டதைக் காட்டுகிறது.**

மோடி அறிவித்த பணமதிப்பு நீக்க நடவடிக்கை, பல மாதங்களாக மிகவும் இரகசியமாகத் திட்டமிடப்பட்டு, கருப்புப் பணக் கும்பலுக்கு எதிராக ஏவப்பட்ட 'துல்லிய' தாக்குதல் என்றும், இதன் காரணமாக கருப்புப் பணம் வைத்திருப்பவர்கள் அதனை மாற்ற முடியாமல் முழித்துக் கொண்டிருப்பதாகவும் ஒரு கருத்து திட்டமிட்டுப் பரப்பப்படுகிறது. ஆனால், இந்த நடவடிக்கையின் பிறகு நாட்டில் நடப்பதென்னவோ பா.ஜ.க.வும் அதன் துதிபாடிகளும் கூறிவருவதற்கு நேர் எதிராக இருக்கிறது.

பொதுமக்கள் தாம் உழைத்து சம்பாதித்த பணத்தை மாற்றுவதற்குத் தெருவில் நிற்கிறார்கள். ஊரை அடித்து வாயில் போட்ட கருப்புப் பணக் கும்பலோ தமது பணத்தை நோகாமல் மாற்றி வருகிறது.

கிரிமினல் குற்றச் சட்டத்தை விரிவுபடுத்திக் கொண்டே செல்வதற்கான வாய்ப்பைக் குற்றவாளிகளே ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள் என்பார் காரல் மார்க்ஸ். அதனை மெய்யாக்கி வருகிறார்கள் இந்தியாவின் கருப்புப் பண முதலைகள். அவர்கள் தம்மிடமுள்ள கருப்புப் பணத்தை வெள்ளையாக்க ஒவ்வொரு நாளும் புதுப்புது வழிகளைக் கண்டுபிடிக்கிறார்கள். அதனைத் தடுப்பது என்ற பெயரில் மோடி அரசு ஒவ்வொரு நாளும் விதவிதமான கட்டுப்பாடுகளை அறிவித்து, அசடு வழிந்து நிற்கிறது.

பணமதிப்பு நீக்க அறிவிப்பு வெளியான மறுநிமிடமே சென்னை நகைக்கடையொன்றில் குவிந்த பண முதலைகளின் கூட்டம்.



கருப்புப் பணத்தை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு மோடி அவிழ்த்துவிட்ட துல்லிய தாக்குதல் ஒரு புதிய கருப்புப் பணச் சந்தையை உருவாக்கியிருப்பதை இன்று நாம் நேருக்கு நேர் காண்கிறோம். ஆடிட்டர்கள், வங்கி மேலாளர்கள், அரசு அதிகாரிகள், நகைக் கடைக்காரர்கள், கந்துவட்டி கும்பல்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஏற்றுமதி/இறக்குமதி நிறுவனங்கள், ஹவாலா கும்பல்கள், தனியார் போக்குவரத்து நிறுவனங்கள், திரையரங்கு, பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள், தனியார் மருத்துவமனைகள், கோவில்கள், மடங்கள் எனப் பலரும் கருப்பை வெள்ளையாக்கித் தரும் இந்த இலாபகரமான தொழிலில் இறங்கியுள்ளனர். இந்தப் புதிய கருப்புத் தொழிலைப் பயன்படுத்திக் கொண்டு, தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், சினிமா நட்சத்திரங்கள், டாக்டர்கள், இஞ்சினியர்கள், வக்கீல்கள் உள்ளிட்ட கருப்புப் பணக் கும்பல், தங்களிடம் உள்ள கணக்குக் காட்டமுடியாத பணத்தை 25% முதல் 70% வரை கமிசன் கொடுத்து வெள்ளையாக மாற்றிவருகின்றனர்.

மோடியின் அறிவிப்பு வந்த மறுநிமிடமே, கருப்புப் பணக் கும்பல் பறந்து சென்று தட்டியது நகைக் கடைகளின் கதவுகளைத்தான். சென்னை, மும்பை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் அறிவிப்பு வெளியான நாளன்று இரவு எட்டு மணிக்கு மேல் களைகட்டத் தொடங்கிய தங்க நகை வியாபாரம் நள்ளிரவைத் தாண்டியும் ஜாம்ஜாமென்று நடந்தது. மும்பை, பூனே, நாசிக், கோவா ஆகிய நான்கு நகரங்களில் அன்றைக்கு இரவு மட்டும் 36 கோடி ரூபாய் அளவிற்கு தங்கம் விற்பனையானது. மும்பை நகரில்



சேலம் அருகே நடந்த வாகனச் சோதனையின்போது பா.ஜ.க.வின் சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலர் அருணிடமிருந்து கைப்பற்றப்பட்ட இருபது இலட்ச ரூபாய் பெறுமான 2,000 ரூபாய் நோட்டுக் கட்டுக்கள் கொண்ட கருப்புப் பணம். (உள்படம்) பா.ஜ.க.வைச் சேர்ந்த 'யோக்கியன்' அருண்.

மட்டும் 16 கோடி ரூபாய் அளவிற்குத் தங்கம் வாங்கப்பட்டிருக்கிறது. இது அதற்கு முந்தைய நாள் தங்க விற்பனையான 69 இலட்சத்தை விட 23 மடங்கு அதிகமாகும். நகைக் கடைகளுக்கு அடுத்து, கோவில்களும், பூசாரிகளும், மடங்களும்தான் கருப்புப் பணக் கும்பலை இரட்சித்தன.

நாட்டின் மிகப் பெரிய கந்துவட்டிக் கும்பலான மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் பணத்தை மாற்றுவதும் துரிதமாக நடைபெறுகிறது. மகளிர் சுய உதவிக் குழுகளில் உள்ள பெண்கள் அனைவருக்கும் தலைக்கு 2 இலட்ச ரூபாய் தரப்பட்டு, அவர்களது வங்கிக் கணக்குளில் டெபாசிட் செய்யப்படுகிறது. இந்தப் பரிமாற்றத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் கமிசனாக அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

வங்கி மேலாளர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டு, பொது மக்களின் பெயர்களில் செல்லாத நோட்டுக்கள் வங்கிகளின் வழியாகவே மாற்றப்படுகின்றன. வங்கிகளில் சேமிப்புக் கணக்குத் தொடங்கக் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் முதல் சிம் கார்டு வாங்குவதற்காகப் பெட்டிக் கடையில் கொடுத்த ஆவணங்கள் வரை அனைத்தும் களவாடப்பட்டு, மக்கள் மாற்றியது போல் போலியான கோப்புகளை உருவாக்கி, இந்த தகிடுதத்தம் நடைபெறுகிறது.

ஊழல், லஞ்சத்தில் புதிய எல்லைகளைத் தொட்டிருக்கும் ஜெயா-சசி கும்பலோ எவ்வித சிரமமும் அலைச்சலுமின்றி, டாஸ்மாக், போக்குவரத்துக் கழகங்கள் உள்ளிட்ட அரசு நிறுவனங்களைப் பயன்படுத்தியே காரியத்தைச் சாதித்துக் கொள்கிறது. மோடியின் அறிவிப்பு வந்த மறுநொடியே அரசு போக்குவரத்துக் கழகங்கள், பயணிகளிடமிருந்து 500, 1000 நோட்டுக்களை வாங்குவதை நிறுத்திவிட்டன. ஆனால், போக்குவரத்துக் கழகத்தின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட பணம் முழுவதும் 1,000, 500 ரூபாய் கட்டுக்களாகவே சென்றன. வசூலான சில்லறைப் பணம் முழுவதும் எங்கு போயிருக்கும் என விளக்கத் தேவையில்லை.

தமிழகம் முழுவதும் உள்ள எட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் நாள் ஒன்றுக்கு வரும் வருமானம் 20 கோடி ரூபாய்க்கும் அதிகம். டாஸ்மாக்கின் தினசரி வருமானம் கிட்டதட்ட 70 கோடி ரூபாய். நாளொன்றுக்கு 90 கோடி ரூபாய், நவம்பர் 8 முதல் டிசம்பர் 30 வரை 52 நாட்கள், இதைப் பெருக்கினால் கிடைப்பது கருப்பு வெள்ளையான விவரம்.

பணமதிப்பு நீக்க நடவடிக்கை காரணமாகப் பொது மக்களுக்கு ஏற்பட்ட சிரமத்தைக் குறைப்பதாகக் கூறிக் கொண்டு பெட்ரோல் நிலையங்கள், பேருந்துகள், ரயில்வே நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் செல்லாத நோட்டுக்களைப் பயன்படுத்தலாம் என அறிவித்தது, மோடி அரசு. ஆனால், அச்சலுகையே கருப்புப் பணத்தை மாற்றுவதற்கான பல புதிய வழிகளைத் திறந்துவிட்டது.

மராட்டிய மாநிலத்தில் திரையரங்குகளில் பழைய நோட்டுக்களை வாங்கலாம் என அம்மாநில அரசு அறிவித்தது. இதனைப் பயன்படுத்திக் கொண்ட திரையரங்கு முதலாளிகள், படம் பார்க்க யாரும் வராமல் காத்து வாங்கிய திரையரங்குகள் எல்லாம் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடுவதாகக் கணக்கு காட்டிக் கருப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றித் தரும் தொழிலைத் தொடங்கினர்.

**வெளிச் சந்தையில் 70 சதவீதம் வரை கமிசன் கொடுத்து கருப்புப் பணத்தை மாற்றியவர்களிடம் 50 சதவீதம் ''வரி''யைப் பெற்றுக் கொண்டு, அரசே அவர்களின் கருப்புப் பணத்தை வெள்ளையாக்கித் தரும் சலுகைத் திட்டம்தான் மோடி அறிவித்திருக்கும் வருமான வரிச் சட்டத் திருத்தம்.**



நெல்லை நகர புதிய பேருந்து நிலையம் அருகேயுள்ள பெட்ரோல் பங்கில் முகந்தெரியாத நபர் கொடுத்துச் சென்ற 50,000 ரூபாய் பணத்திற்கு இலவசமாக பெட்ரோல் பிடிக்கக் கூடிய ஆட்டோக்கள்.

வார நாட்களில், பயணிகள் யாரும் இல்லாமல், வெறுமனே கூரியர் சர்வீஸ்களாகப் போய்வரும் தனியார் ஆம்னி பேருந்துகளில் கூட்டம் நிரம்பி வழிவதாகக் கூறித் தனியார் போக்குவரத்து முதலாளிகள் செல்லாத நோட்டுகளை வங்கிகளில் கட்டுகிறார்கள்.

சினிமா நட்சத்திரங்கள் ஹவாலா பேர்வழிகள் மூலம் தங்களது கருப்புப் பணத்தை அமெரிக்க டாலர்களாக மாற்றிக் கொண்டுள்ளனர். தனியார் சுயநிதிக் கல்லூரி முதலாளிகள் தமது ஆசிரியர்களின் கணக்கிலும், தொழில் அதிபர்கள் தமது ஊழியர்கள், தொழிலாளர்களின் கணக்கிலும் பல மாதச் சம்பளத்தை முன்பணமாகச் செலுத்தி பல கோடி ரூபாய் கருப்புப் பணத்தை வெள்ளையாக்கியிருக்கின்றனர்.

மோடி, தனது அரசின் சாதனையாகச் சொல்லிக் கொள்ளும் ஜன்தன் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட வங்கிக் கணக்குகள், மிகவும் வெளிப்படையாகவும் அரசிற்குச் சவால்விடும் வகையிலும் கருப்புப் பணத்தை வெள்ளையாக்கப் பயன்படுத்தப்படுகிறது. பணமே இல்லாமல் முடங்கிக் கிடந்த இவ்வங்கி கணக்குகளில் 64,000 கோடி ருபாய் அளவிற்கு பணம் கொட்டப்பட்டிருப்பதை அரசே ஒப்புக் கொண்டுள்ளது. 2.5 லட்சம் ருபாய்க்கும் அதிகமாக உள்ள வங்கிக் கணக்குகள் கண்காணிக்கப்படும் எனச் சவடால் அடித்தது மோடி அரசு. கருப்புப் பணக் கும்பலோ தமது பணத்தை 2 இலட்சம் ருபாய்களாகப் பிரித்து ஜன்தன் திட்ட வங்கிக் கணக்குகளில் செலுத்தி, மோடியின் முகத்தில் கரியைப் பூசியது. குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத கதையாக, அந்தக் கணக்குகளில் செலுத்தப்பட்ட தொகையை மாதம் பத்தாயிரத்துக்கு மேல் எடுக்க அனுமதிக்க மாட்டோம் என அறிவிக்கிறார், மோடி.

இவையெல்லாவற்றையும் விட, கருப்புப் பணத்தின் காவலர்களான ஆடிட்டர்கள், மிகத் தந்திரமான முறையில் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டே கருப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றி, மோடிக்கு பெப்பே காட்டிவருகின்றனர். புதிதாக நிறுவனங்கள் தொடங்குவது அல்லது ஏற்கெனவே நட்டமடைந்து திவாலான பழைய நிறுவனங்களைத் தூசி தட்டி திரும்ப எழுப்பி, அவற்றிற்கு மாநிலம் முழுவதும் கிளைகளைத் தொடங்கி, ஒவ்வொரு கிளைக்கும் ஊழியர்கள், இயக்குநர்கள் என நியமித்து, அவர்களுக்குச் சம்பளம், நிறுவனத்தை நடத்தியதன் மூலம் வந்த வருமானம், ஏற்பட்ட செலவு எனப் புகுந்து விளையாடுகின்றனர்.

இவை மட்டுமன்றி, அடகு வைத்த நகைகளை மீட்பதற்கு, விவசாயக் கடனைக் கட்டுவதற்கு எனப் பல வழிகளில் கருப்புப் பணம் வெள்ளையாக மாற்றப்படுகிறது.

கள்வன் பெரிதா, காப்பான் பெரிதா என்ற இந்தக் கண்ணாமூச்சி ஆட்டத்தில், கைப்புள்ள வடிவேலு கணக்காகச் சட்டை கிழிந்து நிற்கும் மோடி, “நீங்களாகவே வந்து கருப்புப் பணத்தை வங்கிகளில் செலுத்திவிட்டால், அபராதத்தோடு 50 சதவீதம்தான் வரி; நாங்களாகச் சோதனை நடத்திப் பிடித்தால், அபராதத்தோடு சேர்த்து 85 சதவீத பணத்தைப் பறிமுதல் செய்துவிடுவோம்'' என வருமான வரிச் சட்டத்தில் திடீர் திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

இந்தத் திருத்தத்தைக் கருப்புப் பணக் கும்பலுக்கு எதிரான இறுதி எச்சரிக்கையாகப் பிதற்றுகிறார்கள், மோடியின் ஆதரவாளர்கள். ஆனால், உண்மையில் கருப்புப் பணக் கும்பலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இன்னொரு சலுகைதான் இது. வெளிச் சந்தையில் 70 சதவீதம் வரை கமிசன் கொடுத்து கருப்புப் பணத்தை மாற்றியவர்களிடம் 50 சதவீதம் “வரி”யைப் பெற்றுக் கொண்டு அரசே அவர்களின் கருப்புப் பணத்தை வெள்ளையாக்கித் தரும் கேவலமான புரோக்கர் வேலைதான் இந்தத் திருத்தம். 200 சதவீதம் வரை வரி விதிப்போம் என வீராப்பு பேசிய மோடி, 50 சதவீதம்தான் வரி என இறங்கிவந்து கருப்புப் பண பேர்வழிகளிடம் பேரம் நடத்துகிறார். சாதாரண பொதுமக்களின் கைகளில் மை வைத்து அவமானப்படுத்தும் இந்தக் கும்பல், பணம் வந்த வழியைக் கேட்க மாட்டோம் என கருப்புப் பணக் கும்பலிடம் மண்டியிட்டு நிற்கிறது.

மோடியின் இப்பண மதிப்பு நீக்க நடவடிக்கையைப் புனிதப் போராகச் சித்தரிக்கிறது இந்துமத வெறிக் கும்பல். ஆனால், போர் தொடங்கும் முன்பே மோடி குப்புற வீழ்ந்துவிட்டார் என்பதைத்தான் நள்ளிரவு நகைக்கடை வியாபாரம் தொடங்கி வருமான வரிச் சட்டத் திருத்தம் வரையிலான நடப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

• அழகு

# ஃபிடல் காஸ்ட்ரோ :

# அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராளி !

காஸ்ட்ரோவின் பங்களிப்புகள் என்ன, குறைகள் என்ன? கியூபாவை சோசலிச நாடு என்றோ, காஸ்ட்ரோவை கம்யூனிசப் புரட்சியாளர் என்றோ கூறவியலுமா? காஸ்ட்ரோ – சே குவேராவின் பாதையில் மற்ற நாடுகள் புரட்சி செய்ய இயலுமா? அரூபமான சோசலிச அறக்கோட்பாடு, பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டத்துக்கு மாற்றாகுமா?

காஸ்ட்ரோ மறைந்து விட்டார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்ற தேச விடுதலைப் போராளி என்ற முறையில் அவரை நாம் நினைவு கூர்கிறோம். உலக மக்களின் இன்றைய முதன்மை எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அடியோடு வெறுக்கின்ற உலகெங்கிலுமுள்ள ஒடுக்கப்பட்ட நாட்டு மக்கள் காஸ்ட்ரோவின் பால் விசேடமான ஈர்ப்பும் மரியாதையும் கொண்டிருக்கின்றனர். இதனைப் புரிந்து கொள்கின்ற அதே நேரத்தில், காஸ்ட்ரோவின் பாத்திரத்தை அவர் வாழ்ந்த காலத்தின் வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து விளங்கிக் கொள்வது அவசியம்.

1959-இல் பாடிஸ்டா என்ற அமெரிக்க கைக்கூலி சர்வாதிகாரியின் ஆட்சியைத் தூக்கியெறிந்து அதிகாரத்தைக் கைப்பற்றிய காஸ்ட்ரோவின் தலைமையிலான "ஜூலை-26 இயக்கம்" என்பது நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரைக் கொண்ட ஒரு ஆயுதக்குழு. இது ஒரு விவசாயிகள் இயக்கமோ, தொழிலாளர் இயக்கமோ அல்ல. காஸ்ட்ரோவின் கூற்றுப்படியே "சிறுமுதலாளித்துவ வர்க்கத்துக்குரிய தவறான கருத்துகளும் குறைபாடுகளும் கொண்ட, பாடிஸ்டாவின் சர்வாதிகாரத்தைத் தூக்கி எறிவது என்பதற்கு மேல் தெளிவான கொள்கைகள் எதையும் கொண்டிருக்காத" ஒரு இயக்கமாகவே அது இருந்தது [இத்தாலிய கம்யூனிஸ்டு கட்சி பத்திரிகைக்கு (லா யூனிடா) காஸ்ட்ரோ அளித்த பேட்டி, பிப். 1, 1961.]

கியூபா தேசிய விடுதலைப் புரட்சியின் நாயகன் பிடல் காஸ்ட்ரோ.



இருப்பினும், பாடிஸ்டாவின் ஆட்சிக்கும் அதற்கு துணை நின்ற நிலப்பிரபுக்கள் மற்றும் அமெரிக்க முதலாளிகளுக்கும் எதிராக குமுறிக் கொண்டிருந்த விவசாயிகளும் தொழிலாளர்களும் புரட்சியை ஆதரித்தனர். கியூபா பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்த கரும்புத் தோட்டங்கள், சர்க்கரை ஆலைகள் ஆகிய அனைத்தையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த அமெரிக்க முதலாளிகளின் சொத்துகளை நாட்டுடைமை ஆக்கியதால் ஆத்திரம் கொண்ட அமெரிக்க அரசு, ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது. அமெரிக்காவில் குடியேறிய கியூபாவைச் சேர்ந்த பிற்போக்குவாதிகளைக் கொண்டு படை திரட்டி, ஏப்ரல் 1961-இல் சி.ஐ.ஏ. தொடுத்த இந்தப் போரில் (Bay of Pigs War) கியூபா வென்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான கியூபா மக்களின் தேசிய உணர்வை இது தீவிரப்படுத்தியது.

காலனியாதிக்கத்துக்கும், ஏகாதிபத்திய கைக்கூலி அரசுகளுக்கும் எதிராக உலகம் முழுவதும் தேச விடுதலைப் போராட்டங்கள் தீவிரமடைந்து வந்த இந்த காலத்தில், பிற்போக்கு அரசுகளையும் இராணுவ சர்வாதிகாரங்களையும் ஆதரித்து வந்த அமெரிக்கா, சீனாவுக்கும் ரசியாவுக்கும் எதிரான அணு ஆயுத அச்சுறுத்தல்களையும் தொடங்கியிருந்தது. ரசியாவைக் குறிவைத்து துருக்கியிலும்,

இத்தாலியிலும் அணு ஆயுத ஏவுகணைகளை அமெரிக்கா நிறுவியிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில், அமெரிக்காவை குறிவைத்து, 1962-இல் கியூபாவில் அணு ஆயுத ஏவுகணைகளை நிறுவியது, முதலாளித்துவம் மீட்கப்பட்ட நாடான ரசியா.



தமது தேசியத் தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் கியூபா மக்கள்.

சமூக ஏகாதிபத்தியமாக உருவெடுத்திருந்த சோவியத் யூனியனுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான பனிப் போரின் துவக்கமாக அமைந்த இந்த காலகட்டத்தில், அமெரிக்கத் தாக்குதல் அபாயத்தை நிரந்தரமாக எதிர் நோக்கியிருந்த காஸ்ட்ரோ, ரசிய ஏவுகணைத் தளத்தை, கியூபாவுக்குக் கிடைத்த பெரும் தற்காப்பாகக் கருதினார். கென்னடி - குருசேவுக்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் பதின்மூன்றே நாட்களில் இருதரப்பும் அணு ஆயுதத்தை அகற்றிக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தன. அணு ஆயுத தளத்தை அகற்ற வேண்டாமென்ற காஸ்ட்ரோவின் கோரிக்கையை குருசேவ் பொருட்படுத்தவும் இல்லை; இந்த முடிவு குறித்து காஸ்ட்ரோவுக்குத் தெரிவிக்கவும் இல்லை. அமெரிக்காவுடனான குருசேவின் இந்த சமரசத்தை மாவோ வெளிப்படையாக விமரிசித்தார். கியூபாவைச் சதுரங்கக் காயாக குருசேவ் பயன்படுத்திக் கொண்டதை சீரணிக்க இயலவில்லையென்ற போதிலும், காஸ்ட்ரோ இது குறித்து வெளிப்படையாக விமரிசிக்கவில்லை.

○ ● ○

1960-களின் தொடக்கமான இந்த ஆண்டுகளில் தான், குருசேவ் கும்பல் ரசியாவில் முதலாளித்துவ மீட்சியை அமல்படுத்தத் தொடங்கியிருந்தது. சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் இடையில் சமாதான சகவாழ்வு, ஆயுதப் புரட்சிக்கு பதிலாக அமைதி வழி மாற்றம் என குருசேவ் முன்வைத்த திருத்தல்வாதக் கொள்கைகளை எதிர்த்து, மாவோவின் தலைமையிலான சீன கம்யூனிஸ்டு கட்சி, ரசிய கம்யூனிஸ்டு கட்சியுடன் தீவிரமான கருத்துப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது. கட்சிகளுக்கு இடையில் நடந்து வந்த இந்த விவாதம், அடுத்து வந்த ஆண்டுகளில் வெளிப்படையான கருத்துப் போராட்டமாக மாறியது. சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்தில் பிளவும் ஏற்பட்டது.

உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்த வியத்நாம், கொரிய கம்யூனிஸ்டு கட்சிகள், சீன ரசிய பிளவைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுத்து, நடுநிலை வகித்தன. ஆனால், கியூபா அப்படி நடுநிலைகூட வகிக்கவில்லை. மாறாக, ரசிய ஆதரவு நிலையையே எடுத்தது.

நவம்பர் 1960-இல் சே குவேரா தலைமையிலான கியூபா தூதுக் குழுவினர் மாவோ மற்றும் சூ என் லாயுடன் நடத்திய உரையாடல், லத்தீன் அமெரிக்காவில் மட்டுமின்றி உலகெங்கும் நடக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களின் மீது அக்கறை காட்டுவதாகவே அமைந்திருந்தது. இதற்கு மாறாக, அமைதி வழி மாற்றம் என்ற குருசேவின் நிலையை ஆதரித்து காஸ்ட்ரோ எடுத்த முடிவு, சர்வதேச பாட்டாளி வர்க்க நலனைக் கருத்தில் கொண்டோ, ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலைக்கான பாதை குறித்த அக்கறையிலிருந்தோ எடுக்கப்படவில்லை. மாறாக, அமெரிக்காவின் அச்சுறுத்தலிலிருந்து கியூபாவைத் தற்காத்துக் கொள்வதற்கும், அரசியல், பொருளாதார, ராணுவ ரீதியாக தாக்குப்பிடித்து நிற்பதற்கும் ரசிய சார்பு நிலையே உகந்தது என்ற கோணத்தில் காஸ்ட்ரோ சந்தர்ப்பவாதமாகவே முடிவெடுத்தார். சீனத்துக்கு தொழில்நுட்ப உதவி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் திடீரென்று நிறுத்திய குருசேவ் கும்பல், அந்நாட்டை திடீரென்று நெருக்கடியில் தள்ளிய சூழலிலும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நலனை முன்னிறுத்தி, திருத்தல்வாதத்துக்கு எதிராக மாவோ உறுதியான நிலை எடுத்ததை இங்கே ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

பாடிஸ்டா அரசைத் தூக்கியெறிய தோளோடு தோள் நின்ற போராளிகளுடன் பிடல் காஸ்ட்ரோ. (இப்படம் 1952-இல் இரகசியமாக இயங்கிவந்த தளமொன்றில் எடுக்கப்பட்டது.)



ரசிய ஆதரவு நிலையின் தொடர்ச்சியாக, ரசியாவின் செக்கோஸ்லோவாக்கிய ஆக்கிரமிப்பு, எத்தியோப்பிய தலையீடு முதல் ஆப்கன் ஆக்கிரமிப்பு

வரையிலான சமூக ஏகாதிபத்திய நடவடிக்கைகள் அனைத்தையும் காஸ்ட்ரோ ஆதரித்தார். அமெரிக்காவும் ரசியாவும் மேல்நிலை வல்லரசுகள் என்றும், உலகப் போரின் ஊற்றுக் கண்ணாக ரசிய சமூக ஏகாதிபத்தியம் இருக்கிறது என்றும் வரையறுத்த மாவோவின் மூன்றுலக கோட்பாட்டை (1974) நிராகரித்தது மட்டுமின்றி, கூட்டுச்சேரா இயக்கத்தில் சில மூன்றாம் உலக நாடுகள், “அமெரிக்காவைப் போலவே ரசியாவும் ஏகாதிபத்தியமே” என்று குறிப்பிட்டு விமரிசித்தபோது, அதனை காஸ்ட்ரோ கடுமையாக எதிர்த்தார். “கோமேகான்” (COMECON) என்ற ரசிய சார்பு நாடுகளின் சர்வதேச பொருளாதார கூட்டமைப்பில் அங்கம் வகித்தது மட்டுமின்றி, பனிப்போர் காலத்தில் ரசியா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளிலும் கியூபாவை ஈடுபடுத்தினார்.

> **காஸ்ட்ரோவை தேசிய விடுதலைப் போராளியாகவே கருத முடியும். தேசிய முதலாளித்துவ வர்க்கத்துக்குரிய ஊசலாட்டமும் சமரசமும்தான் காஸ்ட்ரோவின் பிற்கால வாழ்க்கையில் அவரிடம் வெளிப்பட்டன. காஸ்ட்ரோவைக் கம்யூனிசத் தலைவராகக் கொண்டாடுபவர்கள் யாரும், அவர் வகுத்துத் தந்த புரட்சிக்கான பாதை என்ன என்பது குறித்துப் பேசுவதில்லை. “ஃபோக்கோ” என்ற அந்த கொரில்லா குழு நடவடிக்கை, எல்லா நாடுகளிலும் தோல்வியையே தழுவியிருக்கிறது**

இருந்த போதிலும், கியூபாவுக்கும் ரசியாவுக்கும் இடையில் முரண்பாடுகளும் தோன்றாமல் இல்லை. அமெரிக்க கைப்பாவை சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிராக லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெற்ற ஆயுதப் போராட்டங்களை ஆதரித்து காஸ்ட்ரோவும் சே குவேராவும் தெரிவித்த கருத்துகள், “அமைதி வழி மாற்றம்” என்ற குருசேவின் திருத்தல்வாதக் கொள்கைக்கும், அந்த நாடுகளைச் சேர்ந்த போலி கம்யூனிஸ்டுகளின் அரசியல் செயல்பாட்டுக்கும் எதிரானதாக இருந்தது. 1975-இல் அங்கோலாவின் சோவியத் ஆதரவு எம்.பி.எல்.ஏ. படைக்கு எதிராக தென் ஆப்பிரிக்க நிறவெறி அரசு போர் தொடுத்தபோது, ரசியாவின் ஆட்சேபத்தையும் மீறி, ஆயிரக்கணக்கான கியூபா துருப்புகளை அங்கோலாவுக்கு அனுப்பினார் காஸ்ட்ரோ. இதன் விளைவாக தென் ஆப்பிரிக்க நிறவெறி அரசு போரில் முறியடிக்கப்பட்டது. இது தென் ஆப்பிரிக்க கருப்பின மக்களின் ஆதரவை மட்டுமின்றி, கியூபாவிலும் பல வேறு நாடுகளிலும் நிறவெறி அரசுக்கு எதிராக குமுறிக் கொண்டிருந்த கருப்பின மக்களுடைய பேராதரவையும் காஸ்ட்ரோவுக்குப் பெற்றுத் தந்தது. கியூபாவுடனான ரசிய உறவில் இத்தகைய முரண்பாடுகள் இருந்தபோதிலும், பூகோள ரீதியில், அமெரிக்காவுக்கு அருகில், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் கியூபா இருந்த காரணத்தினாலும், காஸ்ட்ரோ பெற்றிருந்த சர்வதேச செல்வாக்கின் காரணமாகவும், ரசிய சமூக ஏகாதிபத்தியம் இவற்றையெல்லம் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

பனிப்போர் காலகட்டத்தில் சர்வதேச அரங்கில் கியூபா மேற்கொண்ட பல நடவடிக்கைகளில், அது ஒரே நேரத்தில் சமூக ஏகாதிபத்தியத்தின் தொங்குசதையாகவும், உணர்வு பூர்வமான அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. அன்றைய சர்வதேச சூழலில், வியத்நாம், இஸ்ரேல், தென் ஆப்பிரிக்கா மற்றும் பல ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் சர்வாதிகாரங்கள் அனைத்துக்கும் அமெரிக்கா ஆதரவளித்து வந்தது. அந்த வகையில் அமெரிக்கா பல நாட்டு மக்களுக்கு எதிரியாக இருந்தது. இத்தகைய சூழலில், அமெரிக்க எதிர்ப்பு போராட்டங்களை ஆதரிப்பது, சாத்தியமான இடங்களில் இராணுவ ஆட்சிக்கவிழ்ப்புகளை நடத்துவது என்ற நடவடிக்கைகள் மூலம் ரசிய சமூக ஏகாதிபத்தியம், மூர்க்கமான முறையில் உலக மேலாதிக்கத்துக்கு முயன்று கொண்டிருந்தது.

கியூபாவைப் பொருத்தவரை, வாயிற்படியில் ஒவ்வொரு கணமும் சி.ஐ.ஏ.வின் சதிவேலைகளை எதிர்கொண்டிருந்த காஸ்ட்ரோவுக்கு, அமெரிக்காவை சாத்தியமான இடங்களிலெல்லாம் பலவீனப்படுத்தவதென்பது, சர்வதேசக் கடமையாக மட்டுமின்றி, கியூபாவின் உடனடி தேசிய நலனுக்கு அவசியமான தேவையாகவும் இருந்தது.

○ ● ○

1980-களின் இறுதி மற்றும் 1990-களின் துவக்கத்தில் நேர்ந்த ரசிய, கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிசங்களின் வீழ்ச்சி, தனியாக அமெரிக்காவை எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடியை காஸ்ட்ரோவுக்கு உண்டாக்கியது. அதுநாள் வரை மாவோவின் சோசலிச சீனத்துக்கு செல்லாத காஸ்ட்ரோ, 1995-இல் முதலாளித்துவம் மீட்கப்பட்ட சீனத்துக்கு சென்றார். சர்வதேச உறவுகளில் வன்முறையைப் பயன்

பிடல் காஸ்ட்ரோவின் தலைமையில் கியூபா மருத்துவத் துறையில் அடைந்துள்ள மாபெரும் பாய்ச்சலின் ஒரு பதிவு.



படுத்தாமல் இருந்ததற்காக கன்பியூசியஸ் சமாதானப் பரிசை சீன அரசு காஸ்ட்ரோவுக்கு வழங்கியது. முன்னர் ரசியாவை முதன்மையான வணிகக் கூட்டாளியாக கொண்டிருந்த கியூபாவுக்கு, இப்போது சீனா முதன்மையான வணிகக் கூட்டாளி ஆகிவிட்டது.

போலி சோசலிச வீழ்ச்சிக்குப் பின்னர், காஸ்ட்ரோ, எல்லா லத்தீன் அமெரிக்க பிற்போக்கு அரசுகளுடனும் நெருக்கமான உறவைப் பேணினார். அந்த அரசுகளுக்கு எதிரான இடதுசாரி கொரில்லாக்களின் போராட்டங்களை எதிர்த்தார். ‘‘கொரில்லாப் போராட்டங்களின் சகாப்தம் முடிவடைந்து விட்டது’’ என்றும், ‘‘மைய நீரோட்ட அரசியல்தான் ஒரே தீர்வு’’ என்றும் பிரகடனம் செய்தார்.



1960-களில் மக்கள் சீனத்திற்குச் சென்ற கியூபா தூதுக் குழுவின் தலைவரான சே குவேரா தோழர் மாவோவுடன்.... (கோப்புப் படம்)

கொலம்பியாவில் அமெரிக்க கைக்கூலியான அதிபர் யூரிப்-இன் சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போராடி வந்த, எஃப்.ஏ.ஆர்.சி. (FARC) போராளிகளையும், சுமார் 20,000 பேரைக்கொண்ட அவர்களது விவசாயிகள் படையையும் விமரிசித்தது மட்டுமின்றி, அவர்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு தேர்தல் பாதைக்கு வரவேண்டும் என்றும் கூறினார். ஏற்கெனவே ஒருமுறை தேர்தல் பாதையை தெரிவு செய்தபோது, நூற்றுக்கணக்கான போராளிகள், சி.ஐ.ஏ. வால் பயிற்றுவிக்கப்பட்ட கொலம்பிய கொலைப் படையினால் கொன்று குவிக்கப்பட்ட அனுபவம் இருந்த போதிலும், இப்படியொரு தற்கொலைப் பாதையை கொலம்பிய போராளிகள் மீது காஸ்ட்ரோ திணிப்பதற்கு காரணம் இருந்தது.

‘‘கொலம்பியாவின் அண்டை நாடான வெனிசூலாவின் சாவேஸ் அரசை கொலம்பியாவின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுவதற்கும், புரட்சிப் படையைக் கலைப்பதன் மூலம் கொலம்பியாவின் சர்வாதிகாரி யூரிப்பின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கும்தான், காஸ்ட்ரோவும் சாவேஸும் கொலம்பிய விவசாயிகள் படையைக் காவு கொடுக்கிறார்கள்’’ என்று 2008-இல் அவர்களைக் குற்றம் சாட்டினார் அமெரிக்க இடதுசாரி ஆய்வறிஞர் ஜேம்ஸ் பெட்ராஸ். அது மட்டுமல்ல, தான் காஸ்ட்ரோவின் தீவிர ஆதரவாளன் என்ற போதிலும், இந்தப் பழியிலிருந்து வரலாறு காஸ்ட்ரோவை ஒருக்காலும் விடுதலை செய்யாது என்றும் சாடியிருக்கிறார் பெட்ராஸ்.

சர்வதேசப் பாட்டாளி வர்க்க உணர்வு என்பதை ஒரு அறம் சார்ந்த விழுமியமாகவும், சேவை மனப்பான்மையாகவும் கொண்டிருந்த காஸ்ட்ரோவின் அரசியல், கியூபாவின் தேசிய நலனை மையப்படுத்தியதாகவும், திருத்தல்வாதத்தின் புதிய வடிவமாகவுமே இருந்தது. இயற்கைப் பேரழிவுகள், கொள்ளை நோய்கள் போன்றவற்றிலிருந்து ஏழை நாடுகளின் மக்களைக் காப்பாற்றுவதற்கு கியூபாவின் மருத்துவர் குழுக்களை பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பியது போன்ற நடவடிக்கைகளை நாம் இந்தக் கண்ணோட்டத்தில்தான் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. 1990-க்குப் பிந்தைய காலத்தில், லத்தீன் அமெரிக்காவின் விடுதலை இறையியலில் தொடங்கி, 21-ஆம் நூற்றாண்டுக்கான சோசலிசம் என்ற பெயரிலான தன்னார்வக்குழு அரசியலையும், அமெரிக்க சார்பு மையவாத அரசியலையும் அவர் ஆதரித்தார்.

○ ● ○

**கா**ஸ்ட்ரோவின் இந்த நிலைப்பாடுகள் பிறழ்வுகள் அல்ல. இவற்றின் வேர்கள் கியூபா புரட்சியின் வரலாற்றிலேயே உள்ளன. கியூபாவின் புரட்சி என்பது ஒரு குறிப்பிட்ட வரலாற்று சூழலில், ரசிய - அமெரிக்க பனிப்போரின் பின்புலத்தில் வெற்றி பெற்றது. காங்கோ, சிலி, கவுதமாலா, நிகராகுவா உள்ளிட்ட பல நாடுகளில் நடைபெற்ற போராட்டங்களுக்கு ரசியாவின் ஆதரவுக் கிடையிலும் இத்தகைய வெற்றி கிட்டவில்லை. அமெரிக்காவின் இடையறாத ஆட்சிக்கவிழ்ப்பு சதிகளையும் எண்ணற்ற கொலை முயற்சிகளையும் மீறி கியூபா தாக்குப்பிடித்து நிற்க முடிந்ததற்கு காஸ்ட்ரோவின் ஆளுமையும், அவருடைய மக்கள் செல்வாக்கும் தனிச்சிறப்பான காரணங்களாக இருந்திருக்கின்றன. ஆனால் இதன் காரணமாகவே கியூபாவை

அதிகார வர்க்க அரசாக இருந்த போதிலும், கியூப அரசின் மக்கள் நலத்திட்டங்கள் அதற்கு ஒரு நற்பெயரை ஈட்டித் தந்திருக்கின்றன. தொழில்மயமாக்கத்தையோ, வளர்ந்த பொருளாதாரத்தையோ கொண்டிராத நிலையிலும், அமெரிக்காவின் தலையீடுகள், தடைகள் போன்றவற்றால் நிரந்தரமாகத் துன்புறுத்தப்பட்ட நிலையிலும், முன்னேறிய நாடுகளால்கூடச் சாதிக்கவியலாத மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றை கியூபா அமல்படுத்தியிருக்கிறது.

சோசலிச நாடென்று அங்கீகரித்துக் கொள்ள வியலாது.



சோவியத் ரசியாவைத் திருத்தல்வாதப் பாதையில் தள்ளிய குருச்சேவுடன் பிடல் காஸ்டிரோ. (கோப்புப் படம்)

வலது, இடது போலி கம்யூனிஸ்டுகளைப் பொருத்தவரை, ரசியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் தம்மைத்தாமே முதலாளித்துவ நாடுகள் என்று பிரகடனம் செய்யும் வரையில், அவற்றை சோசலிச நாடுகள் என்றே கூறி வந்தனர். அவ்வண்ணமே சீனத்தையும், வியத்நாமையும்கூட இன்னமும் சோசலிச நாடுகள் என்று கூறிவருகின்றனர். இன்னொருபுறம், சோசலிசத்துக்கான மார்க்சிய-லெனினிய வரையறைகளை எதிர்ப்பவர்களான புதிய இடதுகளும் மற்றும் இடதுசாரி அறிவுத்துறையினர் என்று அறியப்படுவோரும், ரசிய - சீனத் தோல்விகளுக்குப் பின்னர், ''எதார்த்தத்தில் நிலவும் சோசலிசம்'' (*actually existing socialism*) என்றொரு புதிய வரையறையை - அதாவது இலக்கணமே கிடையாது என்றொரு இலக்கணத்தை - உருவாக்கியிருக்கின்றனர். இவர்கள் மட்டுமின்றி, ''இன்னொரு உலகம் சாத்தியமே'' என்ற உலக சமூக மன்றத்தின் (WSF) முழக்கத்தை முன்வைக்கும் தன்னார்வக் குழுக்களும், பிரேசில், ஈக்வடார், சிலி, வெனிசூலா உள்ளிட்ட நாடுகளின் அரசுகளையும், ''சோசலிசம்'' என்று சித்தரிக்க வசதியாக, ''21-ஆம் நூற்றாண்டு சோசலிசம்'' என்றொரு புதிய சிவப்பு வண்ணத்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

மொத்தத்தில், இவையனைத்தும் உலக முதலாளித்துவத்தின் தாக்குதலை எதிர்கொள்ளவியலாத, அல்லது எதிர்கொள்ள விரும்பாத செயலின்மையின் விளைவுகளே ஆகும். முதலாளித்துவ சீர்திருத்தத்தையே சோசலிசம் என்று கொண்டாடும் அரசியல் கண்ணோட்டமும், சே குவேரா - காஸ்ட்ரோ போன்றோரை நாயகர்களாகக் கொண்டாடி ஆறுதலடையும் வழிபாட்டு மனோபாவமும் இத்தகைய செயலின்மையிலிருந்தே பிறக்கின்றன.

இத்தகையோரைப் பொருத்தவரை மார்க்சியம் என்பது செயலுக்கான வழிகாட்டியாக இல்லை. எனவேதான் காஸ்ட்ரோவைக் கம்யூனிசத் தலைவராக கொண்டாடுபவர்கள் யாரும், அவர் வகுத்துத் தந்த ''புரட்சிக்கான பாதை என்ன'' என்பது குறித்துப் பேசுவதில்லை. காஸ்ட்ரோவால் அமல்படுத்தப்பட்டு, ''புரட்சிக்கான புதிய பாதை'' என்று ரெஜிஸ் டெப்ரே (*Regis Debray*)யால் கொண்டாடப்பட்ட ''ஃபோக்கோ'' (*FOCO*) என்ற கொரில்லா குழு நடவடிக்கை, எல்லா நாடுகளிலும் தோல்வியையே தழுவியிருக்கிறது. பாட்டாளி வர்க்க அரசியலையும் மக்கள் திரள் பாதையையும் நிராகரிக்கின்ற அந்த சாகசவாத வழி, புரட்சியாளர்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி, புரட்சியின் தோல்வியை உத்திரவாதப் படுத்தும் என்கிற காரணத்தினால்தான், தீவிர அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பாளரான சே குவேராவை அமெரிக்க ஏகாதிபத்தியமே தயங்காமல் பிரபலப்படுத்துகிறது.

> பனிப்போர் காலகட்டத்தில் சர்வதேச அரங்கில் கியூபா மேற்கொண்ட பல நடவடிக்கைகளில், அது ஒரே நேரத்தில் சமூக ஏகாதிபத்தியத்தின் தொங்குசதையாகவும், உணர்வுபூர்வமான அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.

கியூபாவின் புரட்சி வெகுமக்கள் பங்கேற்புடன் நடத்தப்படவில்லை என்பது மட்டுமல்ல, ''மார்க்சிய-லெனினியம்தான் தனது வழிகாட்டும் சித்தாந்தம்'' என்று காஸ்ட்ரோ அறிவித்துக் கொண்ட போதிலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அரசியல் உள்ளடக்கமாக கொண்ட, சோவியத்துகளைப் போன்ற அதிகார உறுப்புகள் அங்கே உருவாக்கப்படவில்லை. போலி சோசலிச ரசியாவைப் போன்ற அரசு முதலாளித்துவ, அதிகார வர்க்க ஆட்சியை ஒத்த இன்னொரு வடிவமாகவே அது இருந்தது.

சே குவேரா, காஸ்ட்ரோ ஆகியோரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதும், காந்திய அறத்துடன் ஒப்பிடத்தக்கதுமான, அருபமான 'சோசலிச அறம்', தனது பாதுகாப்புக் கவசத்தின் கருணையில் வாழவேண்டிய நிலையில்தான் கியூபாவின் பாட்டாளி வர்க்கத்தை வைத்திருந்தது. வர்க்கப் போராட்ட நடைமுறையில் பாட்டாளி வர்க்கத்தை ஈடுபடுத்தவோ, அதிகாரம் என்ற ஆயுதத்தை ஏந்தவோ பாட்டாளி வர்க்கத்தை அது பயிற்றுவிக்கவில்லை.

ஆகவே, போலி கம்யூனிஸ்டுகளும் முதலாளித்துவ தாராளவாதிகளும் முன்வைப்பது போல, காஸ்ட்ரோவை ஒரு கம்யூனிசப் புரட்சியாளர் என்றோ, மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோரின் வரிசையில் வைத்துப் போற்றத்தக்க தலைவரென்றோ வரையறுக்கவியலாது. கியூபாவில் அவர் நிகழ்த்திய புரட்சியை பாட்டாளி வர்க்கத் தலைமையிலான சோசலிசப் புரட்சி என்று கருதவும் முடியாது. ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராளியாகவே அவரைக் கருத முடியும். தேசிய முதலாளித்துவ வர்க்கத்துக்குரிய ஊசலாட்டமும் சமரசமும்தான்

காஸ்ட்ரோவின் பிற்கால வாழ்க்கையில் அவரிடம் வெளிப்பட்டன.

“கம்யூனிஸ்டு கட்சியிலும் சோசலிச சமூகத்திலும் முதலாளித்துவத்தை மீட்பதற்கான முயற்சிகள் நடக்கும்” என்ற மாவோவின் கருத்தையும் கலாச்சாரப் புரட்சியின் அவசியத்தையும் காஸ்ட்ரோ ஏற்கவில்லை. “மாவோ தனது தலையால் சாதித்ததை காலால் அழித்துவிட்டார்” என்று 1977-இல் அமெரிக்க நிருபர் பார்பரா வால்டர்ஸுக்கு அளித்த பேட்டியில் கூறினார் காஸ்ட்ரோ. கலாச்சாரப் புரட்சி குறித்த காஸ்ட்ரோவின் இந்த விமரிசனம், அவர் ஃபோகோ கோட்பாட்டின் சித்தாந்த செல்வாக்கிலிருந்து விடுபடாததையும், திருத்தல்வாத அரசியலில் ஊன்றி நின்றதையுமே காட்டுகின்றன.

அதிகார வர்க்க அரசாக இருந்த போதிலும், கியூப அரசின் மக்கள் நலத்திட்டங்கள் அதற்கு ஒரு நற்பெயரை ஈட்டித் தந்திருக்கின்றன. தொழில்மயமாக்கத்தையோ, வளர்ந்த பொருளாதாரத்தையோ கொண்டிராத நிலையிலும், அமெரிக்காவின் தலையீடுகள், தடைகள் போன்றவற்றால் நிரந்தரமாகத் துன்புறுத்தப்பட்ட நிலையிலும், முன்னேறிய நாடுகளால்கூட சாதிக்கவியலாத மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றை கியூபா அமல்படுத்தியிருக்கிறது. ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரையில் தரமான இலவசக் கல்வி, மக்களின் ஆரோக்கியத்தை பேணும் விதத்திலான தரமான மருத்துவம், மருத்துவத்துறை அறிவியல் முன்னேற்றம், கருப்பினத்தவர், கலப்பினத்தவர் உள்ளிட்ட பல்வேறு இன மக்கள் வாழுகின்ற சமூகத்தில் பேணப்படும் சமத்துவப் பண்பாடு என முதலாளித்துவ நாடுகளே அங்கீகரிக்கும் வகையிலான சாதனைகள் பலவற்றை காஸ்ட்ரோவின் தலைமை நிகழ்த்திக் காட்டியிருக்கிறது.

ஆனால் இவற்றையெல்லாம் தாங்கி நிற்பதற்குத் தேவையான தற்சார்பு பொருளாதாரத்தை கியூபா பெற்றிருக்கவில்லை. கரும்பு உற்பத்தி சர்க்கரை ஏற்றுமதி என்பதையே தனது முதுகெலும்பாக கொண்டிருந்த கியூபா, புரட்சிக்குப்பின் அமெரிக்காவுக்குப் பதிலாக ரசியாவுக்கு சர்க்கரையை ஏற்றுமதி செய்தது. சந்தை விலையைக் காட்டிலும் அதிக விலைக்கு சர்க்கரையை வாங்கிக் கொண்டதுடன், எண்ணற்ற உதவிகளையும் ரசியா செய்தது. ரசியாவின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட, காஸ்ட்ரோவின் அரசு சுற்றுலாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பொருளாதாரத்தை மாற்றியமைத்தது. சுற்றுலாத் தொழில்



அங்கோலா தேசிய விடுதலைப் போரில் பங்கேற்ற கியூபாவின் இராணுவ வீரர்கள்.

**சர்வதேசப் பாட்டாளி வர்க்க உணர்வு என்பதை ஒரு அறம் சார்ந்த விழுமியமாகவும், சேவை மனப்பான்மையாகவும் கொண்டிருந்த காஸ்ட்ரோவின் அரசியல், கியூபாவின் தேசிய நலனை மையப்படுத்தியதாகவும், திருத்தல்வாதத்தின் புதிய வடிவமாகவுமே இருந்தது.**

அதற்கேயுரிய பண்பாட்டுச் சீரழிவுகளான இரவு விடுதிகள், போதை மருந்து, விபச்சாரம், ஊழல் ஆகிய அனைத்தையும் கொண்டு வந்ததுடன் சமூக ஏற்றத்தாழ்வையும் அதிகரிக்கச் செய்தது. எண்ணெய் வளமிக்க வெனிசுலாவின் அதிபரான சாவேஸ் கணிசமான அளவுக்கு உதவிய போதிலும் பொருளாதார தற்சார்பை கியூபாவால் எட்ட இயலவில்லை.

தற்போதைய கியூபா அதிபரும் பிடலின் சகோதரருமான ராவுல் காஸ்ட்ரோ, தனிச்சொத்துடைமையை அங்கீகரிக்கும் பல நடவடிக்கைகளை எடுத்திருப்பதுடன், தாராளமயக் கொள்கைகளையும் அமல்படுத்த தொடங்கியிருக்கிறார். அமெரிக்காவுடனான உறவைப் புதுப்பித்திருக்கிறார். கடந்த மார்ச் மாதம் கியூபாவுக்கு ஒபாமா வருகை தந்திருப்பது முக்கியமானதொரு திருப்புமுனையாகும். மூன்று நாட்கள் கியூபாவில் தங்கியிருந்த ஒபாமா, காஸ்ட்ரோவைச் சந்திப்பதையோ, தனது உரைகளில் காஸ்ட்ரோவின் பெயரைக் குறிப்பிடுவதையோ கவனமாகத் தவிர்த்தார். கடந்த அக்டோபர் மாதம் கியூபாவுக்கு எதிரான வணிகத் தடைகளையும் ஒபாமா நீக்கியிருக்கிறார். அமெரிக்கப் பொருட்களும், பண்பாடும் இனி தடையின்றி கியூபாவுக்குள் நுழையும்.

1961-இல் பன்றிகள் வளைகுடாவில் (Bay of Pigs) வீரஞ்செறிந்த கியூப மக்களால் தடுத்து விரட்டப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள், இன்று அதிகார பூர்வமாக கியூபாவுக்குள் நுழைகிறார்கள். காஸ்ட்ரோ விடை பெறுகிறார். ஒபாமாவின் கியூபா விஜயத்தையொட்டி அவருக்கு பகிரங்க மடல் ஒன்றை எழுதியிருந்தார் காஸ்ட்ரோ. அக்கடிதத்தில் கியூபாவின் 55 ஆண்டு காலப் போராட்டத்தை பெருமையுடன் நினைவு கூர்ந்திருக்கும் காஸ்ட்ரோ, “பேரரசு எங்களுக்கு எதையும் வழங்கத் தேவையில்லை” என்று அதில் குறிப்பிடுகிறார்.

துயரம் தோய்ந்த அந்தச் சொற்கள், காயம்பட்ட அவருடைய தன்மான உணர்வையும், தள்ளாத முதுமையிலும் அடங்க மறுக்கும் சுயமரியாதை உணர்வையும், தன்னுடைய உணர்வுடன் ஒன்றாத கியூபாவின் சமூகத்திலிருந்து தனித்து விடப்பட்ட அவரது கையறு நிலையையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றன. இந்தத் துயரம் தனிநபரின் துயரமன்று. கியூபா கடந்து வந்த பாதையை, தயக்கமற்ற விமரிசனப் பார்வையில் பரிசீலிப்பதன் வாயிலாக மட்டுமே இந்தத் துயரிலிருந்து விடுபட முடியும்.

● சூரியன்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



ஐநூறு, ஆயிரம் ரூபாய் நோட்டுக்களைப் பெற்றுக் கொண்டு அம்மனின் "திரு" உருவம் பதித்த தங்க டாலர்களை விற்று கருப்புப் பண பேர்வழிகளை இரட்சித்த சோட்டாணிக்கரை பகவதி அம்மன் கோவில்.

கண்காணிக்குமாறு அரசு கூறவில்லை. மேலும், உண்டியலில் பணம் போடுவது என்பது ஒருவருடைய தனிப்பட்ட மத நம்பிக்கை சார்ந்த விவகாரம் என்பதால் அது ரகசியமானது. அதை நாம் தடுக்க முடியாது'' என்று கூறியிருக்கிறார், ஒரு வருமான வரித்துறை அதிகாரி.

''உண்டியலில் போடப்பட்ட பணம் எவ்வளவு ரூபாயாக இருந்தாலும் அதனை வருமான வரித்துறை கண்காணிக்காது. அவற்றுக்கு சட்டரீதியாகவே விலக்களிக்கப்பட்டிருக்கிறது'' என்கிறார் மத்திய வருவாய்த்துறை செயலர் ஹஸ்முக் அதியா.

1946 மற்றும் 1978-இல் 500, 1000, 10,000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டபோதும், திருப்பதி உண்டியலுக்கு விலக்களிக்கப்பட்டது என்பது இன்னொரு தகவல்.

''கோயிலுக்கு பணமாக மட்டுமல்ல, காசோலையாக கொடுத்தாலும் சரி, தங்கமாக கொடுத்தாலும் சரி, அவை எதுவுமே வருமான வரித்துறையின் கண்காணிப்பின் கீழ் வராது'' என்று சட்டத்தின் நிலையைத் தெளிவுபடுத்துகிறார் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் முன்னாள் இணை நிர்வாக அதிகாரி சீனிவாச ராஜு.

மொத்தத்தில் பகவானின் உண்டியலில் விழுந்த மறுகணமே கருப்பு வெள்ளையாகி விடுகிறது. 500, 1000 நோட்டுகள், அவை எத்தனை கோடியாக இருந்தாலும், ''கோயில் உண்டியலில் விழுந்தவை'' என்று சொல்லி விட்டால், மறுபேச்சு பேசாமல் வங்கிகள் அவற்றை மாற்றித் தந்துவிட வேண்டும் என்பதுதான் சட்டத்தின் நிலை.

நவம்பர் 8-க்குப் பின் பதினைந்தே நாட்களில் 2 கோடி ரூபாய் அளவிற்கு உண்டியல் வசூல் அள்ளிய சென்னை தி.நகர் திருப்பதி தேவஸ்தான கோவில்.




''பணம் கடவுளுக்குத்தானே போகிறது'' என்று பக்தர்கள் எண்ணலாம். பாவக் காசை கடவுள் வாங்கலாமா? சாராயக் கடையில் கூட ''செல்லாத'' ரூபாய் நோட்டு, கோயில் உண்டியலுக்குள் ''செல்லும்'' என்றால், அது அயோக்கியத்தனம் இல்லையா? செல்லாத நோட்டை குப்பைத்தொட்டியில் போடுவதற்குப் பதிலாக கோயில் உண்டியலில் கொண்டு வந்து கொட்டுகிறார்களே, இது கடவுளுக்கே அசிங்கமில்லையா?

''பில் போட்டுத்தான் வியாபாரம் செய்ய வேண்டும்'' என்று வணிகர்களுக்குச் சொல்கிறது அரசு. அர்ச்சகருடைய தட்டில் காசு போடக்கூடாது, வேண்டுமானால் கார்டு ஸ்வைப் செய்யலாம் என்று விதி செய்தால் என்ன நட்டம்? உண்டியலில் பணம் போடுபவன் அடையாள அட்டையைக் காட்ட வேண்டும் என்றோ, வாங்கின பணத்துக்கு கோயில் நிர்வாகம் ரசீது கொடுக்க வேண்டும் என்றோ சட்டமியற்றினால் யாருக்கு நட்டம்?

8-ஆம் தேதியன்று இரவு ஒரு சாராயக்கடையிலோ, நட்சத்திர விடுதியிலோ, விபச்சார விடுதியிலோ செலவழித்திருக்கக் கூடிய 500, 1000 நோட்டுகளை கோயில் உண்டியலில் போட்டு விட்டு, பரலோகத்தில் இடம்பிடிக்க முயற்சிக்கிறான் ஒரு பணக்காரன். கடவுளுக்கு கொடுக்கப்படும் இந்த லஞ்சத்தை மதமும் அரசும் ஏன் அனுமதிக்க வேண்டும்? அடுத்த வேளை கஞ்சிக்கில்லாத ஏழை, செல்லாத நோட்டை மாற்றுவதற்கு வரிசையில் நிற்கும் போது, எல்லாம் வல்ல இறைவனுக்கு எதற்கு செல்லாத நோட்டு?

இந்தக் கேள்விகள் எதற்கும் பக்தர்கள் பதில் சொல்ல முடியாது. பாரதிய ஜனதாக்காரர்கள் பதில் சொல்வார்கள். ''கோயிலையும் மடத்தையும் மட்டும் ஏன் சொல்கிறாய்? சர்ச்சையும் மசூதியையும் ஏன் சொல்லவில்லை?'' என்ற கேள்விதான், நாம் எழுப்பும் பிரச்சினைக்கு அவர்களுடைய பதிலாக இருக்கும். நாம் திருப்பதி உண்டியலை மட்டும் சொல்லவில்லை, வேளாங்கன்னி உண்டியலையும் சேர்த்துத்தான் சொல்கிறோம். கிறித்தவ, இசுலாமிய மத நிறுவனங்கள் அனைத்தையும் சேர்த்துத்தான் சொல்கிறோம்.

நவம்பர் 8-ஆம் தேதிக்குப் பின்னர்தான் கருப்புப் பணம் இங்கே பாய்கிறது என்று நினைக்க வேண்டாம். சுவிஸ் வங்கி என்ற ஒன்று உருவாக்கப்படுவதற்கு முன்னரே, பாரதத்தின் மன்னர்களும் புரோகிதர்களும் உருவாக்கிய சுவிஸ் வங்கிகள்தான் கோயில்கள். திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயில் நிலவறையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 1.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் - இதற்கொரு ஆதாரம்.

ரவிசங்கர், அமிர்தானந்தமாயி, ஜக்கி, ராம்தேவ், பங்காரு அடிகள், நித்தியானந்தா போன்ற கார்ப்பரேட் சாமியார்கள், கர்நாடக மாநிலம் மற்றும் வட இந்தியாவின் சாதிவாரி மடங்கள், காஞ்சி-சிருங்கேரி-பூரி போன்ற பார்ப்பன மடங்கள் மற்றும் தனியார் அறங்காவலர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்கள் போன்றோரின் சொத்து மதிப்பு பல இலட்சம் கோடி ரூபாய்கள்.

எந்த தொழிலதிபர், வணிகர், அரசியல்வாதி அல்லது அதிகாரியின் கருப்புப் பணம் இங்கே புழங்குகிறது என்பதை வருமான வரித்துறை ஆராயாது. அரசியல் சட்டப்பிரிவு 25, 26-இன்படி கடவுள் மட்டுமல்ல, உண்டியலும், அதில் செலுத்தப்படும் காணிக்கையும் கூட மத நம்பிக்கையின் ஒரு பகுதிதான்.

ஹிந்து நம்பிக்கை குறித்த விவகாரங்களில் மோடி அரசு தலையிடுமா என்ன?

● தொரட்டி

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

# கடுகு டப்பா சேமிப்பையும் வழிப்பறி செய்யுது, மோடி அரசு!
# கார்ப்பரேட் முதலாளிகளுக்காக கொள்ளை போகுது, நமது பணம்!

– மோடியின் பண மதிப்பு நீக்க நடவடிக்கைக்கு எதிராக

## தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டங்கள்

**கருப்பு பண முதலைகளின் வங்கிக் கடனோ**
**ரூபாய் 7016 கோடி தள்ளுபடி !**
**உழைக்கும் மக்களின் சேமிப்போ ஜேப்படி !!**

அன்றாட செலவுக்கே அல்லல்படுது மக்கள் கூட்டம் !
கருப்பு பண முதலை BJP ரெட்டி கும்பலோ
650 கோடியில் ஆடம்பர திருமணம் !

**இந்த வக்கிரத்தை**
**இனியும் அனுமதிப்பது அவமானம் !**


சென்னையில் பா.ஜ.க. அலுவலகம் முற்றுகை


கோவையில்...


தருமபுரியில்...

**நாம் போட்ட பணத்தை எடுக்க**
**நமக்கேன் தடை ?**

**வங்கிப் பணத்தை எடுப்போம் !**
**வங்கிக் கணக்கை முடிப்போம் !!**

**நமது சேமிப்புப் பணத்தை**
**கார்ப்பரேட்டுகள் கொள்ளையடிக்க**
**அனுமதியோம்!**


மதுரையில்...


புதுவையில்...